வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது




# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆனி திங்கள் 16-ம் நாள் (30—6—1963) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 8 | இதழ் 5

# குருஷ்சேவ் ஒரு துரோகியாம்!

## இலங்கையில் வெளியான கம்யூனிச பிரசுரத்தின் குற்றச்சாட்டு

### ருஷ்யத் தூதர் பிரதமரிடம் புகார்?

ருஷ்யப் பிரதமர் குருஷ்சேவைத் துரோகி "என்று வர்ணித்து ஒரு புத்தகம் இலங்கையில் வெளியாகியுள்ளதைத் தொடர்ந்து இங்குள்ள ருஷ்ய—சீனத் தூதுவராலயங்களுக்கிடையே ஒரு கெடுபிடிப் போர் உருவாகிவருவதாகத் தெரிகிறது.

'குருஷ்சேவிசம்' என்ற இப்புத்தகத்தினை இங்கிருந்து ருஷ்யாவிற்குக் கடத்துவதற்கு எடுத்த முயற்சியும் விமான நிலையத்தில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது இப்புத்தகம் சீனத் தூதுவராலயத்தின் உதவியுடன் இலங்கையில் வெளியாகியதால், ருஷ்ய தூதுவராலயம் பிரதமரிடம் ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இலங்கையிலுள்ள சீனத் தூதுவராலயத்தின் தூண்டுதலின் பேரில் திருமதி தேஜா குணவர்த்தன வெளியிட்டிருக்கும் 'குருஷேவிசம்' என்ற புத்தகம் இலங்கையிலிருக்கும் ருஷ்ய-சீனத் தூதுவராலயங்களுக்குள் பெரும் புயலையும், அதனால் பெரும் போராட்டத்தையும் உண்டாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் புத்தகத்தில் ருஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் ஒரு துரோகி, மக்களின் விரோதி, எதேச்சாதிகாரி, மக்களைக் கூறுபோட்டு நாட்டைக் குழப்பும் கோழை என்ற வகையில் வர்ணிக்கப்பட்டுள்ளார். கார்ல்

(9-ம் பக்கம் பார்க்க)

## சகல கருமங்களையும் தமிழில் செய்க

### உள்ளூராட்சி மன்றத் தலைவர்கட்கு தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

தனிச் சிங்களச் சட்டம் மூர்க்கத்தனமாக எமது பிரதேசங்களில் திணிக்கப்படும் இவ்வேளையில் அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது எமது தலையாய கடன். தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் மகளும் சிங்களத் திணிப்பை எதிர்த்து நின்றால் மட்டும் போதாது. தமிழ் பேசும் பிரதேசங்களில் நிறுவப்பட்டிருக்கும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும தன் கடனைச் செய்தாக வேண்டும்.

தமிழ் பேசும் பிரதேசங்களில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்கட்கும் தமிழரசுக் கட்சித் தலைமை நிலையத்திலிருந்து தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கை குறிப்பிட்டிருப்பதாவது:— உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்கள் பொதுவாகப் பிரதேசவாரியாக நியமிக்கப்பட்டிருப்பினும் ஒரு சில ஊழியர்கள் அகில இலங்கை ரீதியில் நியமிக்கப்பட்டிருப்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு உள்ளூராட்சி மன்றச் சேவை அதிகார சபை சகல தமிழ் பேசும் ஊழியர்களையும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. இதன் உட்கருத்து, காலப் போக்கில் தமிழ் பேசும் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களையும் சிங்களத்தில் கருமமாற்ற நிர்ப்பந்திப்பதேயன்றி வேறொன்றுமில்லை.

இந்தச் சூழ்ச்சியை நாம் உடனடியாக முறியடிக்க

(9-ம் பக்கம் பார்க்க)

### காரணம் என்ன?

வியட்நாமில் உருவாகியுள்ள மதத்துவேஷ நடவடிக்கைகளை எதிர்த்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றார்களல்லவா? அண்மையில் ஒரு பௌத்த பிக்கு தன்னைத் தானே தீயிட்டுப் பலியிட்டுக் கொண்டார். இந் நிகழ்ச்சியையிட்டு இந்தியப் பிரதமர் பண்டிதர் நேரு அனுதாபம் தெரிவித்ததோடல்லாமல், உலக அபிப்பிராயத்தைத் திரட்டவும் முயல்கிறார்.

1958-ம் வருடம் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரப் போராட்டத்தின் போது பாணந்துறை இந்துக் கோயில் ஒன்றின் குருக்கள் இனவெறியர்களால் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டாரே! இதையிட்டு நேருவுக்குத் தெரியப்படுத்திய போது, அது உள் நாட்டுப் பிரச்சினை என்று ஒதுக்கிவிட்டாரே! இதற்குக் காரணம் என்ன?

### அபராதம்! சிங்களம் சித்தி அடைந்தவருக்கு

சிங்களத் தேர்வுப்பரீட்சைக்குத் தோன்றுபவர்கள் உரிமைப் போரைக் காட்டிக் கொடுப்பதுடன் தங்கள் தலையிலும் மண்ணை அள்ளிக் கொட்டுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த செய்தி தெரிவிக்கிறது. சிங்களத் தேர்வில் தேறிய ஒரு தமிழர் அதைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் மாற்றலாகிச் சென்றாராம். அங்கு சிங்களத்தில் வந்த கடிதம் ஒன்றை அவரால் புரிந்து வேலை செய்ய முடியவில்லை. சிங்களச் சோதனையில் தேறியவர் கடிதத்தைச் சரியாகப் புரிந்து சிங்களத்தில் வேலை செய்யவில்லை என்பதற்காக யாழ்ப்பாண மாவட்ட அதிபர் அவ்வூழியருக்கு ஐந்து ரூபா தண்டனை விதித்தாராம்.

இதேபோன்று யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களத்திற்கு மாற்றலாகிச் சென்றவர் சிங்களக் கடிதத்திற்கு ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டுமென்று கேட்டதற்கு இரண்டு ரூபா தண்டனை விதிக்கப்பட்டதாம்.

## விவேகானந்த சபையாரின் விபரீத முயற்சி

### மந்திரி அழைப்பும் உறுப்பினர் எதிர்ப்பும்

கொழும்பு விவேகானந்த சபை இதுவரை காலமும் செய்திராத ஒன்றை இப்பொழுது செய்திருக்கிறது. சிங்கள ஏகாதிபத்திய அரசின் ஒரு அங்கமான கல்வி அமைச்சர் விவேகானந்த சபைக் கலை விழாவைத் திறந்து வைத்தார். சபையின் உறுப்பினர்கள் பலர் இதை எதிர்த்த பொழுதும் இந்நிகழ்ச்சி நடந்துள்ளது.

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் 27ம் திகதி நடைபெற்ற கலை விழாவை அமைச்சர் திரு. கலுகல்ல திறந்துவைத்தார். அமைச்சர் ஒருவர் கலைவிழாவைத் திறந்து வைக்கவிருக்கிறார் என்ற செய்தியை அறிந்த கொழும்பு வாழ் தமிழ் பேசும் பொது மக்கள் கொதித்தெழுந்தனர். விவே

(9-ம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் இ. த. அ. கட்சிப் பொதுக் கூட்டம்

திரு. வே. அ. கந்தையாவின் திடீர் மரணம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 'ஜூன் 5' மொழி கலாச்சாரத் தினக் கூட்டம், 29-ம் திகதி சனிக்கிழமை மொழி கலாச்சாரதினக் கூட்டமாகவும், அமரர் கந்தையாவின் இரங்கல் கூட்டமாகவும் நடைபெறுகிறது. கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

பன்மொழிப் புலவரின்

# தமிழ்ப் பணி தலைசிறந்தது

# இதை உணரும் நாள் எந்நாளோ?

குள்ளமான உருவம், பருத்த உடல், கறுத்த தோற்றம், எதையும் ஆழ்ந்து ஆராய்கின்ற கூர்மையான பார்வை—பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரின் புறத் தோற்றம் இது.

"அளவுக்கு மீறிய மான உணர்ச்சி, தொண்டுள்ளம், தானும் தன்னைச் சார்ந்து வாழ்பவர்களும் மட்டும் உயரவேண்டும், வளம் பெற்றுவாழவேண்டும்என்ற எண்ணம் துளியும் இல்லாமை; தலைவரையும், தொண்டரையும் செல்வரையும் இல்லாதவரையும் ஒரே விதமாகப் பார்த்துப் போற்றும் பண்பு"—இது அவருடைய அகத்தின் வடிவம் எனலாம்.

நமது தலைமுறையில் நம்மோடு வாழ்ந்து மறைந்த தமிழ் அறிஞர்களில், முதலில் நமக்குத் தெரிபவர் மறைமலை அடிகள். பின்னர் திரு. வி. க. அவர்கள். டாக்டர் சோமசுந்தர பாரதியார், விபுலானந்தர், கணேசையர் போன்றோர் மற்றுஞ் சிலர்.

இந்தப் பரம்பரையின் வரிசையிலே, இன்று நம்மோடு வாழுகின்றவர்கள் ஒரு சிலரே. அந்தச் சிலரில் ஒருவர், முதல்வர், தலைசிறந்தவர் பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்களே.

ஆசிரியர் மறைமலை அடிகளாருக்குப் பின், தனித் தமிழ் இயக்கத்தின் தந்தையாகப் போற்றப்படவேண்டிய அளவு சிறப்பு வாய்ந்தவர், திரு. வி. க. அவர்களுக்குப் பின்னர், பல்துறையறிஞராகப் போற்றப்படவேண்டிய ஆற்றல் வாய்ந்தவர் நம் பன்மொழிப் புலவர் அவர்களே.

பன் மொழிப் புலவரின் தமிழ்ப் பணி பல துறைகளில் விரிந்து பரந்து உள்ளது. பன்மொழியறிவோடு பல்துறையறிவும் உடையவராய் இருப்பதால் அவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி வருகின்றார். நடமாடும் நூல் நிலையம் என்றும் நடமாடா அகராதி என்றும் பாராட்டப்படும் இவர் இன்று சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்து வரும் "ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதிக்கு ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். "எந்த ஆங்கிலச் சொல்லுக்கும் 'பளிச் பளிச்' சென்று சரியான தமிழ்ச் சொல்லை இவரால் சொல்ல முடிகின்றது" என்ற பாராட்டைப் பெற்ற இவருக்கு இதைவிடச் சிறந்த பணி வேறொன்று இருக்க முடியாது. தமிழ் நாட்டில் இத் திறமை உள்ள ஒருவர் இவர் மட்டுமே என்று கூறுவது உயர்வு நவிற்சியல்ல.

24-6-63 பன்மொழிப் புலவர் அப்பாத்துரையின் பிறந்த தினமாகும். அவருடைய தமிழ்ப் பணி குறித்துத் தமிழ் பேசும் மக்கள் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. அவர்களின் அரிய கருத்துக்களை ஈழத்து மக்கள் நேரில் கேட்கும் ஒரு சந்தர்ப்பத்தை தமிழ் மறைக் கழகம் உருவாக்கியது. ஆனால் சிங்கள வெறி பிடித்த ஆட்சிபீடம் தடைக் கல்லாக நின்று விட்டது. என்றாலும் அவர்களின் பேனா நமக்காக எத்தனையோ அரிய செல்வங்களை வழங்கியுள்ளது—இன்னும் வழங்கவிருக்கிறது. அவர் பல்லாண்டு தமிழ்ப் பணி புரிய வேண்டுகிறோம்.

**செ. சற்குருநாதன்**

தமிழ், ஆங்கிலம், வடமொழி, ஹிந்தி ஆகிய மொழிகளில் பட்டம் பெற்றவர். மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகள்; வங்காளி, குசாரத்தி போன்ற வட இந்திய மொழிகள், இலத்தின், கிரிக்கு, ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மேலைத் தேய மொழிகள்—இவைகளில் எல்லாம் நல்ல புலமை உண்டு இவருக்கு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்களத்தையும் கற்க ஆரம்பித்தார் என்றால் மொழிகளைக் கற்க அவருக்கு இருக்கும் ஆர்வத்தை என்னென்பது?

அப்பாத்துரையின் வாழ்க்கை வரலாறு துயர் நிறைந்த ஒரு

(13 ம் பக்கம் பார்க்க)




(ருஷ்ய) தேச பக்தனின் மறுப்புக் கட்டுரையிலுள்ள பலவீனத்தின் ஒரு பகுதியைச் சென்ற வாரம பார்த்தோம். ஆபாசக் கலாநிதிக்காக வரிந்து கட்டிக் கொண்டு வக்காலத்து வாங்கியவர் வழுக்கி விழுந்ததைப் பார்த்தோம். அவருடைய கட்டுரையின் இரண்டாவது பகுதியை இப்போது கவனிப்போமா?

முற்போக்கு எழுத்தாளர்களிடையே காணப்படும் ஊழல்களையும் சின்னத்தனங்களையும் அம்பலப்படுத்தி அவர்களைத் திருத்துவதுதான் எனது நோக்கம் என்றபடியால், எவருடைய பேரையாவது நான் இந்தப் பகுதியில் குறிப்பிடவில்லை. இப்போது அவரே சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். நானும் அவர்களைப் பற்றித் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

(முற்போக்கு) கொம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் 'நன்றி கெட்டவர்கள்' என்று நான் குறிப்பிட்டது இந்த (ரஷ்ய) தேசபக்தனுக்குப் பிடிக்கவில்லை. வந்த ஆத்திரத்தில் ஏதோ எல்லாம் உளறியிருக்கிறார். இரண்டு மூன்று எழுத்தாளர்களின் பெயரைக் குறிப்பிட்டு இவர்களையெல்லாம் 'சுதந்திரன்'தானா உருவாக்கியது? என்று கேட்கிறார்.

சிறுபிள்ளைத்தனமாக அவர் ஆத்திரப்படுகிறார் என்பதற்காக, நான் ஏன் உண்மையை மறைக்க வேண்டும்? நான் எழுதியவற்றைக் குறிப்பிட்டு அவற்றை இப்போதே நிரூபித்து விடுகிறேன்.

(1) "இன்று (முற்போக்கு) கொம்யூனிசியம் பேசுபவர்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது சுதந்திரன்"—எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் இந்நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்ற திட்டத்தை வகுத்து அதைச் செயல்படுத்திய ஒரே ஒரு பத்திரிகை 'சுதந்திரன்'தான். இன்று "(முற்போக்கு)க் கொம்யூனிஸத் தத்துவார்த்தக் கோட்பாடுகளை" விளக்க முயன்று,தாங்களும் தடுமாறி, மக்களையும் குழப்பியடிக்கும் சிவத்தம்பி, கைலாசபதி, இளங்கீரன், முதலியவர்கள் 'சுதந்திரன்' மூலமே மக்களுக்கு அறிமுகமானார்கள். இதை (ரஷ்ய) தேசபக்தன் மறுப்பாரா?

(2) "அவர்களுடைய கதைகளைத் திருத்திப் பிரசுரித்து ஊக்கம் கொடுத்தது சுதந்திரன்"—என். கே. ரகுநாதன், டானியல், டொமினிக் ஜீவா முதலியோரின் கதைகள் இரண்டொரு ஆண்டுகளாக சுதந்திரனில் அடிக்கடி வெளிவந்தன. அப்போதுதான் அவர்கள் கதைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பத் தொடங்கி இருந்தனர். வேறு எந்தப் பத்திரிகையுமே அவர்களின் கதைகளைப் பிரசுரிக்கவில்லை. 'சுதந்திரன்'தான், அவர்களின் கதைகளைத் திருத்திப் பிரசுரித்தது. சிறுகதைத் தொகுதி ஒன்றுக்கு எழுதிய முன்னுரையில் முற்போக்குக் குழுவைச் சேர்ந்த கந்தசாமியே இதை ஒப்புக் கொள்கிறார்.

இவற்றுள் ஒன்றையாவது (ரஷ்ய) தேசபக்தனால் மறுக்க முடியுமா?

முற்போக்கு எழுத்தாளர்கள், ஏன் ஈழகேசரிப் பொன்னையா நினைவு விழாவிற்குப் போகவில்லை? அது அவர்களின் நன்றிகெட்டத்தனமல்லவா? என்று கேட்டிருந்தேன். வாய் மூடி மௌனியாகி விட்டார் (ரஷ்ய) தேசபக்தன்! மறுக்கத் துணிவு ஏது?

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.




# எப்பொழுது காணபோம் இனி?

—சிவரத்தினம்—

சிந்தைக் கினியமொழி தேன்தமிழே என்றுபல
விந்தைகளைச் செய்துமொழி காத்ததிருக்—
கந்தையாவே
இன்றெமக்குத் துன்பமிக விண்போந்தாய்
எந்தாய்நாம்
என்றுமிதை ஆற்றோம் இனி.

இன்னல் எமதுமொழிக் கேராளம் எய்தவவை
தன்னை யரசவையிற் சாற்றியே—நன்னயமாய்
வாதிட் டுலகறிய வைத்தவுன்றன் நற்றிறனை
ஓதுவோம் என்றும் உவந்து.

ஆழக் குழியதனில் அன்னையாஞ் செந்தமிழை
வீழச் சதிபுரியும் வீணர்களை—ஈழத்தில்
ஓடி ஒழிக்க வழிசெய்த உன்வீரந்
தேடிப் புகழ்வோம் தினம்.

வீரத் தமிழாட்சி வெற்றிபெறு மென்றேவா
யார மொழிந்தவெம தண்ணலே—தீராநீ
இம்மையிலே எம்மினத்துக் காற்றிவிட்ட சேவையினை
மும்மையிலும் நாம்மறவோம் உண்மை.

ஈழத் தமிழ்நா டிளந்தமிழர் தோள்வலியால்
வாழப்பெறுமென்று வாக்கதனிற்—சூளுரைகள்
அப்பொழுதே கூறிவிட்ட, அண்ணலே உன்வதனம்
எப்பொழுது காண்போம் இனி?

# கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

கற்றவ னுயிருப்பின் —என்
கவிதையின் பெற்றியைத் தேர்ந்தி ருப்பான்
சற்றேனும் மாசு காணா—உயர்
"ஷாஹ்நாமா" படையலை ஏற்று வாழ்த்தி
கொற்றவன் மவுலியினை—உடன்
கொடுத்திட மாட்டானா? ஆனா லவன்
கற்றோரை வியக்கவைக்கும்—என்
காவியப் புகழினை உணரா னந்தோ?

காவியப் பேற்றினையே—கானா
கஜ்னவிப் பதிமன்னர் சரிதை யினை
நாவினிற் சுவைநிறைக்கும்;—புகழ்
நாட்டிடுங் கவிதையாற் கலைப டைத்தேன்
பாவாலே நான்புனைந்த—உயர்
படைப்பினை உணராத மன்னர் மஹ்மூத்
கூவிட்டார் என்றனுக்கு—தண்டனை
கொடுப்பதாய்! இவர்தானா நீதி காப்போன்?

பாரஸீகக் கவியுலகை கலைப்
பாவாலே அணிசெயுந் திடனா லுந்தி
பூரண ஷாஹ்நாமா—நான்
புனைந்திட்டேன்; கலைப் புகழ் பேறுடைய
பாரஸீக இலக்கியத்தில்—புதுப்
பாமலர் சூடினேன்; அதன் பெருமை
ஓர்ந்திடுந் திறனிழந்தார்—மஹ்மூத்
உரைத்தபொன் பரிசிய மறுத்து விட்டான்.

(தொடரும்)




ஜே. வைத்திலிங்கம்,
கட்டுக்காஸ் தோட்டை.

கே: உலகில் சிறந்த வழக்கறிஞர் யார்?

ப: இல்லாளின் சங்கடமான குறுக்குக் கேள்விகளுக்குத் தக்க பதிலளிக்கக் கூடியவர்.

ஃ

ஞானசௌந்தரி
தேவப்பிரகாசம், கொழும்பு-12.

கே: எனக்கு வரும் அரசாங்கக் கடிதங்களை வாசிக்க நான் இன்னொருவரை நாட வேண்டியிருக்கிறது. இனிமேல், எனது கடிதத்தை நானே புரிந்து கொள்ள நான் இன்றே சிங்களம் படிக்கத் தீர்மானித்து விட்டேன். நீர் என்ன கூறுகிறீர்?

ப: நேர்வழியை விட்டுக் கோணல் வழியில் செல்கிறீர் என்கிறேன். உங்களுக்கு அனுப்பும் கடிதங்களைத் தமிழிலேயே எழுதியனுப்பும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதே நேர்வழி! எளிதாயிருப்பினும் துரோகப் பாதை வேண்டாம்.

ஃ

மு. வாமதேவன்,
பருத்தித்துறை.

கே: குயுக்தியாரே, மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய விருந்த மந்திரி திரு. சி. பி டி. சில்வா தமிழரசுக் கட்சியின் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்திற்குப் பயந்து விஜயத்தைரத்துச் செய்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: பயணத்தை ரத்து செய்தல் மட்டுமா செய்தார்? ரோமாபுரிக்கே ஓட்டம் பிடித்து விட்டாரே!

ஃ

மூ. செல்லமலர், அட்டன்.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் என்னை விரும்பினாள். ஆனால் அவளுக்கு முன் ஒரு காதலன் இருந்ததாக அறிந்ததும் அவளை நான் விரும்பவில்லை. காதலை துறக்கும்படி கூறித் துறந்து விட்டேன். அது பாவமா? யார் மேல் பாவம்? குற்றமல்ல என்று நான் நினைக்கிறேன்—என் நண்பர்கள் பாவம் என்கிறார்கள். தங்களின் பதில்?

ப: அவளின் முன்னாள் காதலன் அவளைக் காதலிக்க முன்பு மற்றொரு பெண்ணைக் காதலித்தான் என்பதை அறிந்ததால் அவனுடைய காதலை அவள் துறந்தால், நீர் செய்தது தவறு.

ஃ

க. ச. க. பிள்ளை, கொழும்பு-6

1958ல் ஐயர் ஒருவர் பெற்ரோல் ஊற்றி அக்கினியில் இடப்பட்டார், பெண்கள் கற்பழிக்கப் பட்டனர், குழந்தைகள் கொல்லப்பட்டனர், கடைகள் விடுகள் சூறையாடப்பட்டன, கொளுத்தப்பட்டன. அன்று அமைதியாக இருந்தவர்கள் இன்று தென் வியட்நாமில் யாரோ தற்கொலை செய்ததற்காக இங்கே ஆவேசத்துடன் துடிப்பதின் மர்மம் என்ன?

> **திருவாளர்**
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: தென் வியட்நாம் அடக்கு முறையை யார் மிக தீவிரமாகக் கண்டிக்கிறார்களோ, அவர்களுக்கு இலங்கை பௌத்தர்களின் ஆதரவும் வோட்டும் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதே அந்த மர்மம்.

ஃ

வி. பிரான்சிஸ், மன்னார்.

கே. எனது உறவினர் ஒருவர் குடிப்பது மட்டுமல்லாமல் என்னைத் தூற்றிக் கொண்டும் திரிகிறார். இவருக்கு என்ன செய்யலாம்?

ப: அவர் தூற்றுவதை ஒரு 'டேப் ரெக்கோட'ரில் ஒலிப்பதிவு செய்து அவருக்கு மது மயக்கம் தீர்ந்த பின்னர் அதனைப் போட்டுக் காட்டுங்கள்!

ஃ

எஸ். செல்வநாதன்,
ஏருவூர். (கி. மா.)

கே: தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தீமையும் செய்ய மாட்டோம் என்று வாக்குறுதி அளிக்கும் அமைச்சர்கள், அவர்களுடைய இலாகாக்களில் சகல வேலைகளையும் சிங்களத்தில் செய்யும்படி கட்டளை இடுவது தீமையில்லையா?

ப: கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகி விட்டது. அமைச்சர்கள் சிங்களத்தை மட்டும் அமுல் நடத்தப் போய் இலாகா வேலைகளே ஸ்தம்பித்து விட்டன. அதனால் தமிழர்களுக்கு மட்டுமின்றி சிங்களவர்களுக்கு மல்லவா தீமை விளைந்துள்ளது?

ஃ

மூ. நவரத்தினம், அட்டன்.

கே: சீதை இராவணனுடைய மகள் என்பது என் கூற்று. தங்களின் கருத்து?

ப: சீதை இலங்கைக்கே வரவில்லை யென்பது என் கூற்று. எனவே அவர் எப்படி இராவணனின் மகளாக முடியும்?

ஃ

தமிழன்பன், கொழும்பு.

கே: தமிழியக்கம் நடக்கும் அதே வேளைகளில், கொழும்பில் உள்ள பஸ்களிலும் இதர சில பகுதிகளிலும் ஓடும் பஸ்களிலும் தமிழில் உள்ள பெயர்ப் பல கைகளைப்பார்க்கும் பொழுது ஒரே ஒரு செந்தமிழ் சொல்லை பலவிதமாகக் கொலை செய்கிறது இ. போ. ச. என்பது தெரிகிறது. உதாரணமாக கொழும்பு என்ற பெயரை கொலம்ப, கொளும்பு என்றும் பாலத்துறை என்ற பெயருக்கு பாலத்துரை யென்றும் கோட்டை என்ற பெயருக்கு கொட்டை, கொடை என்றும் கேகாலை என்ற பெயருக்கு கேகாளே, கேகல்ல, கேகாலி என்றும் போடப்பட்டு வருகிறது. இவைகளை இ. போ. ச. கவனிக்குமா?

ப: தமிழைக் கொலை செய்யும் குற்றத்துக்குத் தூக்குத் தண்டனை இல்லையல்லவா? அதனால்தான் இக்கொலை. இ. போ. ச தமிழே "சிங்களீயத் தமிழ்" தானே! அதெப்படிக் கவனிக்கும்?

ஃ

எஸ். தேவராசன், மாவத்தகம.

கே: இ. தொ. கா. பிரதிநிதிகள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்து தொழில் நுட்பம் பற்றிப் பேசுகிறார்களே தவிர, பிரஜா உரிமை பெற்றுக்கொடுக்கச் செயலில் இறங்கப் பயப்படுகிறார்களே!. ஏன்?

ப: சந்தாப் பணத்தில் வெளிநாடு செல்வது அவர்களுக்கு ஒரு "பாஷன்". பிரஜா உரிமை கோரி செயலில் இறங்கினால் நியமன எம். பி. பதவி என்னாவது?

ஃ

ஆ. கோபாலப்பிள்ளை,
தம்பலகமம்.

கே: தமிழ்த் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக காலனுக்கு இரையாகிக்கொண்டே இருந்தால்......?

ப: வானுலகிலுள்ள பெரிய சேனநாயக்கா, பண்டாரநாயக்கா போன்ற சிங்களத் தலைவர்களின் தமிழ் இன-ஒழிப்புக் கொள்கையை எதிர்த்துப் போராட தமிழ்த் தலைவர்களில் இரண்டொருவர் அங்கேயும் இருக்க வேண்டுமல்லவா?

எம். எம். எகியா,
பெரிய கிண்ணியா.

கே: தற்போதைய உணவு மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எங்கள் அரசாங்கம் இன்னும் 25 வருடங்கள் நிலைத்திருக்கும் என்று கூட்டம் ஒன்றில் கூறியிருக்கின்றாரே! எக்காரணத்தைக் கொண்டு கூறினார் என்பதைத் தங்களால் சொல்ல முடியுமா?

ப: அவர் பேச்சு மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது. 25 வருடம் ஆட்சி செய்ய அவருக்குச் சர்வாதிகாரம் தவிர வேறு என்ன வழியிருக்கிறது? இரு இராணுவ அதிகாரிகள் கொரில்லாப் போர்ப் பயிற்சி பெற யூகோ சென்றிருப்பதும், ஞானசீக தேரோ பிரதமரைப் பேட்டி கண்டிருப்பதும் இக் கருத்துக்கு வலுவூட்டுகின்றன.

ஃ

என். பி. எம். கல்யாணி,
கொழும்பு-1.

கே: தமிழ் நாட்டில் தி. மு. கழகம் நடத்தவிருக்கும் இந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு இதர கட்சிகள் ஆதரவு கொடுக்குமா?

ப: கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் "உயிர்த் தியாகத்திற்குத் தயாராக பத்துபேர் என்னுடன் வந்தால் போதும், போராட்டத்தை வெற்றி பெற்றுக் கொடுப்பேன்" என்கிறார் அறிஞர் அண்ணா.

ஃ

எம். முனுசாமி, கந்தகெதர.

கே: திரு. தொண்டமான் பெரிய பணக்காரர். அவருக்கு 7 தோட்டங்கள் இருக்கின்றன. அவர் ஏன் தொழிலாளியிடம் சந்தாப் பணம் வாங்குகிறார்?

ப: அவர் பெரும் பணக்காரர்தான். சொந்தப் பணத்தைக் கொழும்பில் பெரிய பெரிய அப்புக்காத்துமாருக்கும், வெளிநாட்டு சுற்றுப் பிரயாணங்களுக்கும் வாரி இறைக்க முடியுமா? அதற்குத்தான் சந்தாப் பணம்.

ஃ

சி. மனோகரன், பளை.

கே: குயுக்தியாரே, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் தோம்பேத்தொகுதியில் அவர் அழைத்தும் கூட இதுவரை தமிழரின் பிரச்சினை பற்றி ஒரு தமிழ்த் தலைவராவது பிரச்சாரம் செய்ய முன்வரவில்லை என்று கூறியிருந்தாராம், உண்மைதானா?

ப: அவர் தமது தொகுதியில் தமிழர்—எதிர்ப்புப் பிரசாரம் செய்யாமலிருந்தாலே போதுமானது. வேறு தமிழ்த் தலைவர்கள் சென்று பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமே ஏற்படாது.

# மறவர் குலம்

—கவிஞர் கா. சி. ஆனந்தன்—

மறவர் படைதான் தமிழ்ப்படை!—குல
மானம் ஒன்றுதான் அடிப்படை!
வெறி கொள் தமிழர் புலிப்படை!—அவர்
வெல்வார் என்பது வெளிப்படை!

புதிதோ? அன்று! போர்க்களம்!—வரும்
புல்லர் போவார் சாக்களம்!
பதறிப் போகும் சிங்களம்!—கவி
பாடி முடிப்பான் மங்களம்!

சிரிக்கும் உள்ளம் போர் கண்டு!—தமிழ்ச்
சேய்க்கும் சண்டை கற்கண்டு!
'துரத்து! தமிழைப் போய் முண்டு!'—எனத்
துள்ளும் நாக்கு இரு துண்டு!

தமிழன் பண்பில் உருப்படி!—அவன்
தலையும் சாய்ப்பான் அறப்படி!
அமையுந் தன்மை முதற்படி!—பிறர்
அடக்க வந்தால் செருப்படி!

'வீரம்! வீரம்!' என்றாடு!—நீ
வேங்கை! மாற்றான் வெள்ளாடு!
சீறும் பாம்பை வென்றாடு!—கண்
சிவந்த நிலையில் தள்ளாடு!

('உயிர் தமிழிற்கு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

# நாம் - தமிழர் இயக்கம்

156, சாலி சான் வீதி, சென்னை-14.

தலைவர்
சி. பா. ஆதித்தனார்

தலைமை நிலையம், தமிழர் இல்லம்
தேதி.....19.6...1963.

## வெறித்தனமான செயல்

வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. இலங்கைத் தமிழர்களின் தலைவர்களில் ஒருவரான திரு. வே. அ. கந்தையா அவர்களின் திடீர் மறைவு அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. இதற்கு முன்பு திரு. வன்னியசிங்கம் அவர்களும், திரு. ஏகாம்பரம் அவர்களும் இதே விதமாக மாரடைப்பினால் திடீரென மறைந்ததையும் எண்ணிப் பார்க்கும்போது இலங்கையில் உள்ள தமிழ்த் தலைவர்களை அழிப்பதற்கு சிங்கள அரசாங்கம் இப்படி ஒரு வெறித்தனமான புது வழியைக் கையாள்கின்றதோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது.



தடியடியினால் போராட்ட வேளைகளில் தலைவர்களை முரட்டுத்தனமாகத் தாக்குவதும் அதன் மூலம் அவர்களை எதிர்பாராத வகையில் கொன்று குவிப்பதும் சனநாயக உலகம் வெட்கப்படவேண்டிய ஒரு செயலாகும். சிங்கள அரசாங்கம் தமிழர்களுக்கு இழைக்கும் பெரிய அநீதியின் ஒரு சிறிய எடுத்துக்காட்டாக திரு. வே. அ. கந்தையா அவர்களின் மறைவைக் குறிப்பிடலாம்.

தமிழர்களுக்கென ஒரு தனி நாடும் கொடியும் இருந்தால் இதுபோன்ற துயர நிலை தமிழர்களுக்கு உலகத்தில் எந்த மூலையிலாவது ஏற்படுமா என்பதை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தங்கள் வழிகாட்டிகளில் ஒருவரை இழந்து தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தின் சார்பாகவும், நாம்-தமிழர் இயக்கத்தின் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,
சி. பா. ஆதித்தனார்

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

அமரர் கந்தையாவின்

# இலட்சிய ஈடேற்றத்துக்குழைப்பது தமிழ் பேசும் மக்களின் கடன்

## கொழும்பில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பண்டிதர் இரத்தினம்

அமரர் கந்தையா எந்த இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தாரோ, அந்த இலட்சியத்தின் வெற்றிக்காகத் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் அயராது உழைக்க வேண்டும். அதுவே நாம் மறைந்த தலைவருக்குச் செய்யும் மரியாதையாகும்.

இவ்வாறு கடந்த 23ம் திகதி பிற்பகல் கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் கொழும்புக் கிளை ஆதரவில் நடைபெற்ற அமரர் கந்தையாவின் அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அமரர் கந்தையா தமிழ் பேசும் மக்களின் அரசியல் உயர்வுக்காக மட்டும் உழைக்கவில்லை, தமிழ் மொழியையும் இந்து சமயத்தையும் வளர்க்க அயராது உழைத்தார்.

### வீர மரணம்

திரு. கந்தையா தீவுப் பகுதி மக்களின் பிரதிநிதியாக இருந்த போதிலும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்காகவே உழைத்தார். தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக அயராது உழைக்கும் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கிய இவர், உரிமைப் போரிலேயே உயிர் துறந்தார். இத்தகைய வீர மரணம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியது அல்ல.

நமது விடுதலைப் பாதையில் பல தொண்டர்களையும் முப்பெரும் தலைவர்களையும் இற்றைவரை இழந்து விட்டோம். இன்னும் எத்தனை ஆயிரம் உயிர்களை நாம் இழக்க வேண்டுமோ தெரியவில்லை.

மறைந்த தலைவர்களுக்கு நாம் மரியாதை செலுத்துகிறோம் என்றால் கூடிக் கலைந்து விடுவதுடன் முடிந்து விடுவதல்ல. அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதே அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். இதை யாரும் மறந்துவிடக் கூடாது.

### கடமையை மறக்கவில்லை

திரு. பொன். தியாகராசன் தனது வரவேற்புரையில் கூறியதாவது: திரு. கந்தையா தீவுப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காகச் செய்த சேவைகள் அளப்பரியன. அவர் தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் பிரதிநிதியாக இருந்தபோதிலும் தனது தொகுதியையும் மறந்துவிடவில்லை.

சட்டக் கல்லூரி மாணவர் திரு. இ. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது: மறைந்த தலைவர்களின் சிறந்த அறிவுரைகளை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ முயல்வோமாக.

### தனியிடமுண்டு

அன்பர் பூபதிதாசர் பேசுகையில் கூறயதாவது: விடுதலை வீரர்களுக்கு மக்கள் மனதில் என்றுமே நீங்காத இடம் உண்டு. எனவே திரு கந்தையா இன விடுதலையின் போராட்டக் கட்டத்திலேயே உயிர் நீத்தார். எனவே அவருக்குத் தமிழ் பேசும்மக்களின் இதயங்களில் என்றும் தனியிடமுண்டு.

### முஸ்லிம்கள் பிரச்சினையை உணர்ந்த தலைவர்

ஜனாப் ஏ. எஸ். ஏ. கபூர் பேசுகையில் கூறியதாவது: அமரர் கந்தையா முஸ்லிம்களின் பிரச்சினைகளைச் சிறப்பாகத் தெரிந்திருந்தார். முஸ்லிம்களின் மனப்போக்கு எத்தகையது என்பதை நன்கு தெரிந்த தலைவர்களில் இவரும் ஒருவர்.

வித்துவான் சி. சி. சோதிநாதன் பேசுகையில் கூறியதாவது: அமரர் கந்தையாவின் தொண்டு பல வழிகளில் கிளைவிட்டிருந்தது. அரசியல் பணி, சமயப் பணி, சமூகப் பணி, தமிழ்ப் பணி எனப் பல வகையுண்டு. அவர் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழுந் தகைமை பெற்ற பெரியார்.

### முன்னோடி

திரு இளஞ்செழியன் பேசுகையில் கூறியதாவது: தியாகம் செய்தால்தான் சுதந்திரம் உண்டு. அதைச் சுதந்திரம் பெற்ற நாட்டு வரலாறுகள் நமக்குக் காட்டுகின்றன. திரு. சந்தையா அவர்கள் அவ்வழிக்கு முன்மாதிரி காட்டிய முன்னோடிகளில் ஒருவராவர்.

### இந்நிலை மாறவேண்டும்

ஜனாப் செ. மே. மசூர் மௌலானா பேசுகையில் கூறியதாவது: தமிழ் பேசும் மக்களின் உயர்வுக்காக உழைத்த உத்தமர்களின் முதல் வரிசையில் அமரர் கந்தையா நிறுத்தப்படுகிறார். தமிழ் பேசும் மக்களின்

(13-ம் பக்கம் பார்க்க)

---

G. KUCHELAR — RIPON BUILDINGS, MADRAS. 3

17.6.63.

## தொண்டினைத் தொடர்க....

ஈழத் தமிழ் மக்களுக்கு ஒப்புயர்வற்ற தலைவராகவும், வழி காட்டியாகவும் விளங்கிய கந்தையா அவர்களின் சேவை போற்றற் பாலது. அன்னார் ஈழத் தமிழ் மக்களின் துயர் துடைக்க நல்ல பல தொண்டினைச் சீரிய முறையில் யாவரும் பாராட்டும் வண்ணம் ஆற்றினார்.

மக்களின் நலனுக்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் தியாகம் செய்த திரு. கந்தையா அவர்களை இழந்து நிற்கும் ஈழத தமிழ் மக்கள் மீண்டும் தென்புடன் நிமிர்ந்து நின்று அன்னார் ஆற்றிய தொண்டினைத் தொடர்ந்து ஆற்றவேண்டும் என்பதே என் அவா; தமிழ் நாட்டு மக்களின் அவாவும்கூட. இதுவே மறைந்த மாவீரருக்கு நாம் செய்யும் கடமையாகும்.

திரு. கந்தையா அவர்களை இழந்து தவிக்கும் ஈழத்து மக்களுக்கு என் சார்பிலும், சென்னை மக்கள் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
கோ. குசேலர்
(சென்னை நகரசபை முதல்வர்)

---

## கந்தையாவின் மறைவு பெரிதும் பாதிக்கிறது

—ஜனாப் முகம்மதலி

"தமிழ் பேசும் மக்களுக்கு இது ஒரு பெரிய சோதனை காலமாகும். இந்த இக்கட்டான வேளையில், இன விடுதலைப் பணியில் உறுதுணையாக, தமிழரசுக் கட்சிப் போராட்டங்களில் இருந்தவர் திரு. கந்தையா. கட்சியின் முக்கியத்துவம் வாய்ந்த தூணாக இருந்தவர். அவருடைய மறைவு இத்தறுவாயில் எமது கட்சியை மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களையுமே பெரிதும் பாதிக்கிறது". இவ்வாறு: மூதூர் முதலாவது உறுப்பினர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி மூதூர் மக்கள் சார்பாக அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடுகிறார்.

அச் செய்தியில் ஜனாப் முகம்மதலி மேலும் கூறுவதாவது: "தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க தமிழரசுக் கட்சி தொடுக்கும் போராட்டங்களில் முன்னின்று உழைக்கும் மூதறிவாளர்கள் பலரை அகாலமாகப் பறிகொடுக்க வேண்டியிருக்கிறது. அறிவும், ஆற்றலும் மிக்கவர்களை தொடர்ந்து பறிகொடுத்து வருவது தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் இனத்துக்கே பெரிய பேரிழப்பாகும். திரு. கந்தையா போன்ற ஆற்றலுள்ளவர்கள், திறமைசாலிகள், கிடைப்பது கடினம். இனத்துக்காகப் போராடி மடிந்துவிட்ட அவர் என்றும் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றிருப்பார் என்பது உறுதி.

"திரு. கந்தையா மறைந்துவிட்டார். அவர் மறைவை நினைத்து மனம் வருந்தி சும்மா இருந்துவிடலாகாது. அவர் எதற்காக உழைத்தாரோ, எந்நோக்கத்துக்காக உயிர் துறந்தாரோ, அந்த எண்ணம், அந்த நோக்கம் ஈடேற உழைப்பதே அப்பெரியாருக்கு தமிழ் பேசும் மக்கள் செலுத்தும் நன்றிக் கடனாகும்."

---

## மக்கள் குரல்

### காப்புறுதிக் கூட்டு கண்டியரின் வீடு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இத்தாபனத்துக்கு தமிழ் பேசும் மக்களிடம் பெரும் மதிப்பு ஏற்பட்டு வருகிறது. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பெருவாரியான தமிழ் பேசும் மக்கள் தங்கள் ஆதரவை நல்கி வருகின்றனர். பல லட்ச ரூபாய்களை முடக்கியுள்ளனர். ஆனால் தமிழ் பேசும் மக்களின் மொழிக்குரிய ஓரளவு மதிப்பையும் இக் காப்புறுதித் தாபனம் அளிக்க மறுக்கிறது.

தமிழில் பத்திரங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டால் அதற்குப் போதுமான கவனம் கொடுபடுவதில்லை. தமிழில் பத்திரங்கள் நிரப்பி, தமிழில் ஒப்பமிட்டு அனுப்பி வைத்தாலும், தமிழில் பதில் அனுப்பப்படுவதாயில்லை. கொழும்புத் தலைமை நிலையத்தில் தமிழ் தட்டச்சு இயந்திரத்தில் வேலைபார்க்க ஒருவர் நியமிக்கப்பட்டார். இந்நிலையத்துக்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த தமிழ் தட்டச்சு இயந்திரத்தை யாழ்ப்பாணக் கிளை நிலையத்துக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அங்கு அதை இயக்க ஆளில்லாததனால், அது ஒரு மூலையில் துருப்பிடித்துத் தூங்குகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள காப்புறுதிக் கிளைக் காரியாலயம் ஏராளமான பணத்தை முடக்கியிருக்கிறது. பெரும்பாலும் இத் தாபனத்தில் தமிழ் பேசும் மக்களின் பங்குப் பணமே அதிகமாயிருந்தும், இந்நிலையம் தமிழில் கருமமாற்றவோ பொது மக்களிடம் தமிழில் உறவு கொள்ளவோ முயலுவதாகவில்லை. நிலைய நிர்வாகி ஒரு தமிழராயிருந்தும், தமிழில் செயலாற்ற வக்கற்றவராக விருப்பது மேலதிகாரிகளின் கடைக் கண் பார்வைக்காகவோ என்னவோ. தெரியவில்லை. இதே வேளையில் மட்டக்களப்புப் பகுதியில் இயங்கும் கிளைக் காரியாலயம் ஓரளவு குறைந்த வருமானமுடையதாகவிருந்தும் தமிழில் கடமையாற்றி வருவதாக அறிகிறோம்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் வேலைக்கமர்த்தப் படுவதற்கு விண்ணப்பம் செய்வோருக்கு விசேட யோக்கியதாம்சம் ஒன்று சுணக்கிடப்படுகிறது. கண்டியைச் சார்ந்த பௌத்த சிங்களவருக்கே முதல் மதிப்பு அளிக்கப்படுகிறதாம். குறிப்பாகச் சொல்லப் போனால், தென் மாகாணத்தவரைத் துவேஷிக்கக் கூடிய வகையில் கண்டியர் ஆதிக்கம் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் வளர்ந்தோங்கி வருகிறதாம். திறமைசாலிகள் என்று கணிக்கப்படுபவருக்கும் இடம்கிடைக்காது. இளைஞர்கள் சிலருக்கு அருவருக்கத்தக்க முறை கேடுகளுக்கு இணக்கம் இருந்தால் மட்டும் காலிஸ்தானங்கள் உண்டாக்கப்படுவதாகவும் தெரிகிறது.

க. யோ.
புறக்கோட்டை

---

### இராமாயண பிரசங்கம்

ஆத்ம யோக ஞான சபா இலங்கை கிளையின் சார்பில் 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3-00 மணிக்கு அக்கிரப்பத்தனை, பசுமலை கடை முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பாரத தூதுவரின் முதல் செயலாளர் திரு. பி. என். போஸ் அவர்களின் தலைமையில் பொதுக் கூட்டமொன்று நடைபெறும். பேராசிரியர் எஸ். ஆர் துரைச்சாமி சாஸ்திரி எம். ஏ. அவர்கள், திரு. நா. முத்தையா "ஆத்ம ஜோதி" ஆசிரியர் போன்றோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்துகொள்வதோடு அன்று மாலை பேராசிரியர் துரைச்சாமி அவர்கள் "இராமாயணம்" பற்றியும் பேசுவார்கள்.

---


உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதக கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# காட்டையும் மேட்டையும் கழனியாக்கி மீட்டவர் தமக்கு வாழ்வில்லை

## சிறந்த தலைவரை இழந்தோம்

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும், சிறந்த தமிழறிஞரும், தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், எனது அரிய நண்பரும் ஆகிய திரு. வே. அ. கந்தையா அவர்களின் அகால மரணச் செய்தி என்னைத் திடுக்கிடச் செய்து விட்டது. பெரிதும் வருந்தினேன். அவர்களது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும். என் செய்வது?

ஒரு சிறந்த தலைவரை இழந்து தவிக்கும் ஈழத்துப் பெருமக்களுக்கும், அவர்களின் குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த துயரை அறிவிக்குமாறு வேண்டுகிறேன். அவர்களின் ஆன்மா சாந்தி அடையட்டும்.

திருச்சிராப்பள்ளி-8
14—6—63



தங்களன்பிற்குரிய,
கி. ஆ. பெ. விசுவநாதம்

## "அஹிம்சை வழியிலேயே எமது கழகம் வளரும்"

### எவிங்டன் தோட்டக் கூட்டத்தில் தென்னரசு பேச்சு

"இலங்கைத் தொழிலாளர் கழகம் பலாத்கார வழிகளில் செல்லுதல் ஆகாது. எமது வளர்ச்சி புனிதமான ஒரு வழியாக இருத்தல் வேண்டும். அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டதாகவும் மாற்றார்கள் எமது அரசியல் நேர்மையை ஏற்றுப் போற்றும் முறை கொண்டதாகவும அமைதல் வேண்டும்".

இவ்வாறு இ. தொ. கழகப் பிரமுகரும், நிர்வாக உறுப்பினருமான திரு. தென்னரசு உடபாகை எவிங்டன் தோட்டத்தில் இ. தொ. க. ஆரம்பக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

'இப் பகுதியில் எமது கழக வளர்ச்சி மிக அத்தியாவசியமானது. ஏனெனில் சிங்களவர்கள் கணிசமான எண்ணிக்கையுள்ள பகுதியாயிருப்பதுடன் சிங்களவர் மத்தியிலே தமிழரசுக் கட்சியின் உண்மையான உடனிருந்து வாழும் கொள்கையைத் திரித்து சிங்களவர்களையும், தமிழர்களையும் ஏதோ பகையான மக்களாகக் காட்டி வகுப்புத் துவேஷத்தை மூட்டப் பார்க்கும் சிங்களத் தமிழ் வகுப்புத் துவேஷிகளின் முயற்சிக்கு இது ஓர் ஆப்பாகவும் திகழட்டும். சிங்கள மக்கள் எங்களுடைய தமிழ் உணர்ச்சியையும் உண்மையான மனித உரிமைகளையும் மதிக்கவும் ஏதுவாகும். ஆகவே இப் பகுதியில் கழக வளர்ச்சியைக் கட்டிக் காக்க வேண்டியது அவசியம்.

#### தவருன பிரசாரம்

எமது கட்சியையும், கழகத்தையும் தவருகப் புரிந்துள்ளனர் சில பகுதி மக்கள். எம்மை திரு. பொன்னம்பலத்தின் கட்சியெனத் தவருக பிரசாரம் செய்கின்றனர் சிலர். உண்மையான பிரச்சினைகளை வேறு விதமாகத் திருப்ப எத்தனிக்கின்றனர். பாராளுமன்றத்தில் மலை வாழ் இன மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டபோது இம் மக்களை இந்தியர்கள் எனப் பாகுபாடு காட்டிய திரு. பொன்னம்பலத்தின் அரசியல் போக்குக் கண்டு அரண்ட உண்மையான தொண்டுள்ளம் கொண்டவர்கள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் அணி திரண்டனர். மக்களின் ஆதரவைப் பெற்றனர்.'

இக் கூட்டத்தில் பெருந்தொகையான மாதர்களும் கலந்துகொண்டனர்.

## தொழிலாளருக்கு ஓர் அறிவித்தல்

இலங்கைத் தொழிலாளர் கழகம் இன்னும் அரசாங்கத்தினரால் பதிவு செய்து அங்கீகரிக்கப்படவில்லை என்றும், வெறுமனே ரசீதுகள் கொடுக்கப்படுகிறதென்றும், தொழிலாளர்களின் பிரச்சினைகளையும், தகராறுகளையும் தோட்டத் துரைமார்களுடனும், தொழில் அதிபருடனும், இதர தொழில் அலுவலகங்களுடனும், தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கிறதென்றும், ஆகையால் இ. தொ. கழகத்தில் சேராதீர்கள் என்றும் தொழிலாளர்களின் மத்தியில் காங்கிரஸ்காரர்கள் பொய்ப் பிரசாரங்களைச் செய்து வருகிறார்கள்.

1963ம் வருடம் மார்ச்சு மாதம் 9ந் திகதி (9-3-63) சனிக்கிழமை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கைத் தொழிலாளர் கழகம் (பதிவு எண். 2012) என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே தொழிலாளர்கள் இம்மாதிரியான பொய்ப்பிரசாரங்களில் மயங்காதிருப்பதோடு, ஆங்காங்குள்ள கழகத்தின் கிளைக் காரியாலயங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம். அவர்களின் குறைபாடுகள் உடனுக்குடன் கவனிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ரெ. ம. ராமய்யா,
உப தலைவர், இ.தொ.க.

## அவர் உரிமை பெற்று வாழ இ. தொ. க. வழிகாட்டும்

—சு. கணபதிப்பிள்ளை—

காடாயும் மேடாயும் பயங்கர மிருகங்கள் வாழ்ந்ததுமான மலைப் பிரதேசத்தைப் பொன்விளை பூமியாக்கியவர்கள், மலையக மக்கள். தாம் வளமாக்கிய பூமியில் இருந்தும் இருக்க உரிமையற்றவர்களாகியுள்ளனர். முதலாளிவர்க்கத்தைக் கொழுக்க வைக்க இரத்தத்தை வியர்வையாக மாற்றியவர்கள், இன்று பஞ்சையாக, பராரியாகக் காட்சியளிக்கின்றனர். இவர்கள் தமிழர்களாகப் பிறந்ததின் பலனா இது? தமிழர்களாகப் பிறந்தால் உரிமை தேவையில்லையா? மிருகங்களை விடக் கேவலமானவர்களா?

நிறவெறி பிடித்த தென்னுபிரிக்காவில், தமிழர்கள் கேவலம் கூலிகள் என்று பரிகசிக்கப்படுகின்றனர். ஆனல் மொழிவெறி பிடித்த இலங்கையில் கள்ளத் தோணிகள்! இதுவா மனித தர்மம்?

### சக்தி இருந்தும் போராடவில்லை

மலையகத் தமிழர்கள் சேர, சோழ, பாண்டிய பரம்பரையின் வழி வந்தவர்கள் என்பதை ஆளும் வர்க்கத்தார் அறிந்து கொள்ளவில்லைப் போலும். பண்டைய தமிழர்கள் சரித்திர ஏடுகளைப் புரட்டிப்பார்க்கட்டும் இலங்கையிலே மிகக்கூடிய தொழிலாளர்களான இம் மக்களை வழி நடத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அதிலிருந்து பிரிந்த ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரண்டு இயக்கங்களும் இற்றைவரையில் தொழிலாளர்கள் உரிமை கோரித் திட்டமிட்ட போராட்டம் நடத்திஞர்களா? ஆளும் வர்க்கத்தை ஆட்டிப் படைக்கும் சக்தி இவ்விரு காங்கிரசுக்கு இருந்தும், பாராட்டம் நடத்திஞர்களா? இல்லவே இல்லை, காரணம் சுயநலம். இவர்களால் தொழிலாளர்கள் உரிமை பெற முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் இயங்கும் தொழிற் சங்கம் வேடிக்கையானது. உரிமையைப் பறித்து நடுத் தெருவில் விட்டவர்கள், இவர்கள். இவர்களுக்குத் தமிழ்த் தொழிலாளர்கள் வேடிக்கையான பொருளாக, விளையாட்டுப் பொருளாகத் தென்படுகின்றனர். விளையாடுகிறார்கள், விளையாய் முடிந்தாலும் முடியலாம்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் மறு பிரதியே. தமிழ்த் தொழிலாளர்களின் வயிற்றிலடிப்பதைப் பற்றிச் சிந்திக்க இவர்களுக்கு எங்கே நேரமிருக்கப் போகிறது?

### வெறும் புஷ்வாணங்கள்

பொதுவுடைமைவாதிகளான சமசமாஜிகள், கம்யூனிஸ்டுகள், தொழிலாளர்களுக்கு உரிமை பெற்றுக் கொடுக்க எங்களைவிட வேறு ஒருவருக்கும் தகுதி கிடையாது எனச்சங்கநாதம் செய்வார்கள். ஆனல் செயலில் ஒன்றுமே நடக்காது.

மாஸ்கோவில் குழல் ஊதினல், இங்கு தாளத்துக்கு மேளம் அடிப்பார்கள். இதில் சிறிது மயக்கம் ஏற்படுவதுண்டு. இவர்கள் மலையகத் தொழிலாளர்களுக்காகச் செய்தது என்ன? குடி உரிமை, மொழி உரிமை, நில உரிமை, முதலான மனித உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க என்ன போராட்டம் நடத்திஞர்கள்? சிறு சம்பள உயர்வு கோரி மாசக் கணக்காக வேலை நிறுத்தம் செய்ய முடியுமென்ருல், இம் மக்களின் உரிமை கோரி ஒரு நாள் போராடியதுண்டா?

ஒவ்வொரு இயக்கங்களையும் ஆராயுங்கால், மலையகத் தமிழ் மக்களை வழி நடத்தத் தகுதியுடைய, கழகம் எது என்னும் விஞ எழுகிறது. யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், மலையகத் தமிழர், கீழ்ச் சாதித் தமிழர், மேல்ச் சாதித் தமிழர் என்றெல்லாம் வேற்றுமை பட்டிருந்த தமிழர்களை, நாமெல்லாம் ஒரே இனம் தமிழ் இனம் என்று ஒற்றுமைக்கு வழி கோலி, நம் மொழி உரிமை பறிக்கப்பட்டுவிட்டது, பிரஜா உரிமை பறிக்கப்பட்டு விட்டது, நில உரிமை பறிக்கப்படுகிறது என்றெல்லாம் தூங்கிய, தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, பெரும் போராட்டங்களை நடத்திக் காட்டி, எம்முரிமை கிடை

(13-ம் பக்கம் பார்க்க)




## கிளை அலுவலகங்கள்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இரத்தினபுரிக் கிளையின் அலுவலகம் இரத்தினபுரி, ஆஸ்பத்திரி வீதி 6-ம் இலக்கக் கட்டடத்தில் திறக்கப் பட்டுள்ளது. திரு எம். கந்தையா இரத்தினபுரி மாவட்டப் பிரதிநிதியாகக் கடமையாற்றுகிருர்.

ஃ

வட்டகொடையிலும் இ. தொ. க. கிளை அலுவலகம் செயல் செயல்படுகிறது. வட்டகொடை, பிரதான வீதி 12-ம் இலக்கக் கட்டிடத்தில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. மத்தியக் கழகத்தின் துணைச் செயலாளர் மு. எல்லாளன் வட்டகொடை அலுவலகப் பொறுப்பை ஏற்றுள்ளார். இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் இரத்தினபுரி அலுவலகத்திலும், வட்டகொடை வட்டாரத்திலுள்ள தொழிலாளர்கள் வட்டகொடை அலுவலகத்திலும் தங்களின் குறைபாடுகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# ஆசிய ஆபிரிக்கப் பத்திரிகையாளர் மாநாட்டில் சீனவின் கபடநாடகம்

## ஆசியாவின் தலைவனாக அங்கீகரிக்க சூழ்ச்சி

பத்திரிகைத் துறை சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்காமல் இதர துறைகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதுதான் ஏப்ரல் 24ந் தேதி முதல் மே மாதம் முதல் தேதி வரை ஜாகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய—ஆபிரிக்கப் பத்திரிகையாளர் மாநாடு.

பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகைகளைச்சேர்ந்தவர்களைக் காட்டிலும் இடதுசாரி அரசியல் தலைவர்களும், அவர்களது கையாட்களுமே அதிக எண்ணிக்கையிலிருந்தனர். அதிகாரபூர்வச் செய்தி நிறுவனமான 'அந்தாரா' வின் தலைவர் திரு. ஜாவிடோ, மாநாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அறிவித்து, கடகடவென்று 20 பெயர்களை வாசித்தார். வேறு பெயர்களை முன் மொழிவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் ஆக்கப்பட்டது. இதனைப் பிரதிநிதிகள் ஆட்சேபித்ததும் தம்மால் வாசிக்கப்பட்ட பெயர்கள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதாக மேசையில் ஓங்கிக் குத்தியவாறு அவர் சொன்னர். உடனே மாநாட்டில் சலசலப்பு ஏற்பட்டது. பிரதிநிதிகளின் குழுக்கள் தலைவர்கள் இதனை ஆட்சேபித்து, ஜனநாயகமற்றது என்றனர். அவர்கள் பேசிய போது ஒலிபெருக்கிகள் துண்டிக்கப்பட்டன. ரஷியாவையும் உறுப்பினராக்கப்படவேண்டுமென மங்கோலியத் தூதுக் குழு கோரியது. ஆனல், இது நிராகரிக்கப்பட்டது. மங்கோலியர்கள் பேச முடியாதபடி சீனவும், இந்தோனேஷியாவும் கைதட்டிக் கூச்சல் போட்டன.

அழைக்கப்பட்டிருந்த தென் வியட்னும் பத்திரிகையாளர்கள் மாநாட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆனல் மாஸ்கோவிலிருந்து வந்திருந்த தென்வியட்னும் விடுதலை முன்னணிப் பிரதிநிதிகள் என அழைக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 31ந் தேதி அமையவிருக்கும் மலாயா, சிங்கப்பூர், சரவாக், வட போர்னியோ, புருணை ஆகிய நாடுகளைக் கொண்ட மலேசியா குறித்து விளக்குவதற்கும், அது நவீன காலனித்துவம் எனக் குற்றம் சாட்டப்படுவதை மறுப்பதற்கும் அந்த மாநாட்டிற்கு மலாயா தூதுக்குழு சென்றிருந்தது.

மலேசியாவை அதிகமாய் எதிர்த்த நாடுகள் இந்தோனேஷியாவும், சீனவும். இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சியால் தூண்டப்பெற்று, புருணையில கலகம் செய்து தற்போது ஜாகர்த்தாவில் போர்னியோ புரட்சி சர்க்கார் என்ற பெயரில் இயங்கி வரும் கலகக்காரரா இயக்கம் இந்த மாநாட்டிற்கு 16 பிரதிநிதிகளை அனுப்பியிருந்தது. இவர்களில் ஒருவர் கூட பத்திரிகையாளர் அல்ல. அவர்களின் ஒரே குறிக்கோள் மலேசியாவை உருவாக்கும் மலாயாவைக் கண்டனம் செய்வதே. மலேசியா பற்றிய தர்க்கத்தை மலாயா தூதுக் குழு தவிர்த்ததுடன், புதிய கூட்டரசின் உண்மையான விபரங்களை வெளியிட்டது.

### சுகர்னே ஜனநாயகம்

புரட்சியின் ஆயுதமாகப் பேனவை உபயோகிக்குமாறும், அப்போதுதான் பழைய முறைகளை அகற்றி, புதியனவற்றை உருவாக்க முடியும் எனவும் அதிபர் சுகர்னே மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினர். மாநாடு முடிந்ததும், சர்க்காரின் கொள்கையை ஆதரிக்காத எந்தவொரு இந்தோனேஷியப் பத்திரிகையும் மூடப்படுவதுடன் அதன் ஆசிரியருக்கும், உரிமையாளருக்கும் 50,000 ரூபியாக்கள் அபராதம் விதிக்கப்படுவதுடன், சிறையிலும் அடைக்கப்படுவர் எனவும் அறிவித்தார்.

ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் தலைவன் என்ற உணர்வை உண்டாக்கக் கம்யூனிஸ்ட் சீனப் பத்திரிகையாளர் மாநாட்டை இயன்றவரை பயன்படுத்திக்கொண்டனர். மேலும் கம்யூனிஸ்ட் முகாமில் வெள்ளையர், வெள்ளையரல்லாதவர் என்ற பாகுபாட்டை உண்டாக்கவும் சீன முயன்றது. ரஷியாவை ஜனநாயக வெள்ளையர் நாடுகளுடன் இணைத்து, வெள்ளையர் அல்லாத ஆசிய—ஆபிரிக்க நாடுகளைத் தனக்குச் சாதகமாய்ப் பயன்படுத்த சீன முயன்றது. இத்தகைய சூழ்ச்சி மூலம், புதிய நாடுகளின் ஆதரவைப் பெற்று உலகின் பாதிக்கு மேற்பட்ட நாடுகளின் தலைவனுகிவிடலாம் என்பது சீனவின் பேராசையாகும்.

இவ்விதமாக ஆசிய—ஆபிரிக்கப் பத்திரிகையாளர் மாநாடு உண்மையில் அரசியல் மாநாடாகவே நிகழ்ந்தது.

(ஐ எப்.எஸ்.)


## சென்ற். அந்தனீஸ் இண்டஸ்ட்ரீஸ்

(இலங்கையில் இரும்புச் சாமான் உற்பத்தி தொழில்களில் ஆரம்ப கர்த்தாக்கள்)

**இலங்கையில் தங்கள் சொந்தத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மற்ருேர் உற்பத்தி சாமானை அறிமுகப் படுத்துவதில் பெருமிதமடைகிருர்கள்.**

## கல்வனைஸ்ட் வாளிகள்

கல்வனைஸ்ட் வாளிகள் உற்பத்தி செய்யும் பிரமாண்டமான இயந்திரங்களின் அநுசரணையுடனும் அயல் நாட்டு தொழில் நுட்ப உதவியுடனும் முதன் முதலாக இலங்கையில் இயங்கும் தொழிற்சாலை இதுவே.

பொருளாதார சுபீட்சத்தை நம் நாடு அடைவதற்கு உதவி புரிய உங்கள் சொந்த கைத்தொழிலை ஆதரியுங்கள்.

கீழ்க்கண்ட விலாசதாரர்களிடம் வர்த்தக சம்பந்தமான தகவல்களை விசாரித்தறியுங்கள்.

**சென்ற். அந்தனீஸ் இண்டஸ்ட்ரீஸ்,**
752, பேஸ்லைன் ரோடு,
கொழும்பு-9.


M. G. RAMACHANDRAN

180, LLOYDS ROAD, MADRAS-14.

17-6-63.

## பெருகிவரும் அபாயங்கள்



வணக்கம். ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் தலைவர்களில் ஒருவரான திரு. வே. அ. கந்தையா அவர்கள் திடீரென இயற்கையெய்திய செய்தியைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து பெரிதும் அதிர்ச்சியுற்றேன்.

தமிழினத்தை அழிப்பதற்கான அபாயங்கள் பெருகி வரும் இந்நாளில், இது போன்ற ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு ஒன்று, தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருப்பது கண்டு பெரிதும் வேதனையுற்றேன். பெருந் தலைவரைப் பிரிந்து துயருறும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கட்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள்,
எம். ஜி. இராமச்சந்திரன்

# என்மீது நடவடிக்கை எடுக்கட்டும்!

## பொலீஸ் பகுதிக்கு திரு. அமிர்தலிங்கம் சவால்!

**"தீவுப் பகுதிப் பிரதிநிதி திரு. வே. அ. கந்தையா அவர்களின் மறைவிற்குக் காரணம் பொலீஸ் தாக்குதல்தான் என்பதை நான் பகிரங்கமாகக் கூறுவேன். உண்மையைக் கூறுவதால் என் மீது நடவடிக்கை எடுக்கப்படுமாம். நேர்மைக்கு இந்த நாட்டிலே இடமில்லையா? அப்படியானல் நடவடிக்கை எடுக்கட்டும்."**

இவ்வாறு அல்லைப்பிட்டியில் நடைபெற்ற அமரர் கந்தையாவின் அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர் தமிழ் பேசும் மக்களை எப்படி வேண்டுமானலும் ஆட்டிப் படைக்கலாம் என்று எண்ணுகிருர்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டே திரு. கந்தையா அவர்களின் மரணம்.

திரு. கந்தையா அவர்களைப் பொலீசார் மிருகத்தனமாகத் தாக்கும் பொழுது நான் அருகில் நின்றேன். பொலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதலினல் அன்று



திரு. அ. அமிர்தலிங்கம்

திரு. கந்தையா அவர்கள் தனது சால்வை, மூக்குக் கண்ணுடி, கால் அணி அத்தனையையும் இழந்தார். இத்தனை அலங்கோலமாக...மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார் மக்களின் பிரதிநிதி ஒருவர். இவையனைத்தையும் பார்த்தும் பாராமுகமாக இருக்கிருர்கள் ஆட்சிபீடத்தின் உச்சியில் அமர்ந்திருப்போர்.

உலக நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறு

(13-ம் பக்கம் பார்க்க)

# மன்னர்ப் பொருளாதாரம்

—இ. அ. ஜீவரெட்னம்—

எம் பகுதியில் நிறைந்த தொழில் வசதி உண்டு; உழைப்பில்லாத ஏழைத் தொழிலாளரும் உண்டு. தொழிலார்வத்தை ஊட்டி வசதியை ஏற்படுத்துவது எமது கடமை அல்லவா?

கடற்ருெழிலில்இன்றுகரைவலை முறையில்தான் மீன் பிடிக்கிறேம். எங்களை நோக்கி வரும் மீன்களைத்தான் பிடிக்கிறேம். மீனை நோக்கி நாம் போகக் காணேமே! கற்பிட்டிக்கும் குதிரைமலைக்கும் இடையில் ஓர் 'கடல் வங்கி' இருக்கிறதே, இங்கு வள்ளங்களில் சென்று நாங்கள் மீன் பிடித்தால் என்ன? தென் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான வள்ளங்கள் வந்து மன்னர்க் கடலில் மீன் பிடித்து எம் தொழிலைத் தடுத்து வளத்தை அள்ளிச் செல்கின்றன. நாம் விழிப்பாகவும், உற்சாகமாகவும் இருந்தால் நமது செல்வத்தைப் பாதுகாத்து அவற்றை நாமே அனுபவிக்கலாம்.

• இரணைத் தீவிலிருந்து மன்னர் வரையுள்ள கடலிலிருக்கும் கடலட்டைகளைப் பிடித்துப் பதமாக்கிப் பிற நாட்டுக்கு அனுப்பி எமது உருமானத்தை நாம் ஏன் பெருக்கக் கூடாது?

நாட்டுப் புறங்களிலிருக்கும் குளத்து மீன்களைப் பிடித்து உபயோகிக்கலாம். எருக்கலம்பிட்டியிலும், வங்காலையிலும் இருல் வளர்க்க வசதியுண்டு.

முத்துண்டு, சங்குண்டு, கடல் பன்றியுண்டு, முத்தைத்தான் அரசாங்கம் கட்டுப்படுத்தினலும், மற்றவற்றை ஏராளமாகப் பயன்படுத்தலாமே? பயன்படுத்திப் பிற நாட்டுக்கும் அனுப்பலாமே?

கடல் நடுவில் இருக்கும் எம் மன்னர்த் தீவு மக்கள், கூடிய ஊக்கம் எடுத்தால் பொருள் வளம் பெருகும். நாமும் முன்னேறலாம்.

[மன்னர் இளைஞர் மன்றத்தின் தட்டெழுத்துப் பிரதியான 'மன்னர் முரசில்' இருந்து எடுக்கப்பட்டது.]

# ஊராட்சித் தேர்தலில் பங்குகொள்ள விடுதலை இயக்கம் முடிவு

## அரங்கம் 15

தலைவர் ஏமன் டி வேலராவோடு சிறையிலிருந்து தப்பிய இரண்டு கைதிகளில் ஒருவரான சோண் மக்காரிதான் மேடையில் தோன்றிய பிரமுகர். கூட்டத்திற்கு வந்த பார்வையாளர்களில் ஒருவராக வந்து, கதவுகள் மூடப்பட்டபின் மேடையில் தோன்றிச் சொற்பொழிவு ஆற்றிவிட்டு அவர் இரகசியமாக வெளியேயும் சென்றுவிட்டார். பொலீஸாரால்

செல்லவிருக்கும் எல்லோரும் சுவரொன்றில் ஏறி நிற்கவேண்டும். அவர்களைத் தடுப்பதற்காக எந்தக் காவலாளராவது ஓடிவந்தால் அவரை இடை மறித்துப் பயப்படுத்துவது எஞ்சியிருக்கும் கைதிகளின் கடமை.

குறிப்பிட்ட நேரம் வந்ததும் வெளியில் வந்து நின்ற தொண்டர்கள் சீழ்க்கை

வரை—இன்றும் உலகம் போற்றும் உத்தம வீரனை வரவேற்பதை ஆங்கில ஆட்சியினர் விரும்பவில்லை. அதனால் வரவேற்புக்கள் அனைத்துக்கும் தடைவிதித்தனர்.


'கோமகன்'
'மாமல்லன்'


வீணாக உயிர்களை இழக்க விரும்பாத டி வேலராவும் வரவேற்புக்களை ரத்துச் செய்யும்படி தனது நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார். இரகசியமாக அவரும் அயர் நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அயர் மக்களின் விடுதலையைத் துரிதப்படுத்துவதற்காக இங்கிலாந்திலும் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. அயர் சுயநிர்ணய கழகம் என்பது அதன் பெயர். அது இங்கிலாந்தின் சட்ட வரம்புக்குள் இயங்கியது. இங்கிலாந்திலும் வேல்சிலும் அதன் கிளைகள் திறக்கப்பட்

கிவிக்ஸ் சீமாட்டி, ஜன் மக்னீல், ரொபட் பாற்றன் ஆகியோரே அவர்கள். மைக்கேல் கொளின்ஸ் நிதி அமைச்சரானார். குடியதிபதியின் நியமனங்கள் அனைத்தையும் மன்றம் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டது. பிரான்சிலும் அமெரிக்காவிலும் தூதுவராலயங்கள் திறக்கப்பட்டன. முன்னர் சின்

இந்த விளம்பரத்தைப் பிரசுரித்த பத்திரிகைகள் அனைத்தும் உடனேயே தடைவிதிக்கப்பெற்றன. எனினும் அந்தரங்கமாகப் பத்திரிகைகளைப் பிரசுரிப்பதில் வல்லுநர்களான அயர் வீரர்கள் தமது பிரசாரங்களை இரகசியமாகச் செய்து வந்தனர்.

இந்நேரத்தில் அயர் தொண்டர்கள் துணிச்சலுடன் பல செயல்களைச் செய்து கொண்டு வந்தனர்.

## இராணுவ வீரர்களை மடக்கிய தொண்டர்கள்

அவரைக் கைது செய்ய முடியவில்லை.

மௌன்ற்ஜோய் சிறைச்சாலையில் கைதிகளாக இருந்த அயர் பாராளுமன்ற உறுப்பினர்களான பீஸ்லாய், பாற்றன், விலியம் சியஸ், வோல்ஷ் ஆகிய நால்வரும் அங்கிருந்து தப்பிச் செல்வதெனத் தீர்மானித்தனர். இதற்குரிய வழிகளை ஆராய்ந்து கொளின்ஸுடன் தொடர்பு கொண்டனர்; இரகசியமாகச்சிறையுள் அரமும் கயிறும் எடுப்பித்தனர். முதலில் பாற்றன் மாத்திரம் வெளியில் தப்பிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தனர். அதன்படி பாற்றன் தனது சிற்றறையின் சாளரக் கம்பிகளை மூன்று இரவுகளாகச் சத்தம் கேட்காதபடி மெதுவாக அரத்தால் அறுத்து வைத்தார்; தான் தப்பிச் சென்ற பின் காவலாளர்கள் கதவுத் துவாரங்கள் மூலம் தனது சிற்றறையைப் பார்க்கும் பொழுது தான் படுத்திருப்பது போல் தோன்றுவதற்காக, பழைய துணிகளாலும் கயிற்றினாலும் ஓர் ஆளின் உருவத்தைச் செய்து தனது படுக்கையில் கிடத்தினார்.

முன்னர் செய்த ஏற்பாடுகளின்படி 16-3-1919 இரவு தொண்டர்கள் சிறைக்குப் பின் பக்கமாக வந்து நின்றனர். பாற்றன், தானும் தயார் என்பதை அறிவிக்கும் முகமாக ஒரு சவர்க்காரத் துண்டை அவர்களிடம் வீசினார். உடனேயே தொண்டர்கள் கயிற்று ஏணியொன்றைச் சாளரத்திற்கு வீசினர். அதை பாற்றன் பிடித்துக் கட்டி அதன் மூலம் கவனமாக இறங்கித் தப்பிச் சென்றார்.

ஒரு பக்கத்தில் சிறைக் கைதிகள் ஆட்சியினருக்குச் சங்கடம் விளைத்து வந்தனர். மறு புறத்தில் தொண்டர் படையினர் தமது கை வரிசையைக் காட்ட ஆரம்பித்

யடித்தனர். பன்னிருவரும் சுவரில் ஏறினர். கயிற்று ஏணியொன்று எறியப்பட்டதும் அதன் வழியாக ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டிருந்தனர். இதைத் தற்செயலாகக் கண்ட காவலாளர்கள் சுவரை நோக்கி ஓடி வந்தனர். எஞ்சி நின்ற கைதிகள் குறுக்கே நின்று தங்கள் காற்சட்டைப் பைகளில் கரண்டிகளைச் சுழல் துப்பாக்கிகள் போல் மறைத்து வைத்து அவர்களை

## நாட்டின் விடுதலைக்காக தொழிலாளர் வேலை நிறுத்தம்

பீனின் தூதுவராக அமெரிக்காவுக்குச் சென்ற பட்றிக் மக்காட்டன் அமெரிக்காவில் அயர் குடியரசின் தூதுவராக நியமிக்கப்பட்டார். பிரான்சிலுள்ள தூதுவரை பிரெஞ்சு அரசாங்கம் மதிக்க மறுத்தது. எனினும் அவர் அயர் விடுதலைக்கான பிரசாரத்தைப் பிரெஞ்சு மக்கள் மத்தியில் செய்து வந்தார்.

## அரங்கம் 16

எல்லா விதமான வரிகளை

லிமறிக் மாவட்டத்தில் கைதியாக இருந்த ரொபட் பேண் என்னும் தொண்டர் சுகவீனமுற்றதால் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவரை அங்கிருந்து அபகரித்து வரத் தொண்டர்கள் திட்டமிட்டனர். 6-4-1919ல் மருத்துவமனையை அடைந்த அவர்கள் நேரே பேணிடம் சென்றனர். திகிலடைந்த பொலீஸ்காரர் ஒருவர் பேணை நோக்கிச் சுட்டார். தொண்டர் ஒருவர் அந்தப் பொலீஸ்காரரைச் சுட்டார். பொலீஸ்காரர் உடனேயே விழுந்து மாண்டார். பொலீஸாருக்கும் தொண்டர்களுக்கும் இடையில் பலத்த கைகலப்பு ஏற்பட்டது. பொலீஸ்காரர் நால்வரும் அவர்களுடன் நின்ற சிறைக் காவலாளரும் காயமடைந்தனர். சுடப்பட்டதால் காயப்பட்ட ரொபட் பேண் தொண்டர்களால் கொண்டு செல்லப்பட்டார். எனினும் காயத்தின் காரணமாக பேண் அடுத்த நாள் காலமானார். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து லிமறிக் மாவட்டம் இராணுவப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. தாங்கிகளும் ஆயுதம் பொருத்தப்பட்ட கார்களும் வீதிகளில் வலம் வந்தன. அனுமதிப் பத்திரங்களின்றி எவரும் மாவட்டத்திற்குள் வரவோ மாவட்டத்தை விட்டுச் செல்லவோ முடியவில்லை. இதை எதிர்த்து அயர் தொழிற் கட்சி மாபெரும் வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தியது. அதன் காரணமாகச் சில வாரங்களுக்குப் பின் பிரகடனம் ஆட்சியினரால் மீளப்பெறப்பட்டது.

நாட்டின் நிலையை ஆராய்வதற்காக 8-4-1919ல் சின் பீனின் ஒரு விசேட ஆண்டுக் கூட்டம் மன்சன் இல்லத்தில் நடைபெற்றது. ஏமன் டி வேலரா மீண்டும் தலைவராகத் தெரிவு செய்

## ஆட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பவர்களை சமூகத்திலிருந்து விலக்கிவைக்க முடிவு

முன்னேற விடாது தடுத்தனர்; ஆடாமல் அசையாமல் அந்தந்த இடங்களிலேயே சத்தம் போடாமல் நிற்கும்படி பயமுறுத்தினர். காவலாளர்களும் பயத்தினால் சிலைபோல் நின்றனர். முன்னர் குறிப்பிட்ட பன்னிரண்டு பேரோடு இன்னும் எட்டுப் பேரும் தப்பிச்சென்

டன. அயர் விடுதலைக்காக அவ்வியக்க உறுப்பினர்கள் பணம் திரட்டினர்; பிரசாரக் கூட்டங்களை நடாத்தினர். அயர்நாட்டு மக்களுக்குச் சுய நிர்ணய உரிமையைக் கோரிய அ. சு. கழகம் அயர் நாட்டிலிருந்த சின் பீனுக்கு உறுதுணையாக இருந்தது. அக்கழகம் உரு

யும் பிரித்தானிய அரசாங்கமே வசூலித்து வந்ததினால் குடியரசு அரசாங்கத்திற்குப் பணப் பிரச்சினை எழுந்தது. அயர் மன்றம் 4-4-1919ல் பொது நிதியொன்றைஎழுப்பத் தீர்மானித்தது. அரசாங்கத்தை நடத்துவதற்காக 2,50,000 பவுணைச் சேகரிக்கும் பணி நிதியமைச்சர்




றனர். ஏழு காவலாளர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்த ஏழு கைதிகளே எஞ்சி நின்றனர். இவர்கள் அனைவரும் குறுகிய காலச் சிறைத் தண்டனை பெற்றவர்கள்.

இவ்வாறு தொண்டர்கள் தப்பிச் செல்வது ஆங்கில ஆட்சியினருக்கு மான பங்

வாவதற்குக் காரணமாக இருந்தவர் தலைவர் ஏமன் டி வேலராவேதான்.

அயர் மன்றம் 1-4-1919ல் கூடியபோது தலைவர் டி வேலராவும் மூதன் முறையாகச் சமூகம் கொடுத்திருந்தார். அவர் அயர் மன்றத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அயர் மன்றத்தின் தலைவர் என்றால் பிரதம மந்திரி அல்லது குடியதிபதி என்றுதான் பொருள். ஈஸ்ரர் வாரப் புரட்சியை அடுத்து மரண தண்டனை பெற்ற குடியதிபதி பட்றிக் பியேஸுக்குப் பின்பு குடியதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர் ஏமன் டி வேலராவே.

எட்டு அமைச்சர்களைக் குடியதிபதி டி வேலரா நியமித்தார். மைக்கேல் கொளின்ஸ், கதல் புருகா, ஆதர் கிரிபித், பிளங்கே பிரபு, விலியம் கொஸ்கிராவ், மாக்

மைக்கேல் கொளின்ஸிடம் விடப்பட்டது. அதன்படி அவர் பத்திரிகைகளில் ஒரு விளம்பரத்தைப் பிரசுரித்தார்:—

"அயர்நாட்டின் விடுதலை பற்றி உலகெங்கும் பிரசாரம் செய்வதற்கும் அயர் நாட்டு வியாபாரத்தை

## கைத் துப்பாக்கியும் கரண்டியும்

தனர். டப்ளின் பிரிகேட்டைச் சேர்ந்த தொண்டர்கள் 20-3-1919ல் கொளின்ஸ்ரௌண் விமானத்துறையைத் தாக்கினர்; 75 படைத்துப்பாக்கிகளையும் சனியன்களையும் ஏறத்தாழ 5,000 தடவைக்குரிய ரவைகளையும் கைப்பற்றினர். எதிர்க்க வந்த இராணுவத்தினரை மடக்கி ஆயுதங்களைப் பறித்தெடுத்தனர்.

மௌன்ற்ஜோய் சிறைச்சாலையில் எஞ்சியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் இன்னும் முக்கியமானவர்களாகக் கருதப்பட்ட ஒன்பது கைதிகளும் தப்பிச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தங்களைச் சந்திக்கவரும் வழக்கறிஞர்களை அவர்கள் பயன்படுத்தினர். இதன்படி 29-3-1919 பிற்பகல் 3-00 மணிக்குச் சீழ்க்கைச் சத்தம் ஒன்று கேட்டதும் தப்பிச்

கம் ஏற்படுத்தியது. அத்தோடு 6-3-1919ல் சளிச்சுரம் காரணமாக அயர் மன்றத்தின் உறுப்பினராக பியேஸ் மக்கான் சிறைச்சாலையிலேயே மரணமடைந்ததும் அவர்களைச் சிந்திக்க வைத்தது. இவற்றின் காரணமாக இங்கிலாந்துச் சிறைச்சாலைகளில் எஞ்சியிருந்த அயர் கைதிகள் அனைவரும் விடுதலையானார்கள். இவ்விடுதலையைக் கேள்விப்பட்டதும் இங்கிலாந்தில் தலைமறைவாக இருந்த டி வேலரா பகிரங்கமாக அயர் நாட்டுக்குத் திரும்ப முடிவு செய்தார். அவரை வரவேற்பதற்காக அயர் மக்கள் பல ஏற்பாடுகளைச் செய்தனர். ஆனால் அயர் மக்கள் தமது தவப் பெருந் தலை

### அடுத்த வாரம்

- ★ அமெரிக்காவில் டி வேலரா
- ★ உளவுப் படை
- ★ சமூக விரோதிகள்

## உளவு திணைக் களத்தில் தொண்டர் தலைவர்

வெளிநாடுகளில் விருத்தி செய்வதற்காக அந்நாடுகளில் சார்பாளர் சேவைகளை ஏற்படுத்துவதற்கும் அயர்நாட்டுக் கடற் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்கும் அயர்நாட்டுக் கைத்தொழில்களுக்கு உற்சாகம் அளிப்பதற்கும் தேசிய குடியியல் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கும் நடுவர் சபைகளை நிறுவுவதற்கும் குடிகளில்லாக் காணிகளைப் பயன்படுத்துவதற்காக ஈட்டு வங்கியொன்றை அமைப்பதற்கும் மற்றும் தேசிய நோக்கங்களுக்குமாக, கடனாகச் சேர்க்கப்படும் இந்தப் பொது நிதி பாவிக்கப்படும்."

யப்பட்டார். இரண்டு நாட்களாக நடைபெற்ற மகாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஊராட்சி மன்றத் தேர்தல்களில் குடியரசுத் தத்துவத்தை முன்வைத்துப் போட்டியிடுவதெனவும் ஆங்கில ஆட்சியினரின் கையாட்களான ஆர். ஐ. பொலீஸாரை சமூகத்தின் விரோதிகளாகக் கணித்து அவர்களை நாட்டை விட்டுத் துரத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இனத் துரோகிகளைச் சமூகத்திலிருந்து விலத்தி வைப்பதற்கான சட்டத்தை அயர் மன்றத்தில் நிறைவேற்றுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அயர் மன்றத்தின் பொது அமர்வு ஒன்று 10-4-1919ல் நடைபெற்றது. அக்கூட்டத்திற்காக மைக்கேல் கொளின்ஸ் ஈருருளியில் செல்வதைத் துப்பறியும் பொலீஸார் கண்டு கொண்டனர். முன்னர் தலைவர்கள் எல்லோரும் கைது செய்யப்

(15-ம் பக்கம் பார்க்க)

## மருத்துவ மனையிலிருந்த விடுதலைக் கைதி தொண்டர்களால் அபகரிக்கப்பட்டார்

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூன் மாதம் 30-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# மொழி வெறியரிடம் அரசாங்கம் சரணுகதி

**சிங்கள மொழி வெறிக்கு அரசாங்கம் மீண்டும் அடி பணிந்துவிட்டது.**

சில அரசாங்க இலாகாக்களில் மொழி வெறி பிடித்த சிங்கள சிப்பந்திகள் சிலர் பகிஷ்கார இயக்கம் நடத்தினர். தமிழ், ஆங்கில கடிதங்களைக் கவனிக்க மாட்டோம், சிங்களக் கடிதங்களை மட்டுமே தீண்டுவோம் என்று அடம் பிடித்தனர்.

தபால் நிலைய சேமிப்பு வங்கியில் நிலைமை படு மோசமாகியது. சிங்களச் சிப்பந்திகள் அங்கு வெறியாட்டம் ஆடினர். அலுவலக நேரத்தில் ஆங்கிலத்தில் கடமை புரிய மறுத்தனர். ஆங்கில அலுவல்களைப் பகிஷ்கரித்தனர். அதன் விளைவு வங்கி வேலைகள் ஸ்தம்பித்ததுதான். மக்கள் செலுத்திய பணம் வங்கியில் வரவு வைக்கப்படவில்லை. அவர்கள் அவசரத் தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுக்கவும் முடியவில்லை. பணம் பெறுவதற்காகச் செய்யப்பட்ட மனுக்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. வங்கிக் கணக்குகளில் ஒரே குளறுபடி—வங்கியில் மோசடிகள் நடத்தவும் வாய்ப்புக் கிடைத்தது.

இதனுல் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஏழை மக்களே. காரணம் இது ஓர் ஏழை மக்களின் வங்கியாக இருப்பதுதான்.

கிராமப்புற ஏழை மக்களும், நகரங்களில் வசிக்கும் சாதாரண மக்களும் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் ஒரு சிறு தொகையைச் சேமிப்பதற்கு இந்த வங்கி பெரிதும் வசதியளிக்கிறது. அரை ரூபாயைச் சேமிப்பதற்குக்கூட இதில் வசதியுண்டு. சுமார் 35 லட்சம் பேர் இந்த வங்கியில் பணம் போட்டுள்ளனர். அவர்களில் 90 சத விகிதம் பேர் ஏழைகள்.

அவர்கள் அவசரச் செலவுகளுக்கு இந்த வங்கியிலிருந்துதான் ஒரு சிறு தொகை பெற்றுக்கொள்வர். அதற்காகவே அவர்கள் இதில் சிறுகச்சிறுக சேமிக்கின்றனர். சிங்கள மொழி வெறியர்கள் தமதுபகிஷ்காரத்தால் அந்த மக்களுக்குத் தீங்கு விளைவித்துள்ளனர். ஏழை மக்கள் இனி இந்த வங்கியை நம்பவே முடியாது. சிங்களவர் மட்டுமா இந்த வங்கியில் பணம் போட்டுள்ளனர்? இதர இனத்தவர்களின் பணமும் இதில் பெருவாரியாக இருக்கிறதே! எனவே இந்த வங்கிச் சிப்பந்திகள் சமய, இன, மொழி வேற்றுமையைத் தாம் காட்டாது பணி புரிய வேண்டியவர்களாவர்.

**சிங்களத்தால் மட்டுமே அலுவல்களை நடத்துவோம் என்று அவர்கள் அடம்பிடித்தால் சிங்களவரல்லாதோர் வங்கியில் சேமித்துள்ள பணத்தின் கதி என்ன ?**

இந்த வெறியர்களுக்குச் சம்பளம் சிங்களவர்களின் வரிப்பணத்திலிருந்து மட்டுமா வழங்கப்படுகிறது? தமிழ் பேசும் மக்களின் வரிப் பணமும் அவர்களுக்குச் சம்பளமாக வழங்கப்படுகிறதே! "நாங்கள் சிங்களத்தில் மட்டுமே பணி புரிவதால் தமிழ் பேசும் மக்களின் வரிப் பணத்திலிருந்து கொடுக்கப்படும் சம்பளத்தைப் பகிஷ்கரிப்போம்!" என்று கூற அவர்களுக்குத் துணிச்சல் உண்டா?

இச்சுயநலச் சிப்பந்திகளின் மொழிப்பற்றும் பணத்தை அடிப்படையாகக் கொண்டதே! அலுவலக நேரத்தில் ஆங்கிலத்தைத் தீண்டமாட்டோமென்ற பகிஷ்காரம்— அலுவலக நேரத்துக்கு முன்னும் பின்னும் ஆங்கிலத்தில் கடமையாற்றி "ஓவர்டைம்" சம்பளம் வாங்கும் கயமை. சிங்கள மொழிப் பற்று அலுவலக நேரத்தில் மட்டுந்தானு? பின்னர் அதனைப் பணத்துக்கு விற்றுவிடுகின்றனரே! என்னே அவர்களின் மொழிப்பற்று!

வங்கியில் பணம் சேமித்துள்ள ஏழை மக்களின் வேலைகளைக் கவனிக்க இயலாது. ஆனுல் அவர்களின் வரிப்பணத்திலிருந்து இரு மடங்கு சம்பளம் மட்டும் வாங்க முடியும். என்ன அக்கிரமம் இது? பொதுப் பணம் இம்மாதிரியா விரயமாக வேண்டும்.?

இந்த நிலையில் சாதாரண மக்கள் தபால் நிலைய சேமிப்பு வங்கியின்மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? 1964 ஜனவரி முதல் சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அமுல்நடத்தப்படுமாம். அதன் பின்னர் தமிழ் பேசும் மக்கள் சேமிப்பு வங்கியில் பணம் போடுவதோ எடுப்பதோ சாத்தியமன்று. இன்றே இந்த நிலைமையென்ருல், சிங்களம் பூரணமாகஅரசாங்கஇலாகாக்களை ஆக்கிரமித்துக்கொண்ட பின்னர் சேமிப்பு வங்கி முழுவதும் சிங்களமயமாகிவிடும். ஆகவே—

**தமிழ் பேசும் மக்கள் தபால் நிலைய சேமிப்பு வங்கியிலிருந்து தங்களின் சேமிப்புப் பணம் முழுவதையும் காலம் தாழ்த்தாது உடனடியாக எடுத்துவிடும்படி கேட்டுக்கொள்கிருேம்.**

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் இத்தகைய வங்கிகளில் தமிழ் பேசும் மக்கள் தங்களின் பணத்தைச் சேமித்து வைப்பது அறிவுடைமையாகாதென்றும், அவர்கள் தத்தம் பணத்தை வங்கிகளிலிருந்து எடுத்து தமிழ்ப் பிரதேசத்தில் வேறு துறைகளில் முதலீடு செய்யும்படியும் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார். அவரது வேண்டுகோள் எவ்வளவு தூரம் தூரதிருஷ்டியுள்ளது என்பது இப்பொழுது தெளிவாகிறது.

சிங்களமயமாகும் வங்கிகளால் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித பயனும் கிடையாது. அவற்றின்மீது அவர்களுக்கு நம்பிக்கை வைக்கவும் முடியாது.

சிங்கள மொழி வெறியர்களான அரசாங்க சிப்பந்திகளின் பகிஷ்காரத்தால் தமிழ் பேசும் மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் சேமிப்பு வங்கிமீது நம்பிக்கை இழந்து விட்டனர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை அடுத்த ஆண்டு தொடக்கம் பூரணமாக அமுல் நடத்துவது சாத்தியமில்லையென்று நீதி மந்திரி அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்ததிலிருந்து சிங்கள மொழி வெறியர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

சிங்களச் சிப்பந்திகள் ஒரு பகுதியினர் சிங்களத்தில் அலுவல் நடத்துவோம் என்றுகூறி அதிகாரிகளுடன் மோதினர். ராஜரத்ன, மெத்தானந்தா போன்ற வகுப்புவாதிகள் அவர்களின் பகிஷ்கார இயக்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர். ஏன், ஒரிரு மந்திரிகள் கூட ஆசி கூறினராம். நிதி மந்திரி, உதவி நிதிமந்திரிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் பகிஷ்காரத்துக்கு உயிரூட்டின.

சம்பள உயர்வு, இதர பொருளாதார சலுகைக்காக அவர்கள் வேலை நிறுத்தமோ பகிஷ்காரமோ செய்திருந்தால் அரசாங்கம் அவர்களின் போராட்டத்தை அடித்து நொறுக்கி அவர்களை அடிபணிய செய்திருக்கும். இது சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தும் பகிஷ்காரமல்லவா?

**எனவே ஆட்சியாளர் சிங்கள மொழி வெறியர்களிடம் மண்டியிட்டு அவர்களிடம் சரணுகதியடைந்துவிட்டனர். அடுத்த ஆண்டு தொடக்கம் சிங்களம் மட்டுமே என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். பகிஷ்கார வெறியர்களோ வெற்றி முழக்கம் செய்கின்றனர். வகுப்பு வெறிக்கு விட்டுக்கொடுத்ததின் விளைவை திரு. பண்டாரநாயக்கா அன்று அனுபவித்தார். அந்தப்படிப்பினையைக்கூட இந்த ஆட்சியாளர் மறந்துவிட்டனர்.**

**இதனுல் ஏற்படவிருக்கும் பயங்கர விளைவை ஆட்சியாளர் உணரத் தவறிவிட்டனர். தமிழ் பேசும் மக்களை அடியோடு புறக்கணித்து ஆத்திரமூட்டும் வகையில் அவர்களை ஒதுக்கி விடுவதால் நாட்டைத் துண்டாடும் நிலைமையை ஆட்சியாளரே உருவாக்கி வருகின்றனர்.**

இந்தக் குறுகிய வகுப்புவாத நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களை கொதிப்படையச் செய்து, சமஷ்டி ஆட்சி முறையையும் கடந்து சென்று நாட்டை இருகூறுக்கும் நிர்ப்பந்தத்தை அவர்கள்மீது சுமத்தும் என்று வகுப்புவாத வெறியில் மயங்கிக் கிடக்கும் ஆட்சியாளர்களைக் கடுமையாக எச்சரிக்கின்ருேம்.

# தோட்டப்பகுதிக்கு ஆயுதங்கள்

## நாம்-தமிழர் கட்சி நடவடிக்கையாம்!

மலையகத் தோட்டப் பகுதியைத் தலைமை ஸ்தாபனமாகக் கொண்டு வளர்ந்துவரும் 'நாம் தமிழர்' கட்சியைப்பற்றி உண்மையில் இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று 'தவஸ' என்னும் சிங்களத் தினசரி 25.6 63ல் எழுதியுள்ள தலையங்கத்தில் வினவுகிறது. (இலங்கை தி. மு. க. வை "நாம் தமிழர் கட்சி" என்றுதான் இப்பத்திரிகை அடிக்கடி குறிப்பிடுகிறது).

இப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:-

"யாருடனுவது போராட வேண்டுமென்ற உணர்ச்சி 'நாம் தமிழர்' கட்சிக்குள் பெருகிவருகிறது. அரசாங்கம் இதனை முன்பு தடை செய்ததற்கு காரணம் இதன் இரகசியத் திட்டங்களை அரசாங்கம் அறிந்திருந்ததேயாகும் என்பது தெளிவு.

ஆயினும் அந்தத் தடையிலிருந்து "நாம் தமிழர்" கட்சி படிப்பினை கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனுல் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் கட்சி தன்னை பலப்படுத்திக் கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன. அரசாங்கம் இதனை விசாரணை செய்து அறிய வேண்டும்.

இராணுவ ஆயுதங்கள் தோட்டப் பகுதிகளுக்குப் போய்ச் சேருகின்றன என்பதை அரசாங்கம்கூட ஏற்றுக் கொண்டுள்ளது.

எத்தகைய மிரட்டல்கள் ஏற்படினும், நாட்டை இருகூறுக்க யார் முயற்சி செய்தாலும், நமது நடுவழிக் கொள்கையை மாற்றும்படி செய்யவோ சிங்கள மக்களிடமிருந்து நாட்டைப் பறித்துக் கொள்ளவோ யாராலும் முடியாது."

தவஸ 24-6-63ம் திகதி இதழில் கீழ்க்காணும் இரு சுவையான செய்திகளைப் பிரசுரித்துள்ளன.

(1) 'மக்கள்வங்கியிலிருந்து உங்களுக்குக் கடன் வேண்டுமா? ரூ. 1000 செலவு செய்ய முடியுமானுல் ரூ. 10,000 கடன் பெற முடியும். இந்தப் பணம் மக்கள் வங்கியிலுள்ள இரு அதிகாரிகளுக்குச் செலுத்தப் பட வேண்டிய தொகையாகும்.

அண்மையில் ஒரு நபர் ரூ. 15,000 இந்த வங்கியிலிருந்து கடன் வாங்கினுர். ஆனுல் அதே நபருக்கு சார்ட்ட வங்கியில் கடன் வாங்க முடிந்த உயர்ந்தபட்ச தொகை ரூ. 2500 என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியானுல் மக்கள் வங்கி ரூ 15,000 அவருக்கு எப்படி கடன் கொடுத்தது?

(2) உங்கள் ஆயுளை நீங்கள் இன்ஷூவர் செய்து கொள்ளத் தயாரென்ருல் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் ஒரு உத்தியோகமோ, பதவி உயர்வோ பெற்றுக் கொள்ளுவது கடினமன்று. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உத்தியோகம் கிடைத்தவுடன் 'ஆயுள்இன்ஷூரன்ஸ் பாலிஸி' ஒன்று எடுப்பதாக வாக்குறுதி அளிப்பது மட்டுமே. இதனுல் கூ. மொ. வில் ஓர் அதிகாரிக்கு இலாபம் உண்டாம். இதற்காக காப்புறுதி ஸ்தாபனத்தின் ஒரு பிரதிநிதி கூ. மொ. வி. ஸ்தாபனத்தைச் சுற்றித் திரிகிருராம்.

## சிங்கள இதழ்களில் . . .

### இடதுசாரிகளும் சுதந்திரக் கட்சியும்

'அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிகளுடன் மோதிக்கொள்ளாது' என்று குருணுக்கல் பா. உ. திரு. ஐயா பதிரண கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டும் சமசமாஜக்கட்சியின் சிங்களப் பத்திரிகையான 'சமசமாஜய' (21-6-63) அது சுதந்திரக்கட்சியின் கருத்தல்ல என்று சுதந்திரக் கட்சியின் பத்திரிகையான 'சிங்ஹலே' எழுதியிருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

அரசாங்கத்தால் பத்திரிகைக் கொமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டால் சுதந்திரக் கட்சியின் பத்திரிகையான 'சிங்ஹலே'யை பெரிய அளவில் அச்சிடப்பணம் ஏது என்பதையும், இப்பத்திரிகையின் வளர்ச்சிக்காகப் பொது மக்களின் பணம் ஏன் செலவிடப்படுகிறதென்பதையும் சுதந்திரக் கட்சிப் பத்திரிகைக்குக் கொடுக்கப்படும் அரசாங்கக் கார்ப்பரேஷன்களின் விளம்பரங்கள் இதர பத்திரிகைகளுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லையென்பதையும் விசாரிக்க வேண்டும் என்று "சமசமாஜய" வற்புறுத்துகிறது.

### தோற்றதேன் ?

எட்டியாந்தோட்டையில் சமசமாஜக் கட்சி மண் கவ்வியதற்கான காரணங்களையும் "சமசமாஜய" எழுதியுள்ளது.

டாக்டர் என். எம். பெரேராவின் தொகுதி பற்றி நாட்டு மக்களிடையே ஒரு தவருன எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 785 வாக்காளர்களை மட்டும் கொண்டதாக எட்டியாந்தோட்டை நகரின் பரப்பைக் குறைத்து 5 வட்டாரங்கள் கொண்டதாக ஒரு பட்டினசபை நிறுவப்பட்டதென்றும், சராசரி ஒரு வட்டாரத்தில் முழு வாக்காளர் தொகை 155 தானென்றும், வாக்குகளின் முழு எண்ணிக்கையில் 479 யூ.என்.பிக்கும், 306 சமசமாஜக் கட்சிக்கும் கிடைத்திருப்பதாகவும் சமசமாஜய கூறுகிறது.

இந்த 479 வாக்குகளைப் பெற ஒரு பொதுத் தேர்தலுக்குப் பயன்படுத்தும் முழு சக்தியையும் யூ. என். பி. பயன் படுத்தியதாகவும், குசிப்பும் பணமும் இலகுவாக விநியோகிக்கக் கூடியதாக வட்டாரங்கள் அமைந்திருந்ததென்றும் மற்றும் சில காரணங்களையும் "சமசமாஜய" சுட்டிக்காட்டுகிறது.

### தீவிரமாக அமுல் நடத்தவில்லையாம்

மக்கள் ஐக்கிய முன்னணியின் 'மகஜன எக்ஸத் பெரமுன'' (23—6—63) சிங்களம் மட்டும் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவதை ஒத்திப் போட அரசாங்கம் முயற்சி செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறது.

அப் பத்திரிகை கூறுவதாவது:—

"அரசகரும மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக்

(9-ம் பக்கம் பார்க்க)

திரு. சோமவீர சந்திரசிரியின் "நிதஹஸ" (23-6-63) இதழ் மீரிகம பா. உ. திரு. விஜயபாகு விஜேசிங்கா ஒரு கோஷ்டியையும் சேர்த்துக்கொண்டு யூ. என். பிக்குள் நுழைந்து கொள்ள முயற்சி செய்வதாகக் குற்றஞ்சாட்டுகிறது. அவர் சுதந்திரக் கட்சியில் ஒட்டிக்கொண்டிருந்தாலும் யூ. என். பி. கொள்கையுடையவரென்றும், அரசாங்க கட்சியிலுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் தன்னுடன் அழைத்து கொண்டு யூ. என். பியில் சேர்ந்துகொள்ளப் பிரயத்தனம் செய்வதாகவும் "நிதஹஸ" கூறுகிறது.

சிம்மாசனப் பிரசங்கத்தில்

# தமிழுக்குச் சலுகை: வெறும் கண்துடைப்பு

## ஆள்பவருக்கு ஆதரவளிப்பவரை திருப்திப்படுத்த மட்டும் உதவும்

**அடுத்த ஜனவரி முதல் சிங்களம்மட்டும் திட்டம் தீவிரமாக அமுலாகும் என்பது உறுதியாக்கப்பட்டு விட்டது. ஆனால் அடிப்படை உரிமைகள்பற்றி இன்னும் பேசிக்கொண்டு சிலர் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டுள்ளனர். அவர்களுடைய திருப்திக்காக மட்டுமே சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ்பற்றி ஏதாவது குறிப்பிடப்படுமாம். அக்குறிப்புப்போல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லே.**

1964 ஜனவரி முதல் சகல அரசாங்க இலாகாக்களிலும் சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அமுலாவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் சிலர் இன்னும் அடிப்படை உரிமைகள்பற்றிப் பேசிக்கொண்டேயுள்ளனர்.

சிங்களம் ஆட்சிமொழியானாலும், அலுவல்கள்யாவுமே சிங்களத்தில் செய்வதானாலும் பரவாயில்லை, எதிர்வரும் சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் மொழிபற்றி ஏதாவது குறிப்பிட்டாலே போதும். அல்லாவிட்டால் தன்னைப் போன்றவர்கள் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டமுடியாது போகும் என்று திரு. அல்பிரட் துரையப்பா ஆளும் கட்சியிடம் கேட்டுக் கொண்டிருப்பதாக அறியவருகிறது.

இந்துப் பல்கலைக்கழக மசோதாவையாவது கொண்டுவந்து மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று செனட்டர் நடேசன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாராம்.

தங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்துவரும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் திருப்திக்காக வெறுமனே சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ்பற்றி ஏதாவது கூறுவது என்று வாக்களிக்கப்பட்டுள்ளதாம். அடுத்த தேர்தல்வரை வாக்களித்தபடி நடவாதிருந்துவிடவும் ஆட்சி மேலிடம் எண்ணியிருந்ததாம்.

1961ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தின்போது குறிப்பிட்ட பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும் மசோதா இன்னும் நிறைவேறவில்லை. இவ்வாறிருக்கையில் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறும் தமிழ் மசோதா எங்ஙனம், எப்பொழுது நிறைவேறப் போகிறது? என்று தமிழ் பேசும் மக்கள் தலைவர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சிங்களம் மட்டும் சட்டம் பூரணமாக அமுலுக்கு வருவதனால், 'இனிமேல் இந்த அரசாங்கம் தமிழ் மொழிக்காக எதுவுமே செய்ய முன்வராது என்பது வெளிப்படை.

## விவேகானந்த சபையாரின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கானந்த சபையின் உறுப்பினர் பலர் இதை எதிர்த்துத் துண்டுப் பிரசுரமும் வெளியிட்டுள்ளார்கள்.

அமைச்சர் கலைவிழாவைத் திறந்து வைக்கவிருக்கிருர் என்ற செய்தியை அறிந்த விவேகானந்த சபை உறுப்பினர் நாற்பது பேர் கைச்சாத்திட்ட ஒரு மனுவைச் சபைச் செயலாளரிடம் கொடுத்தனர். 26ம் திகதி அவசரமாகக் கூட்டப்பட்ட சபையின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் இந்த மனு பரிசீலனை செய்யப்பட்ட பொழுது, 'நிர்வாக சபையின் அனுமதியில்லாமல் கலை விழாவைத் திறந்து வைப்பதற்கு அமைச்சரை அழைத்தது தனது பிழையென' சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னுள் உபதலைவரும், விவேகானந்த சபையின் உப தலைவருமான திரு. ஏ. சி. நடராசா கூறினர் என்று தெரிகிறது. நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. வைரமுத்து என்பவரும் மந்திரியின் வருகையை ஆதரித்துப் பேசியதாக அறியப்படுகிறது.

இதன் காரணமாக ஆட்சிக் குழுவில் பலத்த விவாதம் நடைபெற்றதென்றும் அறியப்படுகிறது. போதிய காலம் இன்மையால் கலைவிழாவை ஒத்திவைக்காமல் முன்பு செய்த ஒழுங்கின்படி நடாத்துவதென்றும் வருங்காலத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களை அழைப்பதில்லையென்றும் முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மந்திரியை அழைப்பதற்கு முக்கிய காரணராக இருந்தவர்கள் விவேகானந்த சபையின் நிர்வாகத்தில் முன்னர் இருந்த விவேகானந்த வித்தியால ஆசிரியர் ஒருவரும் ஆசிரியை ஒருவருமே என்றும் அறியப்படுகிறது.

### உயிர்ப் பலி

வட—கிழக்கு மாகாணங்களுக்கு மந்திரிமார்களின் வரவை எதிர்த்துக் கறுப்புக் கொடி காட்டியதன் விளைவு அமரர் கந்தையாவின் உயிரைப் பலிவாங்கியுள்ளது. அதே நேரத்தில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இத்துரோகக் கும்பல் மந்திரிமாருக்கு ஆலவட்டம் பிடிப்பதா என்று கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

## தோட்டப்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிக்கொண்டு அரசாங்கம் இலாகாக்களில் அலுவல்கள் அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன.

மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதாகப் பொய்யான வாக்குறுதிகள் சிங்கள மக்களுக்குக் கொடுத்ததும், தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியதும் தவிர 1956 முதல் இதுவரை என்ன செய்தீர்கள் என்று திருமதி சிறிமாவோ விடமும் காலஞ்சென்ற பிரதமரின் சகாக்களிடமும் மக்கள் கேட்கின்றனர்.

அரசகரும மொழியில் கருமமாற்முதிருப்பது சட்டவிரோதமல்லவா என்று நீதிமன்றத்தின் முன்னுல் கேள்வி கேட்டபோது, சிங்களத்தின் மூலம் அரசாங்க அலுவலக நடவடிக்கைகளை எல்லாம் நடத்த என்றுமே பாராளுமன்றம் கருதவில்லை என்று அட்டோர்னி ஜெனரல் பதிலளித்துள்ளார்.

1960 டிசம்பரில் கூடிய மந்திரி சபை 1964 வரை நான்கு வருடங்களுக்குச் சிங்கள அமுலைச் சட்டவிரோதமாக ஒத்திப் போட்டது.

தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து உண்டென்பதைக் கூட அறியாத சிறிமா ஆட்சி அடிக்கடி 'காலஞ்சென்ற அன்புக் கணவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாக' மட்டும் கூறிக் கொள்கிறது.

### ஏமாற்ற வேண்டாம்

இப்பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் சிங்களவர்களை ஏமாற்ற வேண்டாமென்றும், தமிழர்களின் மனதைப் புண்படுத்தவேண்டாமென்றும், அரசகரும மொழிப் பிரச்சினையின் தன்மையை அறிந்துள்ள, நியாயமான முறையில் அதனைத் தீர்க்கக் கூடியவர்களுக்கு இடமளித்து விட்டு விலகிக் கொள்ளும்படியும் ஆட்சியாளர்களை வற்புறுத்துகிறது.

## குருஷ்சேவ் ஒரு துரோகி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மார்க்சிடம் நான்கு நல்ல குணங்கள் காணப்பட்டதாம். ஆனால் குருஷ்சேவிடம் நான்கு துஷ்டக் குணங்கள் குடிகொண்டிருப்பதாக இப்புத்தகம் கூறுகிறது. இப்படித் தங்கள் பிரதமரைக் கேவலமான முறையில் கண்டித்திருப்பதை ஆட்சேபிப்பதுடன், இலங்கைப் பிரதமருக்கும் தமது ஆட்சேபத்தை ருஷ்யத் தூதுவராலயம் மறைமுகமாகத் தெரிவித்திருப்பதாக நமது நிருபர் தெரிவிக்கிருர்.

ருஷ்ய நாட்டுடன் இலங்கை சிநேகபூர்வமாக இருப்பதாகவும், பல துறைகளிலும் உதவி பெற்றுக் கொண்டிருப்பதாகவும் இந்நிலையில், ருஷ்யாவின் தலைவரை இந்த நாட்டு எழுத்தாளர் ஒருவர் இந்த முறையில் கண்டிப்பது முறையாகுமா? என்றும் ருஷ்யத் தூதுவராலயம் கேட்டிருக்கிறதாம்.

### முறியடிக்கப்பட்ட முயற்சி

சென்ற வாரத்தில் 'குருஷேவிசம்' என்ற இந்தப் புத்தகத்தின் பிரதிகள் சிலவற்றை ஒரு பெண்மணிமூலமாக ருஷ்யாவிற்குள் கள்ளக் கடத்தல் செய்ய திருமதி தேஜா குணவர்த்தன முயற்சி செய்ததாகவும், அந்த முயற்சி விமான நிலையத்தில் வைத்து முறியடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப் புத்தகங்களை ருஷ்யாவிற்குள் அனுப்ப வேண்டுமென்ற ஆசை இலங்கையிலுள்ள சீனத் தூதுவராலய அதிகாரிகளுக்கு இருந்ததாகவும், அதை நிறைவேற்றவே திருமதி தேஜா குணவர்த்தன விரும்பியதாகவும், இலங்கையில் ருஷ்யாவுக்கு ஆதரவான கொம்யூனிச வட்டாரம் ஒன்று கருதுகிறது புத்தகங்கள் கடத்தப்படுவதைக் கூட, இலங்கைக் கொம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரின் (ருஷ்ய ஆதரவாளர்) இலங்கையரல்லாத மனைவிதான் செனேட்டர் ரெஜி பெரேராவுக்கு இரகசியமாக அறிவித்ததாகவும், அதைத் தொடர்ந்து திரு. பெரேரா விமான நிலையத்துக்குச் சென்று புத்தகங்களைப் பறிமுதல் செய்ய முயற்சி எடுத்துக் கொண்டதாகவும், நமது நிருபர் கூறுகிருர்.

### தரமும் விலையும்

'குருஷ்சேவிசம்' புத்தகத்தின் விலை ரூ. 4-50. ஆனால் நானூறு பக்கங்கள் சிறந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்படிச் சிறப்பாகப் பிரசுரித்து குறைந்த விலைக்கு விற்பதற்குக்கூட, சீனத் தூதுவராலயம்தான உதவி அளித்துள்ளது என்றும், விபரங்களையும் அவர்களே கொடுத்துள்ளனர் என்றும் இடதுசாரி அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

இந்தப் புத்தகம் இலங்கையிலுள்ள சீன ஆதரவாளர்களுக்கும், ருஷ்ய ஆதரவாளர்களுக்குமிடையில் ஒரு இரும்பு அரணை அமைத்திருக்கிறது இனிமேல் இந்த இரண்டு (சீன-ருஷ்ய) தூதுவராலயங்களும் ஒன்றை ஒன்று எதிர்த்துப் பிரசாரம் செய்வதில் தீவிரமாக ஈடுபடலாம் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

### அமிர்தலிங்கம் சுகயீனம்

வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு குடல் வலிக்கான சத்திர சிகிச்சை யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நடைபெற்று, இப்பொழுது குணமடைந்து வருகிருர்.

## சுகுலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அத்துடன் ஆங்கிலம் அறியாத வரியிறுப்போர் தமது அன்ருட கருமங்களைச் சிரமமற்ற முறையில் செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தக்க ஒழுங்குகளைச் செய்தலும் வேண்டும்.

ஆகையால் உள்ளூர் மன்ற அலுவல்களனைத்தையும் (மத்திய அரசாங்கத்துடன் வைக்கும் தொடர்புகளுட்பட) தமிழில் வைத்து தமிழ் முன்னேக்குரிய சேவையில் உங்கள் பங்கைச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.


# எல்லோரும் விரும்பும் எழில்பெற



என்றும் அணியுங்கள்

## லதா!!!

**லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!**

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

**லதா பொப்ளின்!!**

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




**எலைட் சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:- **குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி, **கொழும்பு.** சில்லறை விற்பனைப் பகுதி 110 &114, மெயின் வீதி

—MYLADS—

# கதிர் பதினறு முற்போக்கு

சரசு எங்கே சஞ்சரிக்கிருள்?... அவள் மனதிலே கும்மிழ்த்து வரும் நினைவுகளிலிருந்து அவள் வேறு... நினைவுகள் வேருகி எங்கே... எதைத்தேடிப்படரத் துடிக்கின்றன...ஜீவத் துடிப்பில் தவிக்கும் வெண் புருவாகி எங்கே அவள் பயணமாகின்ருள்?...அந்த மதுராந்தமான கனவு கலையக் கூடாது...கலையவே கூடாது...

கண்ணிமைகள் இமைக்க மறக்கின்றன!...

மாமரத்தின் மெல்லிய சலசலப்பும் ஓய்ந்து விடுகின்றது!

காற்றின் அசைவு அஸ்தமித்து, பிரபஞ்சமே அசைவற்று நின்று விடுகின்றது!...

'சரசு!...... உங்களை நானென்று கேட்பேன்...கோவியாமல் பதில் சொல்லுவீங்களா?...'

'அவனென்ன கேட்கப் போகிருன்?...'

'...வந்து...வந்து... நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?

சரசுவின் இதயம் மலராகி மலர்ந்து மணம் வீச அந்த சுகந்த மணத்தின் போதையை அவளாலேயே தாங்க முடியவில்லை.

'இதென்ன கேள்வி?...உங்களைக் கண்ட முதல்...என் இதய பீடத்தில் கொலுவீற்றிருக்கும் தெய்வமல்லவா நீங்கள்?...'

'ஆ!...உங்களுக்கு என் மீது அவ்வளவு விருப்பமா?'

—அவள் தலையசைக்கிருள்! அவள் தோள் பட்டையை அவன் கரங்கள் பற்ற...

அவள் கனவு கலைய...

'என்ன மனேரம்யமான கனவு!...இவ்வளவு விரைவில் கலையலாமா?...'

'என்ன நான் கேட்கிறேன் ...நீங்கள் பேசாம நிக்கிறீங்களே?...' —ராஜா தான் கேள்வி கேட்க பீடிகை போட, அவள் பேசாமல் நிற்பதைக் கண்டு, உரக்கவே கேட்கிருன்.

'ஆ!...என்ன கேட்டீர்கள்?...!'

அவன் சிரிக்கிருன். ஜலதரங்கம் மீட்டுவது போல் அவள் காதில் இனிமையாகச் சொரிகிறது சிரிப்பொலி!

'இவ்வளவு நேரம் எங்க போயிருந்தீர்கள்!......நான் எவ்வளவுதரம் கேள்வியைக் கேட்டனுன்!...'

'நான் எங்கே போயிருந்தேன்.........உங்களிடந்தான் போயிருந்தேன்... இப்போது நிற்பது போல் நாலடி தூரம் இடைவெளி கூட அப்போது இருக்கவில்லையே!... உங்களோடேயே...உங்கள் உயிருடன் கலந்து உணர்ச்சியில் ஒன்றி ஜீவக்குரல் கொடுத்தேனே!......அந்தக் குரலை, பிரேமை கீதத்தை நீங்கள் கேட்கவில்லையா?...அப்படியாளுல் என் காதில் விழுந்ததெல்லாம்...உங்கள் கேள்வியெல்லாம் கானல்தானு?... கலையும் கனவு தானு?...!

'மீண்டும் என்ன கனவா?..' —சிரித்துக் கேட்கிருன்.

'உங்களைப் பற்றிக் கனவு காண்பதில் எனக்கு அலுப்பு ஏற்படுமா?...அமுத ரசத்தை அருந்தியவளைப்போல்..அந்த மயக்கத்திலேயே மாந்திக் கிடப்பதையே நான் விரும்புகிறேன் ...'—சரசுவால் இப்படியெல்லாம் நாணச் சிறை உடைத்துச் சொல்ல முடியுமா?...

'உங்களுக்கு என்ன பிடித்துவிட்டது... பிரமை பிடித்தாற்போல...?'—ராஜாவுக்கு அவள் நிலையைக் காண கொஞ்சம் பயம் ஏற்படுகிறது.

அவன் பயத்தைக் கண்டு 'கலீ' ரென அவள் சிரிக்கிருள்!

'இவள் என்ன பெண்ணடா!...கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொல்லாமலிருக்கிருள்..திடீர் திடீரென சிரிக்கிருள்...ஒரு வேளை...'

அவன் சிந்தனையை அவள் உணர்ந்துவிடுகிருள்!

'என்ன இவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று பயப்படுகிறீங்களா?... அப்படி ஒன்றுமில்லை...சரி, சரி...உங்களை நான் மிகவும் கலவரப்படுத்தி விட்டன் போல கிடக்கு...நீங்க என்னட்டை என்ன கேட்க வேண்டுமெண்டனீங்கள் !...'

அவனுக்கே இப்போது திகைப்பு வந்து விடுகிறது... இதென்ன சங்கடம்! எப்படி இந்தப் பேச்சை ஆரம்பிப்பது?...

தொடர் கதை




படலை திறக்கும் சப்தம் கேட்கிறது. ஆச்சியும் அண்ணியும் ஆஸ்பத்திரியால் வந்துவிடுகிருர்கள்.

'இண்டைக்கு வேணும்!... இன்னெரு நாளைக்கு!...' —என்று பேச்சைப் பாதியிலே வெட்டி விட்டு, பரபரப்புடன், விரைந்து உள்ளே செல்கிருன்.

'தம்பி வந்துட்டுது போல கிடக்கு!...தம்பி என்ன வந்து கன நேரமே சரசு!...—என்கிருள் அண்ணி.

'இல்லையக்கா!.. இப்பதான் வந்தவர்...உங்களை எல்லாம் எங்க எண்டு கேட்டார்... நீங்க ஆஸ்பத்திரிக்குப் போட்டீங்க என்று சொல்

**செம்பியன்செல்வன்**

லிக்கொண்டிருக்க, நீங்களும் வந்திட்டீங்க!...'—என்கிருள் சரசு!

அண்ணி சிரித்துக்கொண்டு உள்ளே செல்கிருள்.

அன்றிரவு!

'என்னை என்ன கேக்க விரும்பியிருப்பார்?...' என்ற கேள்வி அலையாகி நெஞ்சக் கடலில் மோதிக் கொண்டிருக்க...துயில் பிடிக்காமல் ஒரு ஜீவன் தவித்துக்கொண்டிருந்தது!

***

அன்று ஞாயிற்றுக் கிழமை. சாப்பாடெல்லாம் ஆகிவிடுகிறது. பெண்களுக்கு அடுப்படி வேலையெல்லாம் ஒருவாறு ஒழித்தாகி விடுகின்றது. அடுப்பில் தணல் வெப்பத்தில் 'கேத்தில்' ஒன்று பின்னேர தேநீருக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

நடராசா யாரையோ சந்திக்க வேண்டுமென்று வெளியே போய்விட்டான். ராஜகோபால் உண்ட களைப்புத்தீர அண்ணனின் சாய்மனைக் கட்டிலில் சாய்ந்திருக்கின்ருன்...

முற்றத்தே நிற்கும் மாமரத்தின் கீழ் நிழல் கவிந்து குளிர்ச்சியளிக்கிறது. அதன் ஒரு நீண்ட பாயை விரித்துப் போட்டு, ஆச்சி, அண்ணி, சரசு ஆகியோர் அமர்ந்திருக்கிருர்கள். சரசுவின் கையில் அந்த வார தேசிய தினசரி ஒன்று கிடக்கின்றது. சரசு அந்த வாரத் தொடர் கதையைச் சற்று உரக்க வாசித்துக் கொண்டிருக்கிருள். மற்ற இருவரும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிருர்கள்...

—'தொடரும்...' — சரசு படித்து முடிக்கின்ருள்.

'சீ! இதென்ன நாத்தம் புடிச்ச கதை ......வாயால சொல்ல முடியாத சொற்களையெல்லாமெல்ல எழுதுதுகள்...இதால தானே இந்தக் காலத்துப் புள்ளைகளெல்லாம் கெட்டு நாசமாப் போகுதுகள்...வாய்க்கு வந்த படி ஊத்தைப் பேச்செல்லாம் பேசுதுகள்...'

'என்னுச்சி!... இப்படியெல்லாம் சொல்லுறீங்க...இப்படித்தானும் உலகத்தில நடக்குது...அதாலதான் இப்படி எழுதினமாம்!...'

'உலகத்தில கெட்டதுகள் மட்டும் தான் நடக்குதே? நல்லதொண்டும் நடக்கேல்லையே...?எப்பவும் மனிஷர் இப்படித்தான் ஊத்தைப் பேச்சையே பேசிக் கொண்டு திரியினம்?...நல்லதுகளை எழுதினு வாசிக்கிற மனசாவது கெடாது சுத்தமா இருக்கும்...'—என்கிருள் ஆச்சி.

'இல்லையாச்சி!...... உலகத்தில நல்லது நடந்தாலும் தீமைதான் அதிகம்!...தீமைகளை..கெட்டதுகளைக் காட்டி இப்படி எல்லாம் நடக்குதே எண்டு காட்டி வாசகர் மனதிலே புரட்சியை ஏற்படுத்தினு தீமைகள் நடைபெற மாட்டாதாம்!...'

'இதென்னடி புதுமையாயிருக்கு...? மரத்தை நட்டு வைத்து விட்டு, ஒவ்வொரு நாள் காலையிலும் சென்று முளைத்து விட்டுதா எண்டு புடுங்கிப் பாக்கிறது போலயெல்லே கிடக்கு...? தீமையைக் காட்டுறவங்க அது தீமை யெங்கிற மாதிரியெல்லே காட்ட வேணும்... அதை விட்டுட்டு படம் பிடிச்சுக் காட்டுற மாதிரி... கெட்ட செயல்களெல்லாம் மனதைக் கவர்ர மாதிரி காட்டினு மக்கள் திருந்துவினமோ கெட்டுப் போயிடுவினமோ?... பத்ததாத்துக்கு அது மாதிரியெல்லே நடக்க முற்படுவினம்...'

'இல்லையாச்சி! இப்படியெல்லாம் எழுதுறவைக்குத் தான் இப்ப எல்லாம் பெரிய மதிப்பாம்!...புதுமை இலக்கியமாம்...'

'ஓம்!...ஓம்!......இன்னும் கொஞ்ச நாள் போக எதை எதையெல்லாமோ எழுத ஆரம்பிச்சுவினம்...நீங்களும் ஒண்டும் விடாம வாங்கிப் படியுங்கோ!...' —ஆச்சிக்குப் பற்றிக் கொண்டு வருகிறது,

'இப்படியே இந்தியாக் காரன் எல்லாம் எழுதுருன். அவன் எழுதுறதெல்லாம் இலக்கியமில்லையோ...? அவன்ர எழுத்தில் பெரும்பாலும் ஒரு சுத்தம், அடக்கம், தெளிவு, அமைதி, எல்லாம் இருக்கும்...இதுகளைப் போலவே அவன் எழுதுருன்...? இங்கதான் நாசமாப் போவினம் நாலெழுத்துப் படிக்காததெல்லாம் எழுத வெளிக்கிட்டிட்டுதுகள்! ......அததுகள் தங்களுக்குத் தெரிஞ்ச பாஷையிலதானே எழுதுங்கள்...! அதுகளுக்கும் போய்ப் பத்திரிகையில இடங் கொடுக்கிருங்களே அவங்களைச் சொல்!...'

'இல்லையாச்சி!... அப்படிச் சொல்லாதீங்க!......இந்தியாவை விட இலங்கையிலதான் மக்களின் பிரச்சினைகளைக் கவனிச்சு எழுதுருங்கள் அதிகமாக...இந்தியப் பத்திரிகையில அதிகமாக குடும்பக் காதல் சித்திரங்களாகவே இருக்கின்றன!...'

'அதென்ன புதுசா இருக்கு ... உலகத்தில எந்த மொழியில தான் காதல் கதையில்லை... அண்டைக்குக் கூட நாங்க எல்லாரும் போய்ப் பாத்துட்டு வந்த 'அக்பர்' படம் கூட காதல் கதை தானே!...அம்பிகாபதி அமராவதி காதல் கதையாக இருப்பதால்தானே இன்று வரை அது அழியாவரம் பெற்று விளங்குகிறது, எணை பிள்ளை மனுஷன்ர வாழ்வின் அடிப்படையே அதுதானே..! அது இல்லாட்டி....காதல்... மணம் இல்லாட்டி...பிரச்சினை எங்கையிருந்து பிள்ளை தோன்றப் போகுது... பிரச்சினைகளின் ஆணி வேரையே பிரச்சினையல்ல என்று தள்ளி விடலாமா?......இப்ப படிச்ச கதையில எங்க பிள்ளை பிரச்சினை யிருக்கு...ஒரு வயது வந்த பிள்ளையை... வயது போன ஒரு கிழவன் பலாத்காரமாக அவள் வீட்டுக்குள்ளேயே நுழைந்து கெடுக்கிறதாக எழுதியிருக்கு...! இது சமூகப் பிரச்சினையா பிள்ளை? இது எந்தளவுக்குப் பிள்ளை உண்மை பொருந்தியது...? இதுகள் இல்லைப் பிள்ளை பிரச்சினை ... சமூகத்தில பாரம்பரியமாக சில கோளாறுகள் இருந்துவருகின்றன... அக் கோளாறுகள் மரபு என்ற பெயரில் நீக்க முற்படாமலிருந்து சமூகத்துக்கும் மனிதன் வாழ்வுக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும்போதுதான் பிரச்சனைகளாகின்றன......அதை விட்டுட்டு பிரச்சினை என்ற பெயரில 'மலப்புழு' கிண்டி எடுப்பது பிரச்சினை இல்லைப் பிள்ளை!...'

சரசுவுக்கு வியப்பாக இருக்கிறது. ஆச்சியும் விஷயம் தெரிஞ்சவதான் என்ற உணர்வில் பிரமிக்கிருள்.

'இல்லையாச்சி!......இதைத் தான் மக்கள் விரும்பி வாசிக்கினமாம்!...'

'உதைக் கதைக்காத பிள்ளை!..மக்கள் எதை விரும்பினம் எண்டு பாத்துத்தான் எழுதினமாக்கும்!...தங்களுக்குப் புடிச்சதை....தங்களுக்குள்ள லட்சியத்தைப் பலவந்தமாக மக்களிட்ட திணிக்கமுற்பட்டுவிட்டு...அதைத்தான் மக்களெல்லாம்விரும்புகினம் எண்டெல்லாம் பேசினம்!...இவை எல்லாம் காதலைக் குறை கூறுகினம்...ஆனு இவை எழுதுறதெல்லாம் அப்பட்டமான காமம்!... காமத்திலும் பொருந்தாத, இயற்கைக்கு விரோதமான ...சீ!...எவ்வளவு அருவருப்பு...சுத்த அசிங்கம்!...'

'இல்லையாச்சி!...'—என்று ஏதோ சொல்லச் சரசு வாயெடுக்கிருள்.

'சரி!...சரி!...போதும் உதுகளைப் பத்திக் கதைச்சதெல்லாம்...எனக்கு இந்த வெயிலுக்கு கண்ணைச் சுழட்டுது... நான் ஒருக்கா தலையைச் சாய்க்கிறன்...'—என்று ஆச்சி சரிந்து தலைக்கு கையை மடித்து அணையாக்கிப் படுக்கிருள். அண்ணி ஏதோ அலுவலாக அடுப்படிக்குள் நுழைகிருள்.

ராஜா சரசுவை நோக்கி விரைந்து வருகிருன்.

***

'அப்படி எண்டா நீங்க பெரிய யதார்த்தவாதியா?...' —என்கிருன் ராஜா.

'யாரப்படிச் சொன்னது?.. ஓ!...நான் ஆச்சியோட கதைச்சதைக் கொண்டு

(15-ம் பக்கம் பார்க்க)



பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

தந்தி தாமரை

சிங்களம் மட்டும்

# சட்டத்தை முறியடிப்பது நமது கடமை

## எங்கள் எழுச்சி புதிய வரலாற்றை உருவாக்கட்டும்

## அ. எ. வி. சங்க ஆண்டுக் கூட்டத்தில் புதிய தலைவர் முழக்கம்

தமிழ் அரசாங்க ஊழியர்களை நடைப்பிணமாக்கிய சிங்களம் மட்டும் சட்டத்தை முறியடித்துப் பிணமாக்க வேண்டியது நமது கடமை. இளைஞர்களாகிய எங்கள் எழுச்சியும் துடிப்பும் ஒன்று திரண்டு ஒரு வரலாற்றுக் காவியமே உண்டாக வழி வகை செய்யப்போகிறது. தமிழ பேசும் தொழிலாளர்கள் மொழி வழி பிரிந்து போரிட்டால்தான் வாழ்வோம். அல்லது வீழுவோம். எமது கோரிக்கைக்குத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் செவி மடுக்க ஆரம்பித்துவிட்டனர். எங்கள் தொழிற் சங்கங்கள் குடும்ப இணைப்புடன் வளர ஆரம்பித்துள்ளன. உரிமை வேட்கையில் வெற்றி பெறுவது நிச்சயம்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் தமது தலைமை உரையின்போது மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இப்புதிய ஆண்டு தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த மட்டில் ஒரு சோதனைக்காலம். இந்த ஆண்டின் இறுதியில், தமிழ் அரசாங்க ஊழியரின் தொழில் உரிமைகளுக்குக் கூட உலை வைக்கப்படக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. எமது வாழ்வில் இவ்வாறான ஒரு சோதனையை--சவாலை—நாம் முன்பு ஒரு பொழுதும் சந்திக்கவில்லை. இப்படியான ஒரு இக்கட்டை எதிர்நோக்கியிருக்கும் தமிழ் அரச ஊழியர்களுக்குச் சரியான வழியைக்காட்டுவதும் அவர்கள் உரிமைப் போரை முன்னின்று நடத்துவதும், அ. எ. வி. சங்கத்தின் பொறுப்புக்களாக உள்ளன. எங்கள் பொறுப்பை நன்றாக உணருகிறோம். அதே வேளை தனிப்பட்ட எனது குறைபாடுகளையும் உணருகிறேன். அதேபோல் இளைஞனாகிய என்னை சங்கத்தின் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கவும் தொழிற் சங்கத் துறையில் பயிற்சி அளிக்கவும் துணிந்து எங்கள் சங்க முன்னாள் தலைவரும் சங்கத்தின் மூத்த தலைவர்களும் முன்னோடிகளும் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கை எனக்கு உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. அவர்களின் நம்பிக்கைக்கும் உங்கள் நம்பிக்கைக்கும் பாத்திரமாக நடந்துகொள்வேன் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

எங்கள் மூத்த தலைவர்களின் ஆன்ற அனுபவமும் அறிவும், இளைஞர்களின் எழுச்சியும் துடிப்பும், இணைந்து எமது புதிய ஆண்டு ஒரு வரலாற்றுக் காவியமாக இடம் பெறப்போகிறது என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. தமிழ் அரச ஊழியர்கள் தீட்டப் போகும் வரலாற்றுக் காவியம் எழில் மிக்கதாக எழுச்சி மிக்கதாக உலகம் பார்த்துப் பார்த்துப் பாராட்டத்தக்கதாக நாளை நமது சந்ததி வாழ்த்தக் கூடியதாக வரலாறு போற்றக்கூடியதாக அமையவேண்டும். இதற்கு உங்கள் அனைவரினதும் உற்சாகமான ஒத்துழைப்பையும் சிரிய பணியையும் செயற் குழுவின் சார்பில் வேண்டிக் கொள்கிறேன், எதிர்பார்க்கிறேன்,

தமிழ் அரச ஊழியர்களை அழித்தொழிக்க வெளிவந்த பூதம் சிங்களம் மட்டும் சட்டம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இச்சட்டம் எம்மை எல்லாம் எதிர்பாராத விதத்தில் அறிவிலிகளாக்கி எமது உரிமைகளை அழித்து நாம் அனுபவித்து வந்த அரைகுறை உரிமைகளைப் பறித்ததோடு மட்டுமல்லாது ஒரு மனிதனுடைய அடிப்படை உரிமையான தொழிலுரிமையைத் தமிழ் அரச ஊழியர்களுக்கு ஏன் — தமிழ் பேசும் இனத்துக்கே—மறுத்துள்ளது. மக்களாட்சி நிலவும் ஒரு நாட்டில் இவ்வாறு ஒரு இனத்தைச்சார்ந்தவர்களுக்கு இவ்வாறான சாதாரண அடிப்படை மனித உரிமை மறுக்கப்படுவது மாபெரும் அநீதியாகும்.

இந்த அநீதியையும் அக்கிரமத்தையும் முழு மூச்சுடன் எதிர்ப்பது அ.எ.வி. சங்கத்தின் சிறப்பான தலையாய கடமை ஏற்கனவே நமது சங்கம் இதுவரை யாரும் செய்யாதபடி—சட்ட மூலம் இந்த அநீதியை எதிர்த்துப் போராடுகிறது. ஆனல் சட்டப் போராட்டம் போராட்டமுறைகளில் ஒரு வழியே தவிர அனைத்தும் அதுவே அல்ல. உரிமைக்கு விலை எங்கள் தலையானல் அதையும் மகிழ்ச்சியுடன் காணிக்கையாக்குவோம்.

எங்களை நடைப் பிணங்களாக்கிய சிங்களம் மட்டும் சட்டத்தை நாங்கள் பிணமாக்க வேண்டும். எங்கள் உரிமை மறுக்கும் அந்தக் கொடூரச் சட்டத்தைச் சட்டப் புத்தகத்தில் இருந்தே நீக்க வேண்டும்.

இச்சட்டத்தை முறியடிக்கச் சங்கம் எடுக்கும் பல நடவடிக்கைகளுள் ஒன்று அரச ஊழியர் சிங்களத் தேர்வுகளைப் புறக்கணிப்பது. இந் நடவடிக்கையை எனது சங்கம் ஒரு தொழிற் சங்க நடவடிக்கையாகவே சென்ற ஆண்டு மேற்கொண்டது. எமது சங்க உறுப்பினர்கள் உற்சாகத்துடன் சங்கத்துக்குத் துணை நின்றார்கள், எனினும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலர் நம்மைக் காட்டிக் கொடுக்கிறார்கள். குறிப்பாகத் 'தோழர்கள்' பலரும் பிற சேவையைச் சேர்ந்தவர்களும் சிங்களத் தேர்வுகளுக்குத் தோன்றி மாபெரும் துரோகம் இழைத்துவிட்டார்கள். காலம் கடந்து விட்டாலும் இவ்வாறு தவறு விட்டு விட்டவர்கள் இன்னும் உள்ள சொற்ப நாட்களில் தங்கள் தவறுக்குப் பிராயச்சித்தம் தேடும் வகையில் எமது பக்கம் சேர்ந்து தமது பழியைத் துடைக்கப் போராட்டத்தில் முன்னிற்க வேண்டும். உரிமை முழக்கமிட வேண்டும். குறிப்பாகப் பிற சேவையினர் எமது சங்கம் விடுக்கும் மொழி வழித் தொழிற் சங்கத்துவத்தை ஏற்றுப் புதிய பல தொழிற் சங்கங்களை, மொழி வழி ஒன்றுபட்ட தமிழ் பேசும் தொழிலாளர் அணிகளைத் திரட்ட வேண்டும். இவ்வாறான புதிய தொழிற் சங்கங்களை உருவாக்க அ. எ. வி. துணை செய்யும்.

### வாழ வழி

எமது சங்கம் எழுப்பிய மொழி வழித் தொழிற் சங்கத்துவம் நாட்டில் பெரும் கருத்துப் புரட்சியை ஏற்படுத்தி, வெத்து வேட்டுத் தலைவர்களின் தகிடுதத்த வாதங்களுக்குச் சரியான பதிலடி கொடுத்திருக்கிறது. எமது சங்கத்தின் இந்த அடியிலே 'தோழர்கள்' யாழ். நகரிலே இடதுசாரி ஐக்கிய முன்னணியின் சார்பில் கொண்டாடிய மே விழாவில் மிகப் பரிதாபகரமாக அலறினார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்வோம்! தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும் அதையே சொல்வோம். அந்த எம் அறைகூவல்தான் தமிழ் பேசும் தொழிலாளர்களே மொழி வழி ஒன்றுபடுங்கள்—மொழி வழி பிரிந்தால் வாழ்வோம், இன்றேல் வீழ்வோம். எனவே மொழி வழி தொழிற் சங்கங்கள் அமையுங்கள்.

### தமிழியக்கம்

தமிழியக்கத்தை வலுப்படுத்தவேண்டிய பொறுப்பு சிறப்பாகத் தமிழ் அரச ஊழியர்களைச் சார்ந்துள்ளது. அரசாங்கம் தமிழையும் தமிழ் பேசும் ஊழியர்களையும் ஒழித்துக் கட்ட எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் சங்கம் எதிர்க்கும். இந்த எமது எதிர்ப்புக்கு தமிழியக்கம் உறுதுணை நிற்கும். தமிழியக்கம் தீவிரமாகப் பரவி தமிழ் பேசும் இனம் அரசாங்கத்துடன் தனது அத்தனை தொடர்புகளையும் தமிழிலே வைத்தால் அரசாங்க சேவையில் இருந்து தமிழ் பேசும் ஊழியர்களை ஒழித்துக்கட்ட நினைக்கும் அரசாங்கத்தின் எண்ணத்தில் மண் விழும்.

வெகு விரைவில் த. பே. தொழிலாளர் குடும்பம் பெருகப் போகிறது. குடும்பம் பெருத்து பலம் பெற்ற பின்னும் வெறும் கோரிக்கைகள் மட்டும் தான் விடுக்குமா? இல்லை தனது ஒன்றுபட்ட பலத்திலே—உழைப்பிலே—உரிமை வேட்கையிலே நம்பிக்கை வைத்து உரிமை பெறுமா? என்பதை நிச்சயம் காலம் காட்டும், நாளைய வரலாறு கூறும்.

தமிழ் அரச ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் அதே வேளையில் தாங்கள் தமிழ் பேசும் இனத்தின் அசைக்க முடியாத அம்சம் என்பதை மறந்துவிடக் கூடாது. தமிழ் பேசும் இனம் வாழ்ந்தால்தான் நமக்கும் வாழ்வுண்டு. இதை மனதில் வைத்து நாம் பணியாற்ற வேண்டும். தமிழ் பேசும் இனம் வாழும் பகுதிகளில் கடமையாற்றும் நமது ஊழியர்கள் அம் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக--அன்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். நெடுங்காலமாக எமது பணி—உழைப்பு—ஆற்றல் எம்மினத்துக்கு, எமது மக்கள் பகுதிகளுக்குக் கிடைக்கவில்லை. எமது ஆற்றலும் உழைப்பும் பணமும் கூட தென்னிலங்கையிலேயே பெரும் பகுதி செலவு செய்யப்பட்டுள்ளன. இதன் பலன் நாமின்று நடுத்தெரு நாயகர்களாகக் காட்சி அளிக்கிறோம். நாம் இனிமேல் எமது இனத்துக்கும் எமது நாட்டுக்கும் பலனுள்ளவர்களாக மாறவேண்டும். தமிழ் பேசும் இனத்தின் சிறப்பு மிக்க பகுதியினர் நாம். நமது உழைப்பும் ஆற்றலும் நம்மினத்துக்குப் பயன்தரா விட்டால் யார் பணி அவர்கள் வாழ்வுக்கு உதவும்? சொந்த நாடின்றி-உரிமை இன்றி நடுத்தெருவில் நின்ற இனம் யூதரினம். இட்லரின் மிருகத்தனத்துக்குப் பல உயிர்களைப் பலி தந்த இனம் யூதரினம். அந்த இனம்கூடத் தனக்கென ஒரு நாடு ஏற்படுத்திக் கொண்டதென்றல்—பாலைவனப் பூமியைச் சோலைவனமாக்கி—எழில் கொழிக்கச் செய்தது-உரிமை வாழ்வு கண்டதென்றல் தமிழ் பேசும் இனம் ஏன் இதைச் செய்யாது? உலகப் படத்திலே இஸ்ரேல் என்ற புதிய நாட்டை யூதரினம் உருவாக்க முடியுமென்றல்-தமிழ் அரசு ஊழியர்கள் ஏன் தங்கள் உரிமைகளைப் பெற முடியாது? உரிமை வேட்கையும், உழைப்பும், உறுதியும் எம்மிடம் உண்டென்றல் நாங்கள் வெற்றி அடைவோம்.

இந்த நேரத்தில் நாட்டில் நிலவும் லஞ்ச ஊழல், நிதி நெருக்கடி ஆகியவற்றையும் குறிப்பிட விரும்புகிறேன். திறமைக்கு மதிப்பளிக்காது இன, மொழி, மத வேறுபாடுகளைக் கணித்து அதற்கேற்ப பதவிகளை வழங்கும் மனப்பான்மையும்—இந்த ஓரவஞ்சனையால் விரக்தி மனப்பான்மைகொண்ட ஊழியரும் இருக்கும் வரை நாடு ஒரு பொழுதும் முன்னேற முடியாது. நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை அரசாங்கத்துக்கு உண்டென்றல் தனது அநாசரீகப் போக்கை மாற்ற வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

## இ. த. அ. க: புதிய கிளை சரவணையில் நிறுவப்பட்டது

இலங்கைத் தமிழரசுக் கட்சி சரவணை கிளை ஆரம்ப பொதுக் கூட்டம் 9-6-63 பி. ப. ஆறுமணியளவில் சரவணை கிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில்-வேலணை கிராம சபை முன்னை நாள் அக்கிராசனர் திரு. ப. கந்தசாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தீவுப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. அ. கந்தையா அவர்கட்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யப்பட்டது.

### உத்தியோகஸ்தர் தெரிவு

போஷகர்: சி. கணபதிப்பிள்ளை, தலைவர்: ப. கந்தசாமி, துணைத் தலைவர்: நா. தம்பிையயா, செயலாளர்: செ. பூதத்தம்பி, துணைச்செயலாளர்: வை. குருமூர்த்தி, தனதிகாரி: வே. இராசையா

ஆட்சிக் குழு உறுப்பினர்: திருவாளர்கள் ச. மாணிக்கம், க. ஆறுமுகம், வே. சுந்தரம்பிள்ளை, மா. மாணிக்கம், மு. திருநாவுக்கரசு, வை. சண்முகம், க. நாகரெத்தினம், பலர் தமிழரசுக் கட்சியையும் அதன் சேவை நலன்களையும் விபரித்து சொற்பொழிவு ஆற்றினர்கள்.

கட்சி வளர்ச்சிக்காகச் சரவணை கிளை தீவிரமாகப் பாடுபடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் மறைவுக்கு அனுதாபச் செய்தி அனுப்பும்படியும் தீர்மானிக்கப்பட்டது.





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

# பக்கத்துவீட்டு மச்சானை எண்ணி பதை பதைக்கும் பாவை

## மல்லியத்தில் நடந்த படப்பிடிப்பு

காவேரி நதியின் கருணையினால் வளம் நிறைந்து விளங்கும் தஞ்சை மாவட்டத்திலே மல்லியம் என்ற அழகிய கிராமம் ஒன்றுண்டு. பசுமையும் பண்பும் குடிகொண்டு இலங்கும் நிலமும் மக்களும் நிறைந்த இந்த மண்ணிலே அன்று சுற்றிவந்து கொண்டிருந்தேன். ஒரு பக்கம் பெரியதொரு தென்னந்தோப்புக் காணப்பட்டது. 'ஜிலுஜிலு' வென்று சுகம் தரும் காற்று வீசிக் கொண்டிருந்தது.

சலசல என ஒலி எழுப்பிக் கொண்டு காவேரி வீறுநடை போட்டு ஓடுகிறாள். காற்றின் வேகக் கானத்துக்கும்,



ஆற்று நீரின் தாளத்துக்கும் இயையத் தம் தலையையும் உடலையும் அசைத்து மூங்கிற் கன்னியர்கள் நடமாடுகின்றனர்.

இயற்கையின் அழகையெல்லாம் ரசித்தபடி சென்று கொண்டிருந்த என்னை இனிமைக் குரல் ஒன்று தடுத்து நிறுத்தியது. இசை வெள்ளம் பரவியது. இசையைத் தொடர்ந்து எனது நடையும் தொடர்ந்தது.

"பக்கத்து வீட்டு மச்சான்
பார்வையிலே படம் புடிச்சான்
பார்வையிலே படம் புடிச்சி
மங்கை நெஞ்சில் இடம்
புடிச்சான்
..............."

இந்தப் பாட்டைப் பாடியபடி அழகி ஒருத்தி மான்

**நமது சென்னை நிருபர்**

போன்று துள்ளித் திரிகிறாள். தென்னந்தோப்பை அடுத்திருந்த பூந்தோட்டத்துள் புகுந்தாள்—

"மருக்கொழுந்து வாசத்திலே
மாந்தோப்பில் வழிமறிச்சான்
மாந்தோப்பில் வழிமறிச்சி
மயக்கத்தை வரவழைச்சான்
..............."

தொடர்ந்து பாடுகிறாள், சிட்டாகத் துள்ளுகிறாள். அதோ அந்த ஆலமரத்தின் கிளையிலுள்ள ஊஞ்சலில் அமர்ந்து ஆடுகிறாள்.

"தை மாசம் தாலி கட்ட
மார்கழியில் கை பிடிச்சான்
..............."

இப்படியே பாடிக்கொண்டு அந்த ஏந்திழையாள் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறாள்.

யார் இவள்? எதற்காக இப்படி மச்சானையே நினைத்து மகிழ்ச்சிக் கடலாடுகிறாள்? எல்லாம் பருவக் கோளாறு தான்.

அமர்ஜோதி மூவிசார் தயாரித்து வரும் பெயரிடப் படாத படத்துக்காக இந்த வெளிப்புறக் காட்சிகளை மல்லியம் என்ற கிராமத்தில் படமாக்கினர். ஏ. எல். எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த ஒளிப்பதிவாளர் கர்ணன் இக் காட்சியைப் படமாக்கினார்.

வாலைக் குமரியாகத் துள்ளிக் குதித்து ஆடிப்பாடி மகிழ்ந்தவர் சாவித்திரி தான். அசல் கிராமப் புறத்துப் பெண்ணாக வேடமிட்டிருந்தார். அவருடன் ஜெமினி கணேசன், விஜயா, முத்துராமன், எம். ஆர். ராதா, ரங்கராவ், ஷீலா முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரக்ஷனில் உருவாகும் இப்படம் ஆகஸ்டில் வெளிவருகிறது.

## மிஸ்டர் குகதாசன்

ஈழக்கலை மன்றத்தின் மூன்றாவது தயாரிப்பாக அமரர் இலங்கையர்கோனின் "மிஸ்டர் குகதாஸன்" சிரிப்பு நாடகத்தை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஆகஸ்ட் 3-ம் திகதி மேடை ஏற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் துரிதமாகச் செய்யப்படுகின்றன.

இந் நாடகத்தில் நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அ. இந்திரா, வே. க. சபாரத்தினம், சி. கந்தப்பு, சிவலிங்கம், க. அருட்பிரகாசம் முதலானவர்களும் இரு பெண்களும், நடிக்க ஏற்பாடாகி இருக்கின்றது.

நாடகத் தயாரிப்பு வேலைகளைப் பரராஸ் வாரித்தம்பி அவர்கள் கவனிக்கிறார்கள்.

## புயலில் ஓர் மலர்


"புயலில் ஓர் மலர்" என்ற நாடகத்தைத் தயாரித்து வந்த "சித்ராலயா" நாடக தயாரிப்பு நிலையத்தின் பெயர் "கீதாஞ்சலி ஆர்ட் என்டர் பிரைசஸ்" என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கீதாஞ்சலியின் தயாரிப்பான "புயலில் ஓர் மலர்" நாடகம் அடுத்த மாதம் கண்டியிலும் ஆகஸ்ட் மாதத்தில் புங்குடுதீவிலும் அரங்கேற்றப்படவிருக்கிறது அதன் பின்னர் கொழும்பிலும் அரங்கேற்றப்படும். எஸ். என். தனரட்னம் ஏ. ஜயகௌரி, பி. ஏ. மாரன், பி ஏ. மோகன் முதலியோர் இந் நாடகத்தில் தோன்றுகின்றனர். நாடகத்தின் கதாசிரியரும், டைரக்டருமான கலைச்செல்வனும் நடிக்கிறார்.

# ஊட்டியில் வளர்ந்த 'இது சத்தியம்'

சரவணா பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'இது சத்தியம்' படத்துக்கான 12000 அடிகள் எடுக்கப்பட்டு விட்டன. சுமார் 8000 அடிகள் வெளிப்புறக் காட்சியிலேயே இருப்பதால், கதை நிகழும் இடமான ஊட்டியிலேயே படமாக்கியுள்ளார்கள். வெளிப்புறக் காட்சிகளைச் சிறப்பிக்க, அதிக ஒளி அமைப்புக்குத் தேவையான 'ஆர்க்' விளக்குகள் யாவும் சென்னையிலிருந்தே ஊட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டன. சுமார் ஒரு மாத காலம் வரை படப்பிடிப்பைத் தொடர்ந்து நடத்திய பின்னர், குழுவினர் சென்னை வந்தனர். படப்பிடிப்பைப் பற்றியும் திருப்திகொண்டுள்ளனர்.

'இது சத்தியம்' கதாநாயகன் சௌரியாக அசோகனும், கதாநாயகி கஸ்தூரியாகச் சந்திரகாந்தாவும் நடிக்கின்றனர். டி. எஸ். பாலையா, துரைராஜ், கண்ணம்பா, ஸ்ரீரஞ்சனி, ராம்தாஸ், வீரப்பன், திலகம் ராஜகுமாரி ஆகியோரும் தோன்றுகின்றனர்.

வெளிப்புறக் காட்சிகளைப் பற்றி இப்படத்தில் டைரக்டர் சங்கர் தமது திருப்தியை வெளியிடும்போது, "ஏனைய படங்களின் வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்குவதற்கும், இப்படத்தின் முறைக்கும் வேறுபாடுகள் அதிகம் இருக்கின்றன. வேறு படங்களில் காதலர் சந்திப்பையோ, வேறு முக்கிய காட்சிகளையோதான் வெளிப்புறங்களில் படமாக்குவதுண்டு. இப் படத்தின் கதையே ஊட்டியில் நிகழ்வதாலும், கதையமைப்பின் படி முக்கால் பாகமும் வெளிப்புறத்தில் அமைகிறபடியாலும் காட்சிகளை ஊட்டியிலேயே படமாக்கினேன். காட்சிகள் திருப்திகரமாக அமைந்திருப்பதுடன், தொடர்புகளும் சிறப்பாக விருக்கின்றன" என்று கருத்துத் தெரிவித்தார்.



'நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறப்பேனு'? என்று அவனை நினைந்து கல்லும் கனிந்துருகப்பாடுகிறார் போலும் எஸ். எஸ். ஆர். 'நீங்காத நினைவு' படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன் இப்படித் தோன்றுகிறார்.

# தமிழ் ஊழியரின் கிளர்ச்சி வெற்றி பெற்றது

தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியலில் கையெழுத்திட்டுச் சம்பளம் பெற மறுத்து விற்பனைத் திணைக்களத் தமிழ் ஊழியர்கள் செய்த கிளர்ச்சி பயனளித்துள்ளது.

விற்பனைத் திணைக்கள ஊழியர்களின் ஜூன் மாதச் சம்பளப் பட்டியல்கள் தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன. தமிழ் அரசாங்க ஊழியர்கள் தங்களுக்கு விளங்காத பத்திரங்களில் பொறுப்பற்ற முறையில் கையெழுத்திட்டுச் சம்பளம் பெற மறுத்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திடம் முறையிட்டனர். அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினர் 26—6—63-ல் விற்பனைத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதன் பேரில் சம்பளப் பட்டியல்கள் உடனடியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழ் ஊழியர்களுக்கும் ஏனையோர்களுடன் சம்பளம் வழங்கப்பட்டது.

தமிழ் பேசும் ஊழியர்களின் வெற்றியைக் காணப்பொறாத சில சிங்கள ஊழியர்கள் விற்பனைத் திணைக்களத் தலைவருக்கு அனுப்ப ஒரு விண்ணப்பம் தயாரிப்பதாகத் தெரிய வருகிறது. அதில் சிங்களத் தேர்வுப் பரீட்சையில் தோன்றியவர்களுக்கு மொழி பெயர்ப்பு வேண்டியதில்லை எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம். சிங்களத் தேர்வுப் பரீட்சை எடுத்த தமிழ் ஊழியர்களை அவமானத்திற்குள்ளாக்க இந் நடவடிக்கையில் சிங்கள ஊழியர்கள் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகிறது.



வாளெடுத்து விசுவேன், வரும் பகையை வெல்லுவேன்! வாலைக் குமரியே! உன் வதனமதில் சுழலும் வாளுக்கு மண்டியிடாதிருக்க முடியவில்லையே என்று புஷ்பலதாவின் வதனத்தைக் கிள்ளி விளையாடுகிறார் ஆனந்தன்.

படம்: செங்கமலத் தீவு.

# செங்கமல தீவு

உண்மைக்கு அழிவில்லை, என்பதும், தூய காதல் வெற்றி பெறுவதும், தமிழ் பட உலகிற்குப் புதிய அம்சங்களல்ல. இவை இரண்டும் 'செங்கமலத் தீவு' கதையின் கருப்பொருட்களாகும்.

செழுமை நிறைந்த செங்கமலத் தீவின் வன பரிபாலன அதிகாரி, கபடதாரி—தீவின் பிரதம குரு, அழகே உருவான தீவின் குமரி, எதிரியை ஒழித்துக் கட்டுவதில் சிறிதும் தயக்கமின்றிச் செயற்படும் வன பரிபாலன அதிகாரியின் மாமன், அவரின் ஒரே செல்வ மகள்; இத்தனை பேரையும் நாம் செங்கமலத் தீவில் சந்திக்கிறோம்.

பழமையின் பிடியிலிருந்து சிறிதும் விடுபடாத செங்கமலத் தீவு, வேடதாரியான பிரதம குருவின் பிடியில் சிக்கிச் சீரழிகிறது. தீவின் குமரியை அடைவதே பிரதம குருவின் நோக்கம். அதற்கு உதவுகிறார், பதவியில் ஆசை கொண்ட குமரியின் பெரியப்பா மகன். குமரியோ வன பரிபாலன அதிகாரியை நேசிக்கிறார். இவர்கள் இருவரும் ஒன்றுபடுவதற்கிடையில் எத்தனை சோதனைகள், தடைகள். இவையனைத்தையும் வெற்றிகரமாகத் தாண்டி இணைந்து விடுகிறார்கள்.

சமையற்காரக் கந்தனாக வரும் எம். ஆர். ராதா தப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவர் என்பதை அறியும் பொழுது வி. கே. ராமசாமிக்கு மட்டுமல்ல, நமக்குக் கூட அதிர்ச்சியைக் கொடுக்கிறது.

ஆனந்தனின் துணிச்சல் ராஜ்ஸ்ரீயின் உள்ளத்தை மட்டுமல்ல, எல்லோரது உள்ளத்தையும் கொள்ளை கொள்கிறது.

பல குறைபாடுகளை உள்ளடக்கிய படமாக விருப்பினும் தீவின் எழிலைப் பார்க்கவும், இனிய இசையைக் கேட்கவும் செல்லலாம்.

—சங்கர்.

## அழுகை நின்றது

சரவணா பிலிம்சார் "யாருக்காக அழுதான்" என்ற படத்தைத்தயாரித்து வந்தனர். ஆரம்பத்தில் இப்படத்துக்கான கதாநாயகன் ஜோசப் பாகத்தில் சிவாஜி கணேசன் தோன்றி நடித்தார். பின்னர் அதே பாகத்தில் நடிக்க சந்திரபாபு ஒப்பந்தம் பண்ணப்பட்டார். ஆனால் இப்பொழுது படத் தயாரிப்பே நிறுத்தப்பட்டுவிட்டது.

இதன் மூலக்கதையை 'ஜெயகாந்தன்' எழுதியிருந்தார். திரைக்கதை வசனப் பொறுப்புகளையும், டைரக்ஷன் பொறுப்பையும் ஸ்ரீதர் ஏற்றிருந்தார். ஜெய காந்தனுக்கும் படத் தயாரிப்பாளர்கள், டைரக்டர் முதலியோருக்குமிடையில் அபிப்பிராய பேதங்கள் தோன்றியதன் காரணமாகப் படப்பிடிப்பு திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. டைரக்டர் ஸ்ரீதர் இதே படத்தை ஹிந்தியிலும் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார். இப்பொழுது 'யாருக்காக அழுதான்' முற்றாக நின்றுவிட்டது.

# தமிழ்ப் பணி தலை சிறந்தது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு. இருநூற்றுக்கு மேற்பட்ட அழியாத் தமிழ்ப் பெருநூல்களை ஆக்கித் தந்துள்ள அப்பாத்துரையார், தமிழ் மொழியின் உரிமையைக் காக்க தமிழரின் மானத்தைக் காக்க அறப்போரில் ஈடுபட்டு, ஆட்சியினரின் அடக்கு முறைக்கு ஆளாகித் தமிழகத்தின் தலைநகரின் வீதியொன்றிலே, குருதி சிந்த, கொடும் வெய்யிலிலே மயங்கிக் கிடந்து நம் வாழ்வுக்காகத் தன்னையும் தர முன்வந்த அப்பாத்துரையர், தமிழ்ப் புலவருக்கே உரித்தான, தமிழ்த் தொண்டருக்கே உடைமையான வறுமை என்னும் கொடும் பிணியால் இன்றும் வாடுகின்றாரென்றால், தமிழ் மக்களின், தமிழகத்தின் 'நன்றி கெட்ட தனத்தை' எங்கு சொல்லி அழுவது?

தமிழகத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய் என்பது இவர் பிறந்து வளர்ந்த ஊர். 25—6—1907ல் பிறந்தார்.

பன்மொழிப் புலவரின் ஆரம்பக் கல்வி சொந்த ஊரில். பின்னர் திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார். பின்னர் பிற பணிகளில் ஈடுபட்டிருக்கும்பொழுது தனியாகப் படித்துத் தமிழில் எம். ஏ. பட்டமும், ஹிந்தியில் "விசாரத்" பட்டமும் பெற்றார். இடையில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து வரலாறு, ஆங்கிலம் இரண்டுக்கும் ஆசிரியப் பயிற்சியும் பெற்றார்.

பன்மொழிப் புலவரின் வாழ்வு ஒரு இடத்தில் நிலையாக அமையவில்லை. சுமார் ஐந்து கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றி இருக்கின்றார். பச்சையப்பன் கல்லூரியில் கணக்காளராகப் பணியாற்றி உள்ளார். நான்கு தமிழ்ப் பத்திரிகைகளிலும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளிலும் ஆசிரியராகப் பணியாற்றி இருக்கின்றார். இந்திய அரசினர் செய்தி இலாகாவில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி உள்ளார்.

இவரிடம் தனிப்பட்ட முறையில் தமிழ், ஆங்கிலம், வடமொழி கற்று அறிஞர் ஆனவர் பலர். கவிஞர் கண்ணதாசன் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவ்வளவு பணிகளையும் இவர் செய்தது சுமார் 15 ஆண்டுகளின் இடையிலேயே. பிறருக்காகத் தன்னுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்காத தன்மை, அவரிடம் இயல்பாகவே அமைந்துள்ள மான உணர்ச்சியே, அவர் ஒரு இடத்தில் நிலைத்து நின்று பணியாற்றாமைக்குரிய காரணங்கள் எனலாம்.

ஒரு நிகழ்ச்சி.

ஒரு முறை காரைக்குடிக் குருகுலம் ஒன்றிலே ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார் பன்மொழிப் புலவர். ஒரு நாள் நிலத்தில் விரித்துக் கொண்டு உட்கார்ந்து சாப்பிடப் பாய் ஒன்றும் கிடைக்காததால், அருகில் கிடந்த பழைய தினசரித் தாள் ஒன்றை எடுத்து நிலத்தில் விரித்துக் கொண்டு உட்கார்ந்தாராம் உணவு உண்ண. உடனே அருகினில் அமர்ந்திருந்த 'குருகுலத்தின்' இயக்குநர், இவரை நோக்கி, "என்னய்யா, சரஸ்வதியின் மேல் உட்கார்ந்து அனர்த்தம் செய்கின்றீர்" என்றாராம். உடனே இவர் 'செத்துப் போன சரஸ்வதிக்காக இப்படி வருந்துகின்றீர்களே; இதோ உயிருடன் இருக்கின்றேனே சரஸ்வதி; என்னைக் கவனியுங்கள்' என்றாராம். குருகுலத்தின் இயக்குநரோ பழமையின் காவலர். அதனால் ஏற்பட்ட சொற்போர்—சொற்போரின் விளைவு—அடுத்த நாளே பன்மொழிப் புலவருக்கு அங்கு வேலை போய்விட்டது.

இது அவருடைய தன்மான உணர்ச்சியின் விளைவு எனலாம்.

1949ல் பெரியார் உருவாக்கி விட்ட முரணால், அறிஞர் அண்ணா தி. மு. க. வைத் தொடங்கினார். அப்பொழுது மத்திய அரசாங்கச் செய்தி இலாகாவில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய பன்மொழிப் புலவர் அண்ணாவின் இயக்கத்தில் சேர்ந்தார்—அதன் விளைவு அவர் செய்த அரசாங்கப் பணியை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டதுதான். தான் கொண்ட கொள்கைக்காக எதையும் இழக்கும் இவருடைய உள்ளத்தையே காட்டுகின்றது இந்நிகழ்ச்சி.

பன்மொழிப் புலவரின் பணி பல துறைகளை உண்டாக்கியது. முதலில் ஆசிரியராகப் பணியாற்றிப் பலரை அறிஞராக்கியுள்ளார்.

குமரன், விடுதலை, திராவிடன், பொன்னி ஆகிய நான்கு தமிழ் ஏடுகளிலும் Liberator, Justice ஆகிய இரண்டு ஆங்கில ஏடுகளிலும் ஆசிரியராகப் பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றவர். இவற்றுள் திராவிடன் என்ற தமிழ் ஏடும், Liberator என்ற ஆங்கில ஏடும் தினசரிகளாக வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேனாட்டு இலக்கியக் கதைகள், வியப்பூட்டும் சிறு கதைகள், சிங்காரச் சிறு கதைகள், சேக்ஷ்பியர் கதைகள்—இவை எல்லாம் குழந்தை இலக்கியம் வளருவதற்காகப் பன்மொழிப் புலவர் ஆக்கித் தந்த பயனுள்ள நூல்கள். பெரும்பாலும் தூய எளிய தமிழ் நடையில் மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்களே.

டேவிட் லிவிங்ஸ்டன், பெஞ்சமின் பிராங்களின் தன் வரலாறு, பெர்னாட் ஷா, முனைவர் ஐன்ஸ்டீன், ஆங்கிலப் புலவர் வரலாறு, ஓவியர் இரவிவர்மா—இந்நூல்கள் இவர் எழுதி வெளியிட்ட வாழ்க்கை வரலாற்று நூல்கள்.

தென்னாடு, தென்னாட்டுப் போர்க் களங்கள், வெற்றித் திருநகர், இந்தியாவின் விடுதலை இயக்க வரலாறு போன்றவை இவருடைய சிறந்த வரலாற்று நூல்கள்.

தென்மொழி—மொழி ஆய்வில் இவருடைய பங்கை எடுத்துக் காட்டும் சிறந்த நூல்.

வாழும் வகை, நல்வாழ்வுக் கட்டுரைகள், வருங்காலத் தலைவர்கட்கு போன்ற நூல்கள் இளைஞர்க்கு நல்ல வழி காட்டி நூல்கள்.

பேரின்பச் சோலை, 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், திருநிறை ஆற்றல், இந்திய நாகரிகத்தில் திராவிடர் பண்பு—போன்றவை இவருடைய மொழியாக்கத் திறமைக்குச்சான்று தருவன.

'India's Language Problem'—இந்தியாவிடுதலையடைந்த பொழுது எழுப்பப்பட்ட மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண எழுதப்பட்ட ஒரு சிறந்த நூல். ஆசிரியர் மறைமலையடிகள், இந்நூலுக்கு மதிப்புரை தந்துள்ளார்கள்.

இப்படியே பலப் பல நூல்கள்—பலப் பல துறைகளில்.

தமிழ்ச் சொல்லாக்கத் துறையில் இவருடைய பணி தலையாய பணி எனலாம். தூய தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுபவர் நம் பன்மொழிப் புலவர். தமிழின் மரபு கெடாமல், தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருபவர். சான்றுகச் சில காண்போம்.

Autobiography — தன் வரலாறு.

Doctor (Dr. L.H., D.Sc. Ph. D.) முனைவர்.

Philosophy — மெய் விளக்கம்.

Bicycle — ஈருருளி.

Dynasty — கால்வழி.

Anarchy — பாழாட்சி

போன்றவை சில.

அவர் எழுதி வெளியிட்டுள்ள கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதியில் அறிவியற் சொற்களுக்குப் பல தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருகின்றார்.

பன்மொழிப் புலவருடைய நூல்களில் நல்ல தூய தமிழ் நடையைக் காணுகின்றோம். உணர்வைக் கிளறும், சிந்தனையைத் தூண்டும் நடையைக் காணுகின்றோம், ஆழ்ந்த கருத்துக்களைக் காணுகின்றோம். அவருடைய நூல்களில் வரிக்கு வரி, பக்கத்துக்குப் பக்கம் புதிய புதிய கருத்துக்களைக் காணுகின்றோம். அவருடைய எந்த நூலை எடுத்துப் படித்தாலும் ஒரு நல்ல நூலைப் படித்திருக்கின்றோம் என்ற உணர்வு நமக்கு உண்டாகின்றது.

அவருடைய சிறந்த நூல்களிலே ஒன்று 'உலக இலக்கியங்கள்' என்ற நூல். அந்த நூலிலே பிராஞ்சு, கிரேக்கு, ஜெர்மன், சீனம், ரஷ்யன், உருது, பாரசீகம், கன்னடம், தெலுங்கு, வடமொழி போன்ற இலக்கியங்களின் வரலாறுகளைக் கூறுகின்றார். அந்தந்த இலக்கியங்களின் இயல்பை, வளர்ச்சியை எடுத்துக் கூறி, குறை நிறைகளைக் கண்டு கூறி, அந்த இலக்கியங்களினின்றும் தமிழ் இலக்கியம் எவ்வெவ் வகைகளில் உயர்ந்தது என்பதையும், அவைகளில் இருந்து தமிழ் இலக்கியம் கற்றுக்கொள்ள வேண்டியவை எவை எவை என்பதையும் கூறிச் செல்கின்றார். இது போன்ற பல சிறப்புக்களை அவருடைய நூல்களில் காணுகின்றோம்.

அவருடைய தலையாய படைப்புக்களில் பிறிதொன்று, 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' எனலாம். தென்னகத்தில் நடைபெற்ற போர்க்களங்களை, சங்க காலத்திலிருந்து வரிசைப் படுத்தி அதன் அடிப்படையில் தமிழகத்தின் வரலாற்றை ஆக்கித் தந்துள்ளார் பன்மொழிப் புலவர்.

'பன்மொழிப் புலவரின் தமிழ் நடையில் உயிர் இல்லை, கவர்ச்சி இல்லை, செயற்கை நடை போல உள்ளது' என்ற குற்றச்சாட்டு அண்மையில் ஒருவரால் வெளியிடப்பட்டது. தனக்குத் தெரிந்த பிற மொழிச் சொற்களை எல்லாம் தமிழோடு கலந்து எழுதும் அந்த 'மணிப்பிரவாள' எழுத்தாளருக்கு, புலவரின் தமிழ் நடையில் 'உயிர்' இருப்பது தெரிய முடியாது.

புலவரின் தமிழ் நடையில் கவர்ச்சி உண்டு; அழகு உண்டு; அவருடைய நடை வெறும் சொற் கூட்டல்களல்ல; அவருடைய உயிர்த் துடிப்புள்ள தமிழ் நடையைக் காண வேண்டுமானால், அவருடைய 'வாழ்க' 'தமிழ் முழக்கம்', 'சரித்திரம் பேசுகிறது' போன்ற நூல்களில் காணலாம்.

பன்மொழிப் புலவர் தமிழகத்துக்குச் செய்துள்ள பணியின் அளவு மிகப் பெரிது என்றாலும் அவருடைய தகுதியை, அவர் மொழிக்கும், நாட்டுக்கும் செய்துள்ள, செய்துவரும் பணியை இன்னும் தமிழகம் நன்கு உணரவில்லை. காரணம் தமிழகத்தில் நடுநிலையுடன் கூடிய திறனாய்வுக் கலை வளராததே. விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருந்து நூல்களை ஆராய வேண்டிய திறனாய்வுத் துறையினர், நூலாசிரியரின் கொள்கை, அவர் சார்ந்துள்ள இயக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து நேர்மை தவறி விடுகிறனர்.

உண்மையான முறையில், நேர்மையான வழியில் தமிழகத்தின் இலக்கிய வரலாறு காணப்படும்பொழுது, அதில் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் பணி சிகரமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## இலட்சிய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக நிகழ்ந்த கறுப்புக் கொடி நிகழ்ச்சியே திரு. கந்தையாவின் உயிரைப் பலிவாங்கியுள்ளது.

இன்றும் தமிழ் பேசும் மக்களில் ஒரு சிலர் ஆட்சியாளருக்கு ஆலவட்டம் பிடிப்பதிலும் அதன் மூலம் சில பல சலுகைகளைப் பெற்றுத் திருப்திப்படுவதிலுமே காலம் கழிக்கிறார்கள். இந்நிலை மாறினால்தான் நாம் சுதந்திரமாக வாழ முடியும்.

திருவாளர்கள். செ. கோடீஸ்வரன், ச. வ. பீற்றர்பிள்ளை, மாணிக்கவாசகர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்கள்.

## என் மீது....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் புரட்டிப் பார்க்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், தூக்கிலிடப்பட்டார்கள் என்றுதான் படிக்கிறோம். அடித்துக் கொல்லப்பட்டார்கள் விடுதலை வீரர்கள் என்று எழுதப்பட்ட வரலாறுகள் அபூர்வம். ஆனால் நமது நாட்டிலோ, விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளவர்கள் பொலீசாரின் தாக்குதலாயே இறந்திருக்கிறார்கள்.

எனவேதான் நான் பகிரங்கமாகப் பொலீசாரின் மீது குற்றம் சுமத்துகிறேன். இந்த மேடையில் மட்டுமல்ல, இன்னும் ஆயிரம் மேடைகளிலும் இதையே தான் கூறுவேன். பொலிஸ் பகுதிக்குச் சவால் விடுகிறேன், 'முடியுமானால் என் மீது நடவடிக்கை எடுங்கள்.'

## காட்டையும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

க்குமட்டும், ஓயமாட்டோம் என்று சங்கநாதம் எழுப்பிய இலங்கைத் தமிழரசுக் கட்சி இலங்கைத் தொழிலாளர் கழகத்தை அமைத்துள்ளது. அக் கழகம் ஒன்றே உங்கள் உரிமையைப் பெற்றுத் தர வல்ல ஒரேயொரு கழகமாகும்.

உங்கள் பிரச்சினைகள் எதுவாய் இருப்பினும் சரி, எங்களுக்கு, உடன் எழுதுங்கள். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும் விபரங்கள் அடங்கிய விபரப் பட்டியல் ஒன்று இனமாக அனுப்பி வைக்கப்படும்.

விபரங்களுக்கு:
பீ. எம். திசாநாயக்க
கம்பளை.

ப்ரம்மீ கேசரஞ்சன தைலம்



கண்ரூடு, கண் எரிச்சை, தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல், முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச்செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரை மயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100வயதானாலும் "நரையும்" "வழுக்கையும்" உண்டாகாது. நாரீமணிகள் செயற்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

பேர: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எ. ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

எஸ். எஸ். குரு மெடிக்கல் ஹால்
செட்டித் தெரு
கொழும்பு 13.

## சட்டத்தை முறியடிப்பது...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் இனமும் தமிழ் அரசு ஊழியரும் ஒரு பொருளாதாரச் சோதனைக் கட்டத்தை அடைந்துள்ளார்கள். அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள், வர்த்தகக் கொள்கைகள், தொழிற் கொள்கைகளும், தமிழ் பேசும் பகுதிகளைப் பொறுத்தமட்டத்தில் ஏகாதிபத்திய அரசுகள் குடியேற்ற நாடுகள் சம்பந்தமாகக் கடைப்பிடிக்கும் கொள்கைகளை ஒத்திருக்கின்றன. எனவே நாமே எமது பொருளாதார முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும். தமிழ் அரச ஊழியர்களைத் தமிழ் பேசும் பகுதிகளின் பொருளாதார நலத்துக்கும்-அதன் மூலம் தமது நலத்துக்கும் பயனளிக்கும் வகையில் வேண்டியவற்றைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். எங்கள் வருங்காலம் எங்கள் பகுதிகளில்—எங்கள் மத்தியில்தான் இருக்கிறது. எனவே வருங்காலத்தை வளமாக்கக் கூடிய முறையை இன்றிருந்தே கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்க புதிய நிர்வாகிகள்:

தலைவர்: செ. கோடீசுவரன் (ஒருமனதாக)
துணைத் தலைவர்கள்: மு. முருகுப்பிள்ளை
பொ. நவரத்தினம்
பொதுச் செயலாளர்: இ. பாலசுப்பிரமணியம் ,,
துணைச் செயலாளர்கள்: த. மகேந்திரன்
க. முருகுப்பிள்ளை
பொருளாளர்: சு. தருமலிங்கம், ,,
துணைப் பொருளாளர்: செ. குமாரசாமி ,,
சி. பாலசுந்தரம் ,,

மற்றும் 21 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

# பரிசு: 3 தங்கப் பதக்கங்கள் 16 வெள்ளிப் பதக்கங்கள் ★ புத்தகப் பரிசில்கள் ★ பரிசுப் பத்திரங்கள்

### விதிகள்

(1) 11—9—1963ல் 19 வயதுக்கு மேற்படாத எந்த இளைஞரும் (ஆண்களும் பெண்களும்) இப்போட்டியில் பங்கு பற்றலாம்.

(2) வயது குறித்து மத்தியஸ்தர்கள் சந்தேகப்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டத் தயாராக இருத்தல் வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட 5 தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து பேசல் வேண்டும்.

(4) ஒருவர் ஆகக் கூடியது பத்து நிமிடங்களுக்கு மட்டுமே பேச அனுமதிக்கப்படுவர்.

(5) 'சுதந்திரன்' பத்திரிகையில் பிரசுரமாகும் விண்ணப்பப்பத்திரங்களையே நிரப்பி அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் தமிழ் மொழியிலேயே நிரப்பப்படல் வேண்டும்.

(6) விண்ணப்பப்பத்திரம் அனுப்பும் போது உறையின் இடதுபுற மேல் மூலையில் 'சுதந்திரன் பேச்சுப் போட்டி' என்று தெளிவாக எழுத வேண்டும்.

### முடிவுத் தேதி

(7) 1963ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(8) விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

பேச்சுப் போட்டி
ஆசிரியர்
சுதந்திரன்
தபால் பெட்டி 1183
கொழும்பு-12.

### தலைப்புகள்

பேச எடுத்துக் கொள்ளும் தலைப்புக்கள்:-

1. இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை
2. பாரதிக்குப் பின்......
3. காந்தி அண்ணல்
4. நமது பொருளாதாரம் உயர......
5. தமிழ் மொழி—வாழ்வும் வளமும்

## ஜூலை 16ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

கண்டிப் பகுதி இளைஞர்களின் வேண்டுகோளை நிறைவேற்றியதைப் பாராட்டி பலர் கடிதம் எழுதியுள்ளார்கள். அதே நேரத்தில் போட்டி விபரங்களையும் விதிகளையும் அனுப்பி வைக்கும்படியும் அவர்கள் வேண்டியுள்ளார்கள். எனவே அவர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப மறுபடியும் விதிகளையும் இதர விபரங்களையும் வெளியிடுகிறோம்.

கண்டிப் பகுதி இளைஞர்கள் உட்படப் பலர் போட்டி மனு அனுப்பும் திகதியையைப் பிற்போட முடியுமா என்று கேட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப முடிவு தேதியை ஜூலை 16ம் திகதிவரை பிற்போட்டிருக்கிறோம்.

அட்டன் கைலன்ட்ஸ் கல்லூரி மாணவர்களின் முன்மாதிரியைப் பின் பற்றி இதர பகுதிகளில் உள்ள கல்லூரி மாணவர்கள் பலரும் கூட்டாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறார்கள். இது போற்றக்கூடிய முயற்சி.

சிலர் கூட்டாக விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று நாம் குறிப்பிட்டதைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

கூட்டாக விண்ணப்பித்துக் கொள்வதென்றாலும், ஒவ்வொருவரும் தனித்தனி விண்ணப்பப் பத்திரங்களையே பூர்த்தி செய்தல் வேண்டும். ஆனால் அவற்றை நமக்கு அனுப்பும் பொழுது மட்டும் ஒன்றாக ஒரு கடித உறையில் இட்டு அனுப்பலாம். அப்படிக் கூட்டாக அனுப்புகின்ற பொழுது கல்லூரி முதல்வரிடமோ அல்லது வகுப்பு ஆசிரியரிடமோ இருந்து ஒரு கடிதம் இணைத்துக் கொள்வது நல்லது.

அடுத்து, போட்டி நடைபெறும் இடம் எங்கே? போட்டி நடைபெறும் தேதியைத் தெரியப் படுத்தவும் என்று பலர் தினம் தினம் கடிதம் எழுதுகிறார்கள். அவர்கள் போட்டி நடை முறைகளைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. போட்டி நடைபெறும் இடமும் காலமும் தனித் தனியாக அறிவிக்க இயலாது. அவ்வப்பொழுது இப் பகுதியில் குறிப்பிடப்படும் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

பேச்சுப் போட்டியில் பெண்கள் காட்டுகிற அளவு ஆர்வம் ஆண்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. நமக்கு வரும் பெரும்பான்மையான கடிதங்கள் மாணவிகளிடம் இருந்தே வருகின்றன.

போட்டி பற்றிய ஏனைய விளக்கங்களுக்கும் அறிவித்தல்களுக்கும் இப்பகுதியைத் தொடர்ந்து கவனிக்கவும்.

பேச்சுப் போட்டி ஆசிரியர்

### பரிசில் விபரங்கள்

ஒவ்வொரு பிரிவிலும் நடைபெறும் இடை இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் முதல் மூவருக்கும் பரிசில்கள் உண்டு.

இடை இறுதிப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதங்கங்களும் மூன்றாவது இடத்தைப் பெறுபவர்களுக்கு புத்தகப் பரிசில்களும் வழங்கப்படும்.

இறுதித் தேர்வில் கலந்து முதல் மூன்று இடத்தையும் பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

### எட்டுப் பிரிவுகள்

இடை இறுதித் தேர்வு நடைபெறும் இடங்கள்:-

1. அட்டன்
2. பதுளை
3. மட்டக்களப்பு
4. திருக்கோணமலை.
5. மன்னார்
6. வவுனியா
7. யாழ்ப்பாணம்
8. கொழும்பு

### இறுதிப் போட்டி பற்றிய விபரம்

எட்டு இடங்களிலும் இடை இறுதிப் போட்டி முடிந்ததும், அந்த இடங்களில் பரிசில் பெற்ற முதல் இருவரும் இறுதிப் போட்டியில் பங்குகொள்ள உரிமை உடையவர்கள்.

இறுதிப் போட்டி கொழும்பு நகரில் நடைபெறும். இறுதிப் போட்டியைத் தொடர்ந்து நடைபெறும் விழாவில் பரிசில் பெற்ற மூவருடைய பேச்சும் இடம் பெறும்.

இறுதிப் போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கும், இடை இறுதிப் போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கும் கொழும்பு நகரிலேயே பரிசில்கள் வழங்கப்படும்.

### மேலும் சில விபரங்கள்

எட்டு இடங்களிலும் நடைபெறும் இடை இறுதிப் போட்டியில் பரிசு பெறும் 24 பேருடைய புகைப்படங்களும் சுதந்திரனில் பிரசுரமாகும். இடை இறுதிப் போட்டி நடைபெறும் எட்டு இடங்களிலும் 'சுதந்திரன்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒருவர் சமுகம் தருவார். இடை இறுதிப் போட்டி நடைபெறும் எட்டு இடங்களுக்கு அவ்வப் பகுதியைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்தஒருவர்போட்டி ஒழுங்குகளை கவனிப்பதற்கு நியமிக்கப் படுவார். இது பற்றிய விபரங்கள் தொடர்ந்து வரும் இதழ்களில் வெளியாகும்.

இடை இறுதிப் போட்டி நடைபெறும் காலம், இடம் பற்றிய விபரங்களுக்கும், இறுதிப் போட்டி பற்றிய விபரங்களுக்கும் சுதந்திரனை தொடர்ந்து கவனித்து வரவும்.

......................இங்கே வெட்டுங்கள்......................

## "சுதந்திரன்" பேச்சுப் போட்டி விண்ணப்பப்பத்திரம்

பெயர்..................................................

முகவரி..........................................

..........................................

மாணவராயின் பாடசாலை முகவரி:-

..................................................

..........................................

போட்டியில் கலந்துகொள்ளும் இடம்..........................................

பேச எடுத்துக்கொண்ட பொருள்..................................................

பிறந்த திகதி......ஆண்டு.........மாதம்.........திகதி.........

..........................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

.......................
கையொப்பம்




## மங்கையர் உள்ளம்

—வே. தெய்வநாயகி, துணுக்காய்—

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பாடினார் கவிமணி. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று போற்றிச் சென்றார் திருவள்ளுவர். "பெண் தெய்வத் தன்மை வாய்ந்தவள்" என்று எடுத்துக் காட்டினார் திரு. வி. க.

இப்படி எத்தனை எத்தனையோ பெரியார்கள் பெண்ணின் பெருமையை வியந்து போற்றியுள்ளனர். அதனால்தான் மங்கையர் உள்ளம் எத்தகையதாக இருக்குமென்பதை ஆராய நானும் முன் வந்தேன். சின்னஞ் சிறு வயதில் சிற்றில் இழைத்து, சிறு தேர் உருட்டி விளையாடும் அவள் பருவமடைந்ததும் வாழ்க்கைத் தேரை உருட்ட ஆயத்தமாகிறாள். சிறு வயதில் அவள் இழைக்கும் சிற்றிலை எல்லாம் அழித்து மகிழ்கிறான் சிறுவன். அதை அவள் பொருட்படுத்துவதேயில்லை. அவனுடன் கோபிப்பதே இல்லை. ஏன்? வாழ்க்கை என்னும் மாளிகையில் வாழ்ந்து சிறப்படைய அவள் இப்பொழுதே தன்னைத் தயார் செய்கின்றாள்.

அன்பு, அமைதி, வீரம், தாய்மை இவையாவுடன் கொண்டதே ஓர் மங்கையின் உள்ளமாகின்றது. ஆணவத்திற்கு அடிபணியாத அவள் உள்ளம் அன்புக்குத் தலை வணங்குகிறது. அவள் கொண்ட அமைதியால் உலகில் சாந்தி நிலவுகிறது. அவள் உள்ளத்தில் சுடர் விட்டெரியும் வீரக் கனல் நாடெங்கும் பரவுகிறது. அவள் வீரத் தாயாகிறாள். சங்க கால இலக்கியங்களைப் புரட்டிப் பார்த்தால் இவ்வுண்மைகள் யாவும் புலனாகும். அன்று பெண்ணினத்தின் சுதந்திரம் அவ்வளவு கவனிக்கப்படவில்லை என்றாலும் கூட, அன்று அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைத்தான் நாம் இன்றும் உதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். அன்று அவள் உள்ளத்தில் தேசப்பற்று முன்னணியில் நின்றது. வீரமங்கை ஜோன், ராணி பத்மினி இவர்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். இனி அவள் உள்ளம் கற்பெனும் பெரு நெருப்பால் ஆக்கப்பட்டது. தமயந்தியை நெருங்க வந்த வேடன், சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன், பாஞ்சாலியைத் துகிலுரிந்த கௌரவர் யாவரும் அழிந்தொழிந்தது இவர்களின் கற்புத் தீயாலேயே! பெண்ணினம் பெருமையுடனும் அஞ்சாமலும் வெளியுலக வாழ்வில் ஈடுபட உறுதுணை புரிவதும் இக் கற்பு நெறியாகும்.

பண்டைக் காலப் பெண்ணினம் எவ்வளவுக் கெவ்வளவு தன் பண்பாட்டைக் காத்து வந்ததோ, இன்று அவ்வளவுக் கவ்வளவு அது விலை பேசப்படுகின்றது. மேலைநாட்டுக் கலாச்சாரம் தமிழகப் பெண்களிடையே இன்று மலிந்துகிடக்கின்றது. இதைக் காணுந்தோறும் நம்மவர் உள்ளம் கொதிக்கின்றது. பண்பாட்டின் பிறப்பிடமாயிருந்த அவள் உள்ளத்தில் இது எப்படித் தொத்திக் கொண்டது? அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயர் அவள் உள்ளத்தில் தூவிவிட்ட நெருஞ்சி முள் இது. இது அவளைக் குத்துவதை அவள் உணரவில்லை. ஆனால் நம்மைக் குத்திக் கொல்கிறது. ஆகவே, இன்றைய தமிழகப் பெண்ணினம் என்று ஆங்கில நாட்டுக் கலாசாரத்தைப் புறக்கணிக்கின்றதோ அன்றே அவள் உள்ளம் மீண்டும் புனர்வாழ்வு பெறும்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லுறீர்களா?..... நான் யதார்த்தமெண்டு இன்று எழுதப்படுபவையை மறைமுகமாக ஆச்சியோட கதைக்கேக்க கேலி செய்ததை உண்மையெண்டு நம்பிவிட்டீர்களே?...'-என்று சரசு சிரிக்கிறுள். ராஜாவின் முகம் வாடுகிறது. அதை அவள் பார்த்து விடுகிறுள்.

'அப்படி எண்டா நீங்கள் பெரிய யதார்த்தவாதி போல இருக்கு!...'என்கிறுள்.

'ஆ!... அப்படித்தான் சொல்ல வேண்டும்!...'

'வாழ்க்கையில காதல் என்பது யதார்த்தமில்லையா?...அதனைப் பற்றி ஏன் கேலி செய்யிறீங்க!...'

'வாழ்க்கையில காதல் என்பது ஓரம்சமேயொழிய, அதுவே வாழ்க்கையில்லை... வாழ்க்கையில் அவதானிக்க வேண்டிய பல பிரச்சனைகளை விட்டு விட்டு, அவற்றிற்கு பரிகாரம் தேடவேண்டிய முறைகளை விட்டு விட்டு 'முக்கோணக் காதல் கதை'களையே எழுதி திருப்பித் திருப்பி 'ரொட்டி' சுட்டுக் கொண்டிருப்பதால் சமூகத்துக்கு என்ன பயன்?...'

'அப்படியானுல் வாழ்க்கையின் பிரச்சினைகளை அப்படியே சித்தரிப்பதுதான் உண்மையான இலக்கியம் என்கிறீர்களா...?

'அப்படித்தான் சொல்ல வேண்டும்!...'

'அப்படியானுல் அவை 'செய்தி' யாகவும் இருக்கலாமல்லவா?...'

'அப்படியல்ல!... எழுத்தாளன் ஒரு செய்தியை—ஏன் அதுவே அவனுடைய படைப்புக்கு 'கருவாகவுமிருக்கலாம்— அந்த செய்தியை கலையழகோடு வெளிப்படுத்துகையில் அது சிறந்த யதார்த்த இலக்கியமாகின்றது!...'

'நீங்களே ஒப்புக் கொண்டு விட்டீர்கள்!.........வாழ்க்கையைப் படம் பிடிப்பதல்ல இலக்கியம்... அதனைக் கலையழகோடு வெளிப்படுத்துகையில் தான் அது இலக்கியமாகின்றது என்று!...ஆகவே உங்கள் யதார்த்த இலக்கியங்கள் கலையழகோடு மிளிரா இடத்தில் அவற்றைப் பிரச்சாரமென்று—கொள்கை அறிக்கை என்று புறக்கணித்து விடலாமா?...'

ராஜா விழிக்கிறுன்! சரசு தொடருகிறுள்:

'அது சரி உங்கள் யதார்த்த எழுத்தாளர்கள் எல்லாம் வாழ்க்கைப் பிரச்சினைகளைத்தான் அலசி எழுதுகிருர்களா?...'

'ஆம்! அப்படித்தான் நினைக்கிறேன்!...'

'சரி போகட்டும், அவர்கள் வழிகாட்டுகிருர்கள் என்று கூறுவிட்டாலும், அப்பிரச்சினைகள் பற்றிய சிந்தனையை வாசகர் மனதிலே எழுதிவிடுகிருர்களே போதாதா?...'—என்கிறுன் ராஜா.

'அப்படியில்லையே!.....உண்மையான யதார்த்த இலக்கியாசிரியனின் கடமை பிரச்சினைகளோடு தன் சிந்தனையின் வெளிப்பாட்டையும் காட்ட வேண்டும். பிரச்சினையை முடிவிலே வாசகர் மனதிலே எழுப்பிவிடுவது சிறந்த இலக்கியாசிரியன் கையாளும் ஒரு 'உத்தி'யே தவிர வேறில்லை. இந்த உத்தி முறையைக் கையாளும் எழுத்தாளர்களிடையே முற்போக்கு பிற்போக்கு என்ற பிரிவுகளில்லை! எல்லா எழுத்தாளனுமே இதனைக் கையாளலாம். ஆனல்.... முற்போக்கு எழுத்தாளன் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களுக்கு கடமை கொஞ்சம் கூடவே இருக்கிறது. தனது முற்போக்கு எண்ணத்தை, அது எது, எந்த வழியில் சென்ருல் இப் பிரச்சினைகளை நாளடைவில் அகற்றலாம் என்று வாசகர்களுக்கு 'புதிய பாதை' யைக் காட்ட வேண்டும். அதனை விட்டு விட்டு 'தொழிலாளர் பிரச்சினைகளை எழுதுகிறேன், ஆதலால் நான் யதார்த்த, முற்போக்குவாதி!' என்று கூறுவது தவறு. இப்படிக் கூறுவதால் மற்ற எழுத்தாளர்கள் ஒரு சமுதாயப் பிரிவையே ஒதுக்குவதாக பொருள் கொண்டு விடலாம்!...

'...எழுத்தாளன் என்பவன் தன்னைச் சூழ்ந்துள்ள சமூகத்தையே பெரும்பாலும் கதைப் பொருளாகக்கொள்கிருன். தொழிலாளியான எழுத்தாளன் எழுதும்போது தங்களிடையே நிலவும் பிரச்சினைகளை எழுதுகிருன்... அதே போல் உயர் வகுப்பிலுள்ள ஒருவன் எழுதும் போது தங்களிடையே உள்ள பிரச்சினைகளை எழுதுகிருன்...மத்திய தர வகுப்பு எழுத்தாளன் தனது பிரச்சினைகளை எழுதுகிருன்...... ஆகவே பிரச்சினை என்பது உலகப் பொது! அது சமூகப் பிரச்சினையானுலும் சரி, அரசியல் பிரச்சினையானுலும் சரி, பொருளாதாரப் பிரச்சினையானுலும் சரி...' ஆகவே எந்த எழுத்தாளனும் 'தீர்வு' காண வேண்டியது என நினைக்கும் பிரச்சினைகளுக்கே உருவம் சமைக்கிருன். ஆகவே எழுத்து என்பதோ, இலக்கியம் என்பதோ பொதுவாக அவை எந்தளவுக்கு கலையழகோடு மிளிருகின்றது என்பதனைக் கொண்டே எடை போடப் படுகிறது...'—சரசு அவனுக்கென்ன விரிவுரை நடத்துகிருளா?......ராஜாவுக்கு திகைப்பு நீள்கிறது.

'என்ன இருந்தாலும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைகின்ருர்கள்தானே...'—என்கிறுன் ராஜா.

'உங்கள் எழுத்தாளர்களில் பெரும்பாலோர் யதார்த்தம் என்று கூறிக் கொண்டு 'பச்சை' யாக எழுதுகிருர்களே யொழிய, பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கேற்ற அறிவோ, ஆற்றலோ, கல்வியோ உடையவர்கள் என நினைக்கிறீர்களா?...'

இல்லையென்று உதடசைய, ராஜா திகைக்கிருன்.

'சரசு!... உண்மையிலேயே நீங்கள் இலக்கியம் பற்றி ஈழத்து இலக்கியத்தின் நிலை பற்றி — நன்கறிந்திருக்கிறீர்கள்......எவ்வளவு அழகாக சில உண்மைகளை எடுத்துக் கூறினீர்கள்... நீங்கள் சுட்டிக்காட்டிய பலவற்றைப் பற்றி இதுவரை நான் சிந்திக்கவே இல்லையே!... இந்த உதவிக்கு என் மனமார்ந்த நன்றி!...'—என்று கூறிச் சிரிக்கிருன்.

'சரசு!... நீ பாக்கியசாலியடி!...' அகத்திலிருந்து யாரோ குரல் கொடுத்துக் கூவ, சரசு மானஹம்சத் தடாகத்தில் நீந்தும் அன்னப் புள்ளாகிருள்.

ராஜா தொடர்ந்து பேசுவது, கனவில் யாரோ பேசுவது போல் காதில் விழுகிறது.

'...இலக்கியம் பற்றிய கருத்துக்களில், நீங்கள் பாலாவை ஒத்திருக்கிறீர்கள்!...'

'பாலாவா?..... யாரது"...... அவரும் ஒரு எழுத்தாளரா? ...நான் அப்படி ஒரு பெயரைக் கேள்விப் பட்டதே இல்லையே!...'

'இல்லை...அவன் எழுத்தாளனில்லாவிட்டாலும், ஒரு சிறந்த இலக்கிய ரசிகன்... என்னோட அடிக்கடி இங்கு வருவானே... சிவப்பா...உயரமா...என் உயிர் நண்பன்...'

'அவரைக் கண்டிருக்கிறேன்!......ஆனல் கதைத்ததில்லை...'

'அவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்!...'

'அவரைப் பற்றி அறியாமல், நான் அபிப்பிராயம் சொல்லலாமா?...... ஆனல் ஒன்று சொல்ல முடியும்!... அவர் உங்கள் நண்பரான படியால் நிச்சயம் நல்லவராகத்தானிருக்க முடியும்!...'

'அடடா!... நல்ல அழகாகப் பேசுகிறீர்களே!...அப்படிப்பட்ட நண்பனுக்கு இப்ப ஒரே மன வேதனை .அதனைத் தீர்க்கும் பொறுப்பு உங்கட கையிலதானிருக்கு!...'

'என் கையில் அவர் மன வேதனையைத் தீர்க்கும் பொறுப்பு இருக்கிறதா...... அது என்ன?...'—சரசு கலங்கிப் போய்க் கேட்கிருள்.

ராஜா மெதுவாக பாலாவின் உள்ளக் கிடக்கையை வெளியிட....

'போதும்!...நிறுத்துங்கள்!. ...விளையாட்டுக்கு கூட இனிமேல் இப்படிக் கூறினுல் நான்......நான்......!' என்று அவள் வாயைத் தனது மலர்க்கரங்களால் பொத்தியவாறு ஆவேசமாகக் கூவியவள், வார்த்தைகள் முடியு முன்னரே வேதனை தாளாது விம்மி விம்மி அழுகிருள்

(தொடரும்)

# கழகச் செய்திகள்

## அமரர் கந்தையாவுக்கு அக்கரைப்பற்றில் அனுதாபம்

அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு ஸ்ரீசித்தி விஞயகர் ஆலய வீதியில் இம் மாசம் 12ந் திகதி பி.ப. 3-30 மணியளவில் திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் மரணத்தை முன்னிட்டு ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊர்ப் போடியாரும் அக்கரைப்பற்று தமிழரசுக் கட்சிக் கிளைத் தலைவருமான திரு. த. சம்புநாதன் தலைமை வகித்து உரை நிகழ்த்திஞர்.

கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற திரு. கந்தையா அவர்களுக்கு அஞ்சலி செய்யுமுகமாக ஐந்து நிமிடங்கள் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

தலைவர் உரை நிகழ்த்துகையில், 'தமிழ் பேசும் மக்களின் குறை களைய வந்த தலைவர்களில் மூவர் பிராப்பதி அடைந்து விட்டார்கள். அவர்களின் மரணம் தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும் என்ருர். தொடர்ந்து பேசிய அவர் திரு. கந்தையா அவர்களைத் தமிழ் பேசும் மக்கள் இழந்து விட்டது அவர்கள் செய்த தவக் குறைவே எனச் சுட்டிக்காட்டினுர்.

திரு. சபாபதி அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், 'தோளோடு தோள் தட்டிப் போராடிய தொண்டர் மறைந்து விட்டார். அவரது சேவை உணர்ச்சியும் செயலார்வமும் எங்கள் மத்தியில் புத்துயிர் பெற்று விளங்குகின்றன. அவர் அண்மையில் அக்கரைப்பற்று தருமரெத்தினம் கரைப்பந்தாட்ட மைதானத்தில் நிகழ்த்திய உரையின் மூலம் இக்கிராமத்தில பல அரசியல்வாதிகளை உருவாக்கி விட்டார்' என்று கூறினுர்.

திரு. கே. பி. வடிவேல் அவர்கள் பேசும்போது, 'மறைந்தவர்களின் கல்லறைகளிலிருந்துதான் தியாகிகளும் வீரர்களும் தோன்றுகிருர்கள். மறைந்த தலைவரின் சிறந்த கொள்கைகளையும் தன்னலமற்ற சேவையையும் வாலிபர்கள் உணர்ந்து நாட்டுக்கு நற்பணி செய்ய முன்வர வேண்டும். இலங்கை மக்கள் ஒரு அரசியல்வாதியை இழந்து விட்டார்கள்' எனக் குறிப்பிட்டார்.

கட்சிச் செயலாளர் திரு. கே. கே. வேலுப்பிள்ளை அவர்கள்பேசுகையில் 'தமிழ் பேசும் மக்களுக்கு எதிர் காலத்தில் ஏற்படவிருக்கும் இன்னல்களை அடிக்கடி கூறி வந்த சிந்தனையாளர், சிறந்த வழக்கறிஞர் மறைந்து விட்டார். அவரைப் போல தொண்டு உள்ளமும் துடிக்கும் இதயமும் உள்ளவர்கள் மட்டுமே சரித்திரத்தில் இடம் பெறுகிருர்கள். பணி செய்து கிடப்பதே எனது குறிக்கோள் என்றிருந்த அவர் நாட்டு மக்களுக்குச் செய்தசேவை அளப்பரியது. அவர் விட்டுச் சென்ற பணியை அவரது ஸ்தானத்திற்கு வரும் பிரதிநிதி தொடர்ந்து செய்வாரென நம்புகிறேன்' என்று குறிப்பிட்டார். மற்றும் பலர் உரை நிகழ்த்திஞர்கள்.

—

## உடுப்பிட்டி தமிழ் மன்றம்

வள்ளுவர் ஜெயந்தி தினமாகிய 6-6-63 மாலை 4 மணிஅளவில் உடுப்பிட்டித் தொகுதி மாணவர்களால் இங்கு 'தமிழ் மன்றம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புது வருட நிர்வாகிகளாகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: செல்வன் எஸ்.டி. ராஜன், உப தலைவர்கள் மு. ஸ்ரீ சற்குருநாதன், எம். குலரத்தினம், பொதுக் காரியதரிசி: செல்வன் பொ குலபாலசிங்கம், தகவல், பத்திரிகைக் காரியதரிசி: செல்வன் ஜே. ஜெயக்குமார், நிதி, வானெலி காரியதரிசி: செல்வன் க. நீலகண்டன், இயல், இசைக் காரியதரிசி: செல்வன் கே. பரம்சோதி, நாடக காரியதரிசி: செல்வன் வே. தபேஸ்வரன், உப காரியதரிசிகள்: செல்வன்கள் இ. முத்துரத்திஞனந்தன், எஸ். சுரேந்திரன்.

இருபத்தைந்து பேரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. கூட்ட முடிவில், செப்டம்பரில் 'கலை விழா' வை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் இரவு 8 மணியளவில் தலைவரின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

—

## கட்டைக்காடு சென்மேரிஸ் இளைஞர் சங்கம்

கட்டைக்காடு சென்மேரிஸ் இளைஞர் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் திரு. ம. பிலிப்பு அவர்கள் தலைமையில் கட்டைக்காடு றே. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

தலைவர்: திரு. க. மரியாம்பிள்ளை, உப தலைவர்: அ. சவிரிமுத்து, செயலாளர்: கொ. வு. ஸ்ரனிஸ்லாஸ், உப செயலாளர்: செ. மரியதாஸ், பொருளாளர்: பி. மரியாம்பிள்ளை.

பத்துப் பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# ஊராட்சித் தேர்தலில்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபொழுது ஆங்கிலேயரின் வலையில் அகப்படாமல் தப்பியவர்களில் கொளின்ஸும் ஒருவர். எனவே அவரையும் இன்னும் மற்றத் தலைவர்கள் மூவரையும் எவ்வாருவது கைது செய்வதெனப் பொலீஸார் முடிவு செய்தனர். அயர் மன்றத்தின் கூட்டம் நடைபெறும் பொழுது மன்சன் இல்லத்தை இராணுவத்தினரோடு போய்ச் சுற்றி வளைத்து அதன்பின் தாம் விரும்பியவர்களைக் கைது செய்வது சுலபம் என எண்ணிய பொலீஸார் அதற்குத் தயார் செய்தனர். சின் பீன் அனுதாபியும் பொலீஸ் துப்பறியும் பகுதியில் பணிபுரிபவருமான நெட் புரோய் இந்தச் செய்தியைச் சின் பீன் தலைவர்களுக்கு அறிவிக்க எண்ணித் தொலைபேசியில் மன்சன் இல்லத்துடன் தொடர்பு கொண்டார். ஆங்கிலத்திலோ அயர் மொழியிலோ தொலைபேசியில் பேச விரும்பாதபுரோய், பிரெஞ்சு மொழியில் பேசக்கூடிய ஒருவரைத் தொலைபேசிக்கு அழைத்தார். டி வேலராவுக்கும் மைக்கேல் கொளின்ஸுக்கும் பிரெஞ்சு தெரியாததால் 'அந்தோக்ளொ' ஆசிரியர் பீஸ்லாய், புரோயுடன் தொலைபேசியில் பேசிஞர். அவர் செய்தியை மற்றவர்களுக்குத் தெரிவித்தார்.

மத்தியான உணவை முடித்துக் கொண்டு நான்கு தலைவர்களும் இராணுவத்தினர் வந்து சேருவதற்கு முன்னர் மன்சன் இல்லத்தை விட்டுச் சென்று மறைந்தனர். எனினும் செல்லும் பொழுது அவர்களைத் துப்பறியும் பொலீஸார் கண்டு விட்டனர்; தனியாக ஒன்றும் செய்ய முடியாத அவர்கள் செய்தியை ஆட்சியினருக்கு அறிவித்தனர். ஏமாற்றம் அடைந்த ஆட்சியினர் நால்வரும் தப்பிச்சென்ற பின் இராணுவத்தினரை மன்சன் இல்லத்திற்கு அனுப்பும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

பிற்பகலில் அயர் மன்றம் கூடியபோது கொலின்ஸும் மற்றும் மூவரும் சமூகமளிக்கவில்லை. ஆங்கில ஆட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பவர்களையும் ஒற்றுச் சொல்லும் அயர் இனத்துரோகிகளையும் சமூகத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தைப் பேராசிரியர் ஏமன் டி வேலரா முன்மொழியப் பேராசிரியர் ஜன் மக்னீல் வழிமொழிந்தார். பிரேரணை ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தனக்கு 'விளையாட்டு'க் காட்டும் ஆட்சியினருக்கும் இனத்துரோகிகளுக்கும் தானே 'விளையாட்டு'க் காட்ட முடிவு செய்தார் கொளின்ஸ். நடு நிசியில் தனியாகப் புறப்பட்டார். வழியில் நூனன் என்னும் இன்னுமொரு தொண்டரைச் சந்தித்தார். அவரையும் கூட்டிக்கொண்டு அரசாங்கத்தின் உளவுத் திணைக்களத்தை அடைந்தார்!

(வளரும்)

ஜூலை 4ம் திகதி வியாழன் முதல்!

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

[கொழும்பு] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு]

மொடர்ன் (பதுளை) மொடர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

புரட்சிகரமான வீரம்! புதுமையான நடிப்பு!
அற்புதமான ஆடல் பாடல் நிறைந்த
திரைச் சித்திரம்!

சி. எச். ஆனந்தன்-சி. எஸ். புஷ்பலதா
எம் ஆர். ராதா-ராஜ்ஸ்ரீ-எஸ். கலாவதி
டி. ஆர். நடராஜன்-ஆர். பக்கிரிசாமி
வி. கே. ராமசாமி-டி. பி. முத்துலக்ஷ்மி
மற்றும் பலர் நடிக்கும்

ஏ. வி. எம். பிக்சர்ஸ்

# செங்கமல தீவு

டைரக்ஷன்: எஸ். ராஜேந்திரன்
இசையமைப்பு: கே. வி. மகாதேவன்



கடைசி வாரம்!

## கிங்ஸ்லி

(கொழும்பு)

இன்றே பாருங்கள்

சிவாஜி
சரோஜாதேவியின்
சிறந்த—
நடிப்பை

# ஆலய மணி

படத்தில்

3வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

## சென்ட்ரல் ராணி ஜோதி

(மருதானை) (யாழ்ப்பாணம்) (திருகோணமலை)

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) லிபர்ட்டி (பதுளை) ஆனந்தா (கம்பளை) பிரீதி (ஹட்டன்)

ஆகிய திரைகளில்!

விசாலாட்சி பிலிம்சாரின்


# சுமைதாங்கி

(ஆயிரம் வாசல் இதயம்)

திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்
—ஸ்ரீதர்—

ஜெமினிகணேசன் (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) தேவிகா
முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி
முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி



## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருகோணமலை)
இம்பீரியல் (மட்டக்களப்பு) ரீகல் (நுவரெலியா) ரீகல் (கம்பளை)



ராஜசுலோசனா, எல். விஜயலட்சுமி,
சி. கே. சரஸ்வதி, மனோரமா,
ஜி. முத்துக்கிருஷ்ணன், வி. கே. ராமசாமி
நடித்த

# பொன்னித் திருநாள்

பாடல்கள்: தஞ்சாவூர் ராமையாதாஸ்—மருதகாசி
இசையமைப்பு: கே. வி. மகாதேவன்
பின்னணி பாடியவர்கள்:
சீர்காழி கோவிந்தராஜன்—ஸ்ரீநிவாஸ்—சுசிலா—ராகவன்
ஜமுனாராணி—ராதா ஜெயலக்ஷ்மி

விரைவில்!
செல்லமஹால் மற்றும் 5 திரைகளில்!
ஏ. நாகேஸ்வரராவ்—சௌகார் ஜானகி—அஞ்சலிதேவி
எம். ஆர். ராதா நடித்த



# தெய்வ மங்கை

எதிர்பாருங்கள்!
சிவாஜி கணேசன்—தேவிகா நடிக்கும்

## பலே பாண்டியா


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூன் மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.